# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-17 Issue-12 டிசம்பர்-2024 ஜமாதிலவ்வல்-ஜமாதிஸானி1446




என்றும் நம் நினைவில்
பாபரி மஸ்ஜித்

## சிரியாவில் நடப்பது என்ன?

## சம்பல் மஸ்ஜித்-ஐ தொடர்ந்து இன்னும் பல மஸ்ஜித்கள்!

## வி.டி.இராஜசேகரும் நாமும்...



## லெபனான்-ஹிஸ்புல்லாஹ் VS இஸ்ரேல் ஒப்பந்தம்

بسم الله الرحمن الرحيم

# வைகறை வெளிச்சம்

டிசம்பர்-2024 ■ ஜமாதிலவ்வல்-ஜமாதிஸானி 1446

■ தனிஇதழ் - ரூ. 40
■ ஆண்டுச் சந்தா - உள்நாடு - ரூ. 480
■ வெளிநாடு - ரூ. 5000

**வைகறை வெளிச்சம்**
சந்தா உறுப்பினராக பதிவு செய்யுங்கள்

VAIGARAI VELICHAM
62889509

Collect payments from any of these apps
G Pay UPI BHIM Paytm

மனிதர்களே!
நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்.

அல்குர்ஆன்-49:13.

## உள்ளே...!



**சிரியாவில் நடப்பது என்ன? பாகம்-1** 4



**சம்பல் மஸ்ஜித்-ஐ தொடர்ந்து இன்னும் பல மஸ்ஜித்கள்!** 21



**தலீத் போராளி வி.டி.இராஜசேகர் மரணம்** 30

சிரியாவில் நடப்பது என்ன? பாகம்-2 - 19
லெபனான்-ஹிஸ்புல்லாஹ் VS இஸ்ரேல் ஒப்பந்தம் - 27
பாபரி மஸ்ஜித் என்றும் நம் நினைவில்... - 36
பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - 43
ஃபாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு - 48
மகளிர் மன்றம் - 52
இந்தியாவில் முஸ்லிம்கள் - 57
சிலுவைப் போர் 2.0 - 60
மருத்துவம் - 63
தலையங்கம் - 65

All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts only



# சிரியாவில் நடப்பது என்ன?

**அன்பார்ந்த வாசகர்களே!**

**இந்த அட்டைப் படக் கட்டுரை இரண்டு பாகங்களைக் கொண்டது. பாகம் ஒன்றில் சிரியாவில் அன்று நடந்த கபளீகரங்கள், அதற்குப் பின்னால் உள்ள சதிகள் இவை இடம் பெறுகின்றன. இது மொத்தப் பிரச்சனையயும் புரிந்துகொள்ள உதவும். இது ஏற்கெனவே நாம் வெளியிட்ட விரிவான ஆய்வு. இரண்டாம் பாகத்தில் இன்றைய நிகழ்வுகள், அவற்றின் சதிகள் இடம் பெற்றுள்ளன.**

பெண்களும் குழந்தைகளும் கொலை செய்யப்படுகின்றார்கள். அகதிகளாக முஸ்லிம்கள் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்கின்றார்கள். அங்கே அதிகளாக வரும் முஸ்லிம்களை கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றிட கட்டாயப்படுத்துகின்றார்கள். பெண்களை கேவலமாகப் பயன்படுத்துகின்றார்கள், ஒரு நேர சோற்றுக்கு இளம் பெண்களை, குமரிகளை விற்பனை செய்கின்றார்கள்.

இந்த முஸ்லிம்கள் அகதிகளாக சென்ற நாடுகளில் இவர்கள் ஆபத்தானவர்கள் என பார்க்கின்றார்கள், பிரச்சாரம் செய்கின்றார்கள். அவர்களை அகதிகள் முகாம்களிலேயே கொலை செய்வதே தவறில்லை.அது சிறந்த தேசிய சேவை எனப் பிரச்சாரங்கள் நடக்கின்றன.

"They are coming to eat your food and they will take away your jobs"

அதாவது, அவர்கள் உங்களுக்காக இருக்கும் உணவை உண்ண வருகின்றார்கள். அவர்கள் உங்கள் வேலைகளைப் பிடுங்கிக் கொள் வார்கள்" என்ற பிரச்சாரம் ஐரோப்பா முழுவதும் நடத்தப் படுகின்றது.

இந்த முழக்கத்தை மையமாகக்கொண்டு அரசியல் கட்சிகள் தொடங்கப்படுகின்றன. ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளில் இந்த முழக்கங்களை முன்வைத்த கட்சிக்கோ எதிர்க்கட்சிகளாக உள்ளன.

இத்தனைக்கும் காரணம் "வேறு யாருமல்ல முஸ்லிம்கள்தாம். அவர்களாக ஈராக், சிரியா ஆகிய நாடுகளில் தொடங்கிய உள்நாட்டுப் போர்தான் என்றொரு பிரச்சாரம் அழுத்தமாகச் செய்யப்பட்டு வருகின்றது."

அதிலும் குறிப்பாக சியாக்கள் என்றொரு பிரிவுக்கும், சன்னி முஸ்லிம்கள் என்றொரு பிரிவுக்கும் ஏற்பட்ட பிளவாம். சண்டையாம் என்று பகைக்கும், போருக்கும் பக்குவமாக விளக்கங்கள் சொல்லப்படுகின்றன. இடை விடாமல் செய்திகள், காட்சி ஊடகங்களில் காண்பவர்கள் கண்ணீர் சிந்திடும் அளவில் காட்சிகள் இவை காட்டப்படுகின்றன.

விடா மழையான இந்தச் செய்திகள் கொட்டும்போது முஸ்லிம்கள் தங்களையே வெறுக்கின்றனர். நாமே சரியில்லையே எப்படி அடுத்தவர்களை இஸ்லாத்திற்கு அழைப்பதும் என அங்காலாயிக்கின்றனர்.



vaigarai velicham official

சண்டையிடுவதில் யாரை முஸ்லிம்கள் அல்ல எனச் சொல்லிடலாம், அதற்காக என்னென்ன காரணங்களை இட்டுக்கட்டலாம் என்ற ஆராய்ச்சிகள் வேகமாகவும் விறுவிறுப்பாகவும், நடக்கின்றன.

மொத்தத்தில் முஸ்லிம் உலகையும் முஸ்லிம்களையும் குழப்புவதில் வெற்றிகண்டு விட்டனர் இஸ்லாத்தின் எதிரிகள்.

இப்படி முஸ்லிம் உலகைக் குழப்பிவிட்டதால், அவர்கள், இஸ்லாத்தின் எதிரிகள் தாங்கள் போட்ட நீண்ட நாள் திட்டங்களில் பெரிதாக வெற்றி பெற்றுவிட்டனர்.

இந்தச் சந்தடி சாக்கில் இன்னொன்றும் அவர்களுக்கு அதிகச் சிரமமில்லாமல் கிடைத்து விட்டது. அது அவர்கள் பல ஆண்டுகளாக முஸ்லிம் உலகில் செய்த அழிவுகள், அட்டூழியங்கள், அழித்த இஸ்லாமிய அடையாளங்கள், கலாச்சாரங்கள், பிம்பங்கள் கொன்று குவித்த மக்கள், வேட்டையாடிய மழலைகள், சுரண்டிய இயற்கை வளங்கள், கொள்ளை கொண்ட கனிமங்கள் இவற்றையெல்லாம் கூட முஸ்லிம்கள் மறந்து விட்டனர். அவற்றிற்கும் சேர்த்து நாம்தான் காரணமோ என மயங்கவும், விரக்தியடையவும் தொடங்கி விட்டனர்.

இத்தனையையும் செய்தவர்கள் இஸ்லாத்தின் எதிரிகள், எகத்தாளமாய் அறிக்கைகள் விட்டுக் கொண்டிருக்கின்றார்கள். நாம் இஸ்லாத்தின் எதிரிகளைப் பற்றியும் அவர்களின் சதித் திட்டங்களைப் பற்றியும் எள்ளவும் சிந்திப்பதில்லை. ஏன் அந்தத் திசையில் ஏறெடுத்துப் பார்ப்பது கூட இல்லை.

சிரியாவில் இன்று நடப்பவை எல்லாமே 2010/2011 ஆம் ஆண்டுகளில் அரபு நாடுகளில் ஏற்பட்ட அரசு வசந்தத்திலிருந்து தான் தொடக்கம் என ஓரளவு வரலாற்றை எட்டிப் பார்ப்பவர்கள் கூட ஒரு கனம் நின்று அந்த அரபு வசந்தத்தில், முஸ்லிம்கள் கிளர்ந்தெழுந்தார்களே ஆண்டாண்டு காலமாக அதிகார பீடங்களில் இருந்தவர்களுக்கு எதிராக அந்த எழுச்சி என்ன ஆயிற்று? என்று கூட ஆலோசிப்பதில்லை. அதற்கான நேரத்தை நமது ஊடங்கங்கள் தருவதில்லை. சதா சர்வகாலமும் நமது கவனத்தை வேறு பக்கமே வைத்துக் கொண்டிருக்கின்றன. நமது சிந்தனையை நம்மைப் பற்றியத் தாழ்வு மனப்பான்மையிலேயே மூழ்கடித்து விடுகின்றன.

அந்த அரபு எழுச்சியில் மக்கள் பெருந்திரளாக ஒன்று திரண்டார்கள். இஃது துனீசியா நாட்டில் டிசம்பர் 18, 2010-ல் தொடங்குகிறது - பின்னர் எகிப்திற்கு வந்தது. துனீசியாவில் கொடுங்கோலன் ஜெய்னப் அலீ ஆப்தீன் என்பவரை பதவியிலிருந்து தூக்கி வீசியவுடன், அமெரிக்காவும் இதர நாடுகளும் துனீசியாவின் நித்திய நடப்புகளில் தலையிட்டன. இஸ்லாமிய ஆட்சியைக்கொண்டு வந்திட வேண்டும் என விரும்பி ராஷீத் கன்னவ்சியை ஆட்சியில் அமர விடாமல் பார்த்துக் கொண்டார்கள்.



இஸ்லாமிய ஆட்சியைக் கொண்டு வந்து, இஸ்லாமிய பொருளாதார முறையை நிலை நிறுத்திட வேண்டும். ஊழலையும் ஆட்சியாளர் களின் ஊதாரித்தனத்தையும் ஒழித்துவிட்டு, சுரண்டல், வட்டி ஆகியவற்றை குழிதோண்டி புதைத்துவிட்டு பொருளாதார வளர்ச்சியையும், இஸ்லாமிய ஒழுக்க மாண்புகளையும் நிலை நாட்டிட விழைந்த ராஷீத் அல் கன்னவ்சியை பதவியில் அமர்ந்திட விடாமல் பார்த்துக் கொண்டார்கள்.

ராஷீத் கன்னவ்சி அவர்களும் ஏற்பட அரபு எழுச்சியை எதிரிகள் வீழ்த்தி மீண்டும் பரம்பரை பண்ணை ஆட்சியைக் கொண்டு வந்திடாமல் தடுத்தால்போதும் என்ற நிலைக்கு வந்து விட்டார். ஆக அங்கே இஸ்லாமிய ஆட்சியைத் தடுத்துவிட்டார்கள்.

எகிப்தில் அரபு எழுச்சியைத் தொடர்ந்து நடந்த வாக்களிப்பில் மகத்தான வெற்றிகளைக் குவித்த இஃவானுல் முஸ்லிமூன் இயக்கத்தைத் சார்ந்தவர்கள், சிறையில்! அமெரிக்காவின் சூழ்ச்சியை அப்படியே செயல்படுத்திடும் கொடுங்கோலனின் ஒற்றைக் குடும்ப ஆட்சியை அங்கே கொலுவேற்றி வைத்திருக்கின்றார்கள் இஸ்லாத்தின் எதிரிகள்.

எகிப்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சிறையில் மட்டுந்தான் அடைக்கப்பட்டார்கள் என்றில்லை. அவர் களில் பலரது சிரம் துண்டிக்கப்பட்டுவிட்டது. இன்னும் பலரை தூக்கில் போடும் நடவடிக் கைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

ஆக. அரபு எழுச்சி இவர்களின் வார்த்தை களில் அரபு வசந்தம் மக்கள் விரும்பிய இஸ் லாத்தை ஆட்சியில் இருத்திட பயன்படவில்லை. இஸ்லாத்திற்காக களம் கண்டவர்களை கழுவேற்றிடவும். அப்பாவி முஸ்லிம்களை கொன்று குவிக்கவுமே பயன்பட்டது. அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் கைப்பாவைகளே ஆட்சியில் இருக்கின்றனர்.

இந்த அரபு எழுச்சிக்காக அரபுலகத்தில் கூடிய சாதாரண சாமானிய மக்களைக் கொன்று குவித்தவர்கள், பிணங்களைக் கொண்டு குற்றுகளை எழுப்பியவர்கள் முஸ்லிம் பெயர் தாங்கிகள். அப்போதெல்லாம் அங்கே சியாக்களையும் - சன்னிகளையும் நாம் தேட வில்லை. ஏன் அங்கே முஸ்லிம் பிணங்களைக் குவிக்க எல்லாவிதத்திலேயும் உறுதுணையாக இருந்த இஸ்லாத்தின் எதிரிகளை, அமெரிக்க ஐரோப்பிய நாடுகளை, நாம் கண்டுகொள்ள வில்லை. அவர்களுக்கெதிராகக் கனைத்துக் கூட காட்டிடவில்லை.

அரபு எழுச்சியை வழிமறித்து. அதையும் முஸ்லிம்களைக் கொன்று குவிக்கப் பயன்படுத் திய பின் இவர்கள் தங்கள் கொலைப்படலங்களை சிரியாவில் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நமது சகோதரிகளையும். குழந்தைகளையும் நம்மவர்களே இவ்வளவுக் கோரமாகக் கொலை செய்வார்களா? என்பதை நாம் எண்ணிப் பார்க்கத் தவறி விடுகின்றோம்.

### இந்தியாவில் நடந்தது என்ன?

இந்தியாவிலும் நமது கண்களுக்கு முன் னாலேயே நாம் இதைப்பார்க்க வில்லையா? மே-18, 2007 ஹைதராபாத் மக்கா பள்ளி வாசலில் வெள்ளிக்கிழமை-இல் ஜும்ஆ தொழுகையின்போது குண்டு வைத்தார்கள். முஸ்லிம்களைப் பிணமாகக் குவித்தார்க்ள. அங்கே தொழுகை நடத்துவதற்காக நியமிக்கப் பட்டிருந்த எட்டு இமாம்களில் ஒருவரின் மகனையும் சேர்த்து 96 முஸ்லிம்களைச் சிறை பிடித்தார்கள்.

நாம் எடுத்த எடுப்பிலேயே காட்சி ஊடகங்கள் காட்டிய காட்சிகளையும் அரசின் தரப்பில் கூறப்பட்ட, குற்றஞ்சாட்டப்பட்ட, இந்தியன் முஜாஹித் என்ற அமைப்பையும் நம்பினோம்.

10 ஆண்டுகளுக்குப்பின் இந்தியாவை இந்து ராஷ்டிரமாக ஆக்கிடத் துணிந்தோரின் ஈனச் செயல் அது என்பது தெரியவந்தது. அசிமா னந்தா என்ற சுவாமிஜி தானே முன் வந்து ஒத்துக்கொண்டார். ஆனால் நாம் நமது சமுதாய அரங்குகளிலும், தனிப்பட்ட விவாதங் களிலும் என்ன பேசிக் கொண்டோம். நமக் குள்ளே தீவிரவாதிகள் இருக்கின்றார்கள்.

சில முஸ்லிம்கள், திருக்குர்ஆனையே தவ றாகப் புரிந்துகொண்டிருக்கின்றார்கள். நாம் சரியில்லை. நம்மவர்களில் அறை குறைகள், ஆர்வக் கோளாறுகள் இருக்கின்றார்கள்


vaigarai velicham official



என்றெல்லாம் தப்புக் கணக்குப் போட்டோம்.

இங்கே சன்னிப்பிரிவு - ஷியா பிரிவு எனப்பேசி இருப்போம். ஆனால் ஈராக்-ஐ போல் சிரியாவைப்போல் இங்கே ஷியாக்களும் சன்னிகளும் விரவி வாழ்ந்திடவில்லை.

ஹைதராபாத் மக்கா மஸ்ஜித்-இல் என்ன நடந்ததோ, அதுவே அஜ்மீர் தர்காவிலும், அக்.*11, 2008* அன்று நோன்பு திறக்கும் நேரத் தில் குண்டுகள் வெடித்தன. நமக்கு ஊடகங்கள், செய்திகள், காட்சிகள், விவாதங்கள் இவற்றில் என்ன சொல்லித் தந்தன. சலபி ஜிஹாதிகள் என்ற தர்கா வழிப்பாட்டை வெறுக்கும் முஸ்லிம்கள்தான் இதனைச் செய்தார்கள் என் றார்கள். பிப்ரவரி *11, 2007* அன்று ஹம்ஜோத்தா எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப்புகளிலும் இதுவே நடந்தது.

இங்கெல்லாம் குண்டு வைத்தவர்கள் சங்கப் பரிவாரத்தினர், செத்துப் பிணமானது முஸ்லிம்கள். பழியைச் சுமந்ததும் முஸ்லிம்கள். முஸ்லிம்களாகிய நாமும் நம்மில் சிலர் இப்படி சிந்திக்கின்றார்கள் என நொந்து கொண்டோம்.

அதேபோல் தான் கோவை *1998* குண்டு வெடிப்பிலும், தெஹல்காவின் ஆய்வும், சட்ட மன்ற உறுப்பினர் ஏ.வி.நாசர் அவர்களின் "கோவை கலவரத்தில் எனது சாட்சியங்கள்" என்ற நூலும் வெளிவரும் வரை நாமும் கோவை குண்டு வெடிப்புகளின் மூளைகளைத் தெரிந்திட இயலவில்லை.

இன்று நாட்டை உலுக்கிய *16* குண்டு வெடிப்புகள் - சங்கப்பரிவாரத்தால், நடத்தப் பட்டவை இலட்சியம் இந்து ராஷ்ட்ரா "அகண்டபாரதம்" என்பவையே! இதை முன்னாள் மராட்டிய மாநில காவல்துறை அதிகாரி ஹேமந்த் கர்கரே கண்டுபிடித்தார், அதனால் உயிரை இழந்தார். எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் எழுதிய அதனை நூலாகத் தந்தார்கள்.

இவையெல்லாம் ஓர் உண்மையை உரக்க முழங்கும். அது, இஸ்லாத்திற்கெதிரான - முஸ்லிம்களுக்கெதிரான தொடர் சதிகள் நாள் தவறாமல் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இந்த உண்மையின் பின்னணியில் நாம் சர்வதேச நிகழ்வுகளையும் பார்க்கப் படித்துக் கொள்ள வேண்டும். எதிரிகள் ஓய்வு ஒழிச்ச லின்றி நமக்கெதிராக சதிகளை நிறைவேற்றிக் கொண்டே இருக்கின்றார்கள். நமக்கெதிராக முஸ்லிம்களுக்கெதிராக இந்தப் பின்னணியைப் புரிந்துகொள்ளாவிட்டால் நாம் இந்தப் பிரச்ச னைகளைப் புரிந்துகொள்ளவே மாட்டோம்.

"வைகறை" வாசகர்களைப் பொறுத்தவரை இந்தச் சதிகளை அடுக்கடுக்கான ஆதாரங்க ளோடு இந்த பின்னணிகளை தொடர்ந்து வெளியிட்டு வருகின்றோம்.

இதனை நாம் இன்று நேற்றல்ல!, நாம் நிறுவி நடத்திவந்த "செய்திமடல்", "விடியல் வெள்ளி" ஆகியவற்றிலும் நிரம்பவே விளக்கி இருக்கின்றோம்.

ஆனால் இப்போது சிரியாவின் கவுட்ட "Ghouta" பகுதியை ரஷ்யா நடத்திய தாக்குதல் உலக மக்களின் கவனத்தை ஒன்றாக இந்தப் பக்கம் திருப்பிவிட்டது.

இந்தப் பின்னணியில் சிரியாவில் நடப்பதை மையப் படுத்தி சர்வதேச சதிகளை இங்கே பட்டியிலிடுகின் றோம். - அதற்குமுன் ஆறுத லான செய்தி ஒன்றைஉள்ளங் களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகின்றோம்.





ஆறுதல்,,,

சோதனைகளுக்கிடையேயும் ஓர் ஆறுதல், தாருல் இஸ்லாம், நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம், வைகறை வாசகர் வட்டம், இவற்றின் பிரதான பணி, மக்களை இஸ்லாத்தின் பக்கம் அழைப்பதாகும்.

இந்த அழைப்பில் பெரும்பாலும் பொது வுடமைவாதிகளையே நாம் எதிர்கொள்கின் றோம். இந்தப் பொதுவுடமைவாதிகள் நமது பணியை திசை திருப்பிட, சிரியாவிலும், இதரப் பகுதியிலும் நடப்பனவற்றை சுட்டிக் காட்டி இந்த மார்க்கத்தையா நாங்கள் ஏற்றிட வேண்டும் என்பார்கள்

ஆனால் அவர்களுக்கு அந்தப் பின்னணி யைச் சொன்னால் புரிந்துகொள்கின்றார்கள். உண்மையை உணர்ந்து கொள்கின்றார்கள். இப்போது அவர்களும் தங்களது பேச்சுகளிலும் எழுத்துக்களிலும் இந்தச் சதியை அம்பலப் படுத்தி வருகின்றார்கள்.

இதேபோல நமது இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கின்ற பெரும் பணியில் நாத்தி கர்களும் வருகின்றார்கள். ஆனால் அவர்கள் இந்தப் பின்னணிகளை நன்றாகப் புரிந்தவர் களாக இருக்கின்றார்கள். எடுத்துக்காட்டாக "விடுதலை" இதழில் இடம்பெற்ற இரண்டு கட்டுரைகளைக் குறிப்பிடலாம். இந்த இரண்டு கட்டுரைகளுக்கும், தலைப்பு "இந்துந்துவாக்களின் அகண்ட பாரதம் போல் இஸ்ரேலின் அகண்ட இஸ்ரேல் கனவிற்காக பலியாகும் சிரியா" *(விடுதலை 9-3-2018 மற்றும் 12-3-2018)*

இன்னொரு நிகழ்வை (திருப்பூரில் நாங்கள் நடத்திய விழிப்புணர்வு கருத்தரங்கத்தில் நடந்ததை) நமது திருப்பூர் நிருபர் சொல்லி இருக்கின்றார். இந்த இதழில் இடம் பெற் றிருக்கும் செய்திக் கட்டுரையைப் படிக்கவும்.

இதில் மிகப்பெரும் வேதனை என்ன வென்றால், நாத்திகர்களுக்கும், பொதுவுடமை வாதிகளுக்கும் தெரிந்த அளவுக்குக்கூட நம்ம வர்களுக்கு தெரிந்திடவில்லை என்பதுதான்,

அவர்களெல்லாம் முஸ்லிம் நாடுகளில் நடந்து கொண்டிருப்பவை, அமெரிக்காகவும், ஐரோப்பாவும் இஸ்ரேலும் இணைந்து நிறைவேற்றும் சதி எனக் குறிப்பிடும்போது, நம்மவர்கள் மட்டும், அது ஷியா. சன்னி சதி என மார்பில் போட்டுக் கொள்கின்றனர்.

**வரலாறு - கி.பி. 634 முதல் 2018 வரை**

இன்று நடப்பவற்றைப் புரிந்துகொள்ள நாம் வரலாற்றில் சற்றுப் பின்னோக்கிப் போக வேண்டும்.

கி.பி. *634* முதல் *638* வரை உலகை புரட்டிப்போடும் அந்த நிகழ்வுகள் நடந்தன.

இந்த நிகழ்வுகளின் தாக்கம் இன்றளவும் குறைந்தபாடில்லை. உண்மையைச் சொன்னால்



vaigarai velicham official

அவற்றின் வேகமும் விறுவிறுப்பும் கூடியே இருக்கின்றது.

ரோமர்கள், பெருமானார் (ஸல்) அவர்களின் காலந்தொட்டே இஸ்லாத்திற்கெதிராக திட்டங்களைத் தீட்டிக் கொண்டே இருந் தார்கள். மன்னன் கிராக்கிளியஸ் என்பவனை ரோம நாட்டுப் பாதிரிகள் தூண்டி விட்டுக் கொண்டே இருந்தனர். இஸ்லாம் வேகமாகப் பரவிக் கொண்டே இருக்கின்றது. அதனை தடுத்து நிறுத்தியாக வேண்டும். அது ரோம நாட்டு எல்லைகளை தீண்டுவதற்கு முன்னால், எனச் சொல்லிக்கொண்டே இருந்தார்கள். வெறுமனே சொல்லிக்கொண்டிருக்கவில்லை. மாறாக, பெரும்படையையும் திரட்டிக் கொண்டிருந்தார்கள்.

ரோமபேரரசால் பெரும்படையொன்று திரட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்ற பெரும் செய்தி ஷாம் (சிரியாவின் அன்றைய பெயர்) தேசத்திலிருந்து இஸ்லாமிய ஆட்சியின் மார்பிடம் மதினாவுக்கு எண்ணெய் கொண்டு வந்து வியாபாரம் செய்து கொண்டிருந்த வியா பாரிகள் மூலம் வந்து சேர்ந்தது. (Source : The Sealed Nactar)

ஒரு கட்டத்தில் ரோமர்களை 40,000 பெரும் படையை ஒன்று திரட்டிவிட்டதாகவும், இஃதல்லாமல் பல, குலங்களும், கோத்திரங் களும் அவர்களுக்கு உதவி செய்திட முன் வந்திருப்பதாகவும் செய்திகள் பெருமானார் (ஸல்) அவர்களை வந்து சேர்ந்துகெண்டே இருந்தன.

இந்தச் செய்திகள் மதீனாவின் வீதிகளிலும் பேசப்பட்டது. எந்த அளவுக்கு என்றால் யாராவது மதீனாவில் விரைந்து வருவதாக இருந்தால் ரோம நாட்டுப் படைகள் வந்து விட்டனவைா என மதீனாவாசிகள் எண்ணிடும் அளவுக்கு இந்தச் செய்தி பேசப்பட்டது.

இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள், இதுபோன்ற எச்சரிக்கைகளை கண்டுகொள்ளா மலிருப்பவர்கள் அல்ல. அவர்கள் முஸ்லிம்களை ஒன்று திரட்டி ரோமர் படைகளை "தபூக்' என்ற எல்லைப் பகுதியில் சந்தித்து விடுவது என்று முடிவு செய்தார்கள். ரோமர்களின் படைகளை இஸ்லாமிய எல்லைகளுக்கு உள்ளே விட்டுவிட்டு அதன்பின் பொறுத்தி ருப்பது பலனளிக்காது என முடிவு செய் தார்கள். அத்தனை சிரமங்களுக்கிடையேயும் 30,000 பேரை திரட்டி தபூக் என்ற ரோமப் பேரரசின் எல்லைக்கு வந்தார்கள்.

ஆனால் ஹிராக்கிளியஸ் என்ற ரோமப் படை தளபதிக்கு தைரியம் வரவில்லை. முஸ்லிம்களின் படைகளைச் சந்திக்க. அவன் போருக்குப் புறப்படவே இல்லை. ஆனால் இஸ்லாத்திற்கெதிராகப் படைகளைத் திரட்டு வதை அவன் நிறுத்தவே இல்லை.

இந்நிலையில்தான் கி.பி. 634-இல் கலீபா உமர் (ரழி)-இன் ஆட்சியின் போது கிராக்கி ளியஸ் கிருத்தவ பாதரிகளும் முஸ்லிம்களுக் கெதிராக ஒரு பெரும் போருக்குத் தயாராகிக் கொண்டிருந்தார்கள் என்ற செய்தி வந்தது.

கலீபா உமர் (ரழி) அவர்கள் பெரும் படையைத் திரட்டி அனுப்பி இருந்தார்கள். இரண்டு மாதங்களாக 'யர்முக் ஆற்றங்கரையில் முஸ்லிம் படை வீரர்கள் முகாமிட்டிருந்தார்கள். ரோமர்கள் மலைமேலிருந்து கீழே இறங்கி வருவார்கள், தாக்கிடலாம் எனக் காத்திருந்தனர் முஸ்லிம்கள்.

ஆனால் கிருத்தவர்கள் முஸ்லிம்கள் ஆற்றைக்கடந்து வந்து மலையின் மேல் ஏறு வார்கள் தாக்குவதற்கு எளிதாக இருக்கும் எனக் கருதி காத்து நின்றார்கள் காத்துக்கிடந்ததில் இரண்டு மாதங்கள் கடந்துவிட்டன. இறுதியில் கிறிஸ்தவ பாதிரியார்களே பொறுமையை இழந்தார்கள். ஹிராக்கிளியஸ் (ரோம படைகளை வழி நடத்திய மாமன்னன்)-ஐ ஏவி தாக்குதலை தொடங்கினார்கள். ஆகஸ்ட் 30/634-இல், வாய்ப்பை வாகாகப் பயன்படுத் தினார்கள் முஸ்லிம்கள், ஆறே நாள் போரில் 40,000 முஸ்லிம்கள் படையைக் கொண்டு 2,40,000 இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் ரோமப் படையை வென்றார்கள். Short History of Sanacers.

வெற்றி முகட்டில் நின்ற முஸ்லிம்கள் மிகக்குறுகிய காலஅளவில் சிரியாவை அன்றைய "அஷ்ஷாம்" பகுதியை வென்றார்கள். சிரியாவின் ஒரு பகுதியாக இருந்த பாலஸ்தீனும் முஸ்லிம்களின் கைகளில் வந்தது. அடுத்து

முஸ்லிம் படைகள் ஜெருசலத்தின் பக்கம் திரும்புவார்கள் என்பதை நன்றாக அறிந்த ஜெருசலத்தின் தலைமைப் பாதிரியார் சோஃப் ரோஜியுஸ், ஜெருசலத்தை முஸ்லிம்களிடம் ஒப்படைக்கத் தயாரானார். அதற்கான நிபந் தனைகளை விதித்தார். முதன்முதலில் ஜெரு சலம் என்பது எங்களுக்கு மிகவும் புனிதமானது. ஆகவே நாங்கள் ஜெருசலத்தின் திறவுகோலை உங்கள் அதாவது முஸ்லிம்களின் ஆட்சித் தலைவராகிய கலீபா உமர் (ரழி) அவர்களைத் தவிர வேறு யாரிடமும் ஒப்படைக்க மாட்டோம்.



அடுத்து யூதர்களை இந்தப் பகுதியில் வாழ்ந்திட அனுமதிக்கக் கூடாது. இந்தச் செய்தியை அறிந்ததும் கலீபா உமர் (ரழி) அவர்கள் தலைமை பாதிரியாரின் உணர்வு களைப் புரிந்துகொண்டு தானே நேரில் வந்து ஜெருசலத்தின் சாவியைப் பெற்றுக் கொள்வ தாக ஒப்புக் கொண்டார்கள்.

வரலாற்றில் வரை இட்டுக்காட்டிட வேண்டிய நிகழ்வு ஒன்று அங்கே நடந்தது.

இஸ்லாமிய உலகின் தலைவரும், கிறிஸ்தவ உலகின் தலைவரும் (பாதிரியும் Chief Patirarch) ஒன்றாய் அந்த ஜெருசலத்திற்குள் நுழைந் தார்கள். (கிபி : story of Saracens, Pages 39, 40)

அதன்பின் அங்கே நடந்த நிகழ்வுகள் ஒவ்வொற்றையும் வரலாற்றில் பதிய வேண்டும். ஏற்கனவே நான் பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதி களான வரலாறு, பைத்துல் முகத்திஸ் ஆகிய நூல்களில், வைகறையில் இடம்பெற்ற கட்டுரை களிலும் விரித்துரைத்திருக்கிறேன். நான் எழுதிய பைத்துல் முகத்திஸ் என்ற நூலில் விரிவாகச்சொல்லி இருப்பதால் இங்கே விட்டு விடுகின்றேன். ஒரே ஒரு நிகழ்வை மட்டும் தருகின்றேன். அது ஜெருசலத்தில் வாழ்ந்த அத்தனை சமூகங்களும் சமூகமாக வாழ்வதற்கு ஏற்பாடுகளைச் செய்தார்கள் கலீபா உமர் (ரழி) அவர்கள். கிறிஸ்தவர்களுக்கும் ஏனையோருக்கும் ஒரு சிறிய வரியை விதித்தார்கள். யூதர்கள் அங்கே கிறிஸ்தவர்களால் ஒடுக்கப்பட்டுக் கிடந்தார் கள். அவர்கள் அந்த வரியி லிருந்து தங்களை விடுவித் திட வேண்டும், எங்கள் ஏழ்மையையும், வறுமை யையும் கருத்தில் கொண்டு என மன்றாடினார்கள். அதனால் அவர்களுக்கு (Samaritanjews) அந்த வரியிலிருந்து விடுவிப்பு வழங்கப்பட்டது. (A Short History of Saracens)

இந்த யூதர்கள்தாம் இன்று முஸ்லிம்களுக்கெதி ராக அத்தனை அநியாயங் களையும் கட்டவிழ்த்து விட்டுக்கொண்டிருக்கின்றார்கள். ஜெருசலத்தை தலைமையாகக் கொண்டு யூத நாடு ஒன்றை அமைப்போம் என மார்தட்டிக் கொண்டிருக்கின்றார்கள். என்னே நன்றி கெட்டத்தனம்!

அன்று முஸ்லிம்களுக்கெதிராக படை நடத்திய கிராக்கியஸ் மன்னன் சிரியாவை விட்டு வெளியேறும்போது இப்படித்தன் ஆதங்கத்தைத் தெரிவித்தான்.

Farewell O Syria and whatan Excellent country this is for the enemey. (History of the Arabs : Philp. K.Hitti.

"சிரியாவை விடைபெறுகின்றேன். எதிரிகளிடம் எப்படிப்பட்டதொரு நாட்டை விட்டுச் செல்கின்றேன்.


vaigarai velicham official

சிலர் வரலாற்று ஆசிரியர்கள், இப்படிச் சொல்லுகின்றார்கள். சிரியா என்ற வளம் கொழிக்கும் பூமியை உங்களிடம் விட்டுச் செல் கிறேன். எங்களவர்கள் மீண்டும் வருவார்கள் (HR.P. Dickson the Arab of the Desert. Ldn அன்று அவன் சொன்னது வரலாற்றின் பிந்தைய நாட் களில் இப்படி நடந்தது. ஆமாம் வந்தார்கள்!

**சிலுவைப்போர்கள்!**

வரலாற்றை வரைகின்ற வல்லுநர்கள் ஒரு செய்தியை சாதாரணமாகச் சொல்லிவிட்டுப் போய்விடுகின்றார்கள். அது மன்னர் ஹிராக்கிளியஸ்-ஐ முஸ்லிம்களுக்கு எதிராக படை திரட்ட வைத்தது பாதிரிகள்தாம்.

ஜெருசலத்தை முஸ்லிம்களிடம் ஒப்படைத் ததும் கிறிஸ்தவ உலகின் தலைமைப் பாதிரி சோஃப்புரோஜியுஸ் அவர்கள்தாம். கி.பி.633-இல் 640-க்குள் மொத்த சிரியாவும் (அஷ்ஷாம்) முஸ்லிம்களின் ஆட்சியின் கீழ் வந்தது.

வரலாற்றில் பிற்றைய நாட்களில் அதாவது 1095-ஆம் ஆண்டில் சிலுவைப் போர்கள் என வழங்கப்பெற்ற போர்களைத் தொடர்ந்து 151 வருடங்கள் நடத்தியதும், போப் அர்பன்-2 என்ற பாதிரிதான் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

நவீன சிலுவைப்போர் என ஜார்ஜ்புஷ் 2001 செப்டம்பர் 13-இல் அறிவித்தார். ஆப்கானிஸ் தானை ஆக்கிரமித்தார். அந்தப் போரில் பல நூறு அமெரிக்கப் படைகள் தாலிபான்களிடம் சிக்கின. அந்தப் படையைச் சார்ந்தவர்கள் சொன்னது

எங்களை அனுப்பியது (அமெரிக்க) அரசாங்கமல்ல, மாறாக எங்கள் தேவாலயங் கள்தாம். (விரிவான தகவல்களுக்கு படிக்கவும், தாலிபானின் பிடியில் மற்றும் Front Line February 25. 2005)

சிலுவைப் போர்களை 1095 முதல் 1247 வரை தொடர்ந்து நடத்தியவர்கள் முடிவில் முஸ்லிம்களிடம் பெற்றது பெருந்தோல்வியே! இஸ்லாம் வெற்றிபெற்ற மார்க்கமாய் உலகில் வலம் வந்தது.

இதனைத் தொடர்ந்து மக்கோலிய தார்தாரி கள் தாக்குதல், சிலுவைப்போரின் இஸ்லாத்தின் எதிரிகளை வீழ்த்திட ஒரு வீரர் சலாஹூத்தின் அய்யூபி, மக்கோலியர்களின் முரட்டுத் தாக்கு தலைத் தடுத்திடவும் திருப்பித் தாக்கிடவும் ஒரு சுல்தான் செய்ஃப்புதீன் என முஸ்லிம் உலகை சுற்றிப் பகைவந்த நாட்களில் வெற்றி தோள் கொண்ட முடிந்தது.

மலர்ந்தது மீண்டும் கிலாபத், உதுமானியப் பேரரசாய், உலகை இஸ்லாம் வெற்றி கொண்டது, வழி நடத்தியது.

ஆனால் மீண்டும் வந்தார்கள், அன்றைய சிலுவைப்போர் வாரிசுகளின் வீரர்கள், 1917-களில் அதே அரபுலகினுள். முதலாம் உலகப் போரின் சிரியாவின் தலைநகரம் டெமாஸ்கஸ்-இன் உள்புகுந்தார்கள். சலாஹூத்தின் அய்யூ பின் கல்லரைமேல் கால்களை வைத்தார்கள். Look Salahudeen we are back and the crusade Erob here என்றார்கள்.

"சலாஹூத்தின் இங்கே பார், நாங்கள் மீண்டும் வந்துவிட்டோம், சிலுவைப் போர்கள் இங்கேதான் முடிகின்றன."

ஆக சலாஹூத்தின் இருந்திருந்தால் அன்றும் தோல்வியைத்தான் சந்தித்திருப்பார்கள்.

அதாவது 151 வருடங்கள் நடந்து முடிந்து சிலுவைப் போர்களை, 9 நூற்றாண்டுகளுக்குப் பின் புதுப்பித்தார்கள். (O Jerusalem by Larry Collings and Domini que Lapierre)

இதனை உலகறிந்த பத்திரிகையாளராக இருந்து பின்னர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு, இஸ்லாத்திற்குப் பெருந்தொண்டாற்றி LEOPED Agad (எ) முஹம்மத் அசத் அவர்கள், இப்படிக் குறிப்பிட்டார்கள்.

மேலை நாடுகள் அதாவது ஐரோப்பிய நாடுகள், முஸ்லிம் உலகை, சிலுவைப் போர்கள் என்ற கண்ணாடியின் வழியாகத்தான் பார்க் கின்றார்கள். (Islam at the Cross Roads)

இந்தப் பின்னணியில்தான் இப்போதைய நிகழ்வுகளைப் பார்க்க வேண்டும்.

இதே பின்னணியில்தான் நாம் ஜார்ஜ்புஷ் நவீன சிலுவைப்போர்கள் தொடக்கம் என்ற பிரகடனத்தையும், இப்போது ஜான் பெப்பர் என்பவரின் சிலுவைப்போர்கள் 2.0 என்ற போர்த் திட்டத்தையும் பார்த்திட வேண்டும்.

இப்போதைய சிரியாவின் நிகழ்வுகளை நாம் இவற்றிலிருந்து வேறுபடுத்திப் பார்த்தால் நாம் உண்மையைப் புரிந்துகொள்ள தவறிவிடுவோம்.

இங்கே நாம், அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் 2004 ஆம் ஆண்டுதான் மீண்டும் அமெரிக்காவின் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது அமெரிக்க அதிபர் புஷ் சொன்னார் This war will be taught for another sixty or Seventy years - அதாவது இந்த யுத்தம் இன்னும் அறுபது அல்லது எழுபது வருடங்களுக்கத் தொடர்ந்து நடக்கும்.

இந்த உரை, ஏதோ பொதுக்கூட்டத்தில் பேசப்பட்டதல்ல, அமெரிக்காவில் ஒரு அதிபர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அவர் ஓர் விஷன் இப்டேஸ்மெண்ட் என்ற அடுத்து நான் என்ன செய்யப்போகின்றேன் என்பதைச் சொல்லிட வேண்டும். அதில்தான் இந்த உண்மைகளைக் கக்கினார்.

அமெரிக்க அதிபர் புஷ்-இன் கணக்குப்படி பார்த்தால் இந்தப் போர்கள் ஆப்கானிஸ்தானில் தொடங்கி, ஈராக், சிரியா வழியாகத் தொடரும் போர் 2064 அல்லது 2074 வரைத் தொடர்ந்திட வேண்டும், தொடரும்.

இன்றைய அமெரிக்காவின் போக்குகளை மேலெழுந்த வாரியாகப் பார்ப்பவர்களுக்கு ஒன்று புரியும். அது 2000 முதல் 2008 வரை தொடர்ந்த போரில், புஷ் எங்கே விட்டாரோ அங்கே இருந்துதான், ஒபாமா தொடங்கினார், தொடர்ந்தார்.

2008-இலிருந்து தொடங்கி 2015 வரை ஒபாமா தொடர்ந்தார். 26 முறை முஸ்லிம் உலகின் மேல் குண்டுமழை பொழிந்தார். 2015-இல் டிரம்ப் தொடங்கி இருக்கின்றார். அடுத்து அமெரிக்க அதிபராக யார் வந்தாலும் இஃது தொடரும்

இவர்களின் இந்த வெறியையும் வேகத்தையும் புரிந்துகொள்ளாமல் நாம் நமக்குள்ளேயே காரணங்களைத் தேடினால் 2064 வரை இவர்கள் செய்பவற்றை அதாவது இன்னும் 46 முதல் 56 ஆண்டுகள் வரை அரபுலகில் என்ன நடக்கும் என்பதைப் புரிந்து கொள்ளவே மாட்டோம்.

### அடுத்த இலக்கு துருக்கி

இவர்கள் இஸ்லாத்தை துடைத்தெறிந்திட வேண்டும், அது அல்லாதபோது அதன் வளர்ச்சியை மட்டுப்படுத்திட வேண்டும். முஸ்லிம்களின் கைகளிலிருக்கும் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி அவர்கள் இஸ்லாத்தை வளர்த்து விடாமல் தடுக்க வேண்டும் என்றெல்லாம் திட்டம் போட்டு, ஆப்கானிஸ்தானை தாக்கினார்கள். ஈராக்-ஐ தாக்கினார்கள். அடுத்த இலக்கு சிரியா அல்லது ஈரான் என இலக்கு வைத்தார்கள்.

ஈரானை ஒரு தீவிரவாத நாடு என ஏற்கெனவே அறிவித்திருந்தார்கள். ஈரான் எந்த நிலையிலும் நாங்கள் தாக்கப்படுவோம் என்றால் அமெரிக்காவை எங்கள் ஏவுகணைகள் தாக்கிடும் என்றது மட்டுமல்ல உலகெங்கும் அமெரிக்கா வைத்திருக்கும் அத்தனை இராணுவத் தளங்களையும் தகர்த்திடுவோம் என்றது. அமெரிக்கா ஈரானை விட்டு தனது இலக்கை வேறு பக்கம் திருப்பியது. இந்நிலையில் 2012 ஆம் ஆண்டில் அமெரிக்க ஈரான் மீது பறக்கவிட்ட உளவு பார்க்கும் ஆளில்லா விமானங்களை ஈரான் சந்தடிஇல்லாம், தன் நாட்டில் தரை இறக்கியது. (விரிவாக தகவல்களுக்கு பார்க்க வைகறை வெளிச்சம், பிப்ரவரி 2012)

அதே 2012 ஆம் ஆண்டில் தனது அணு ஆயுதபலம், அமெரிக்காவின் அணு ஆயுத பலத்தைப்போல், 3000 மடங்கு அதிகம் என்பதை உலகுக்கு அறிவித்தது. இதனை நமது நாட்டு அதாவது இந்தியாவின் அணு விஞ்ஞானிகளும் ஒப்புக் கொண்டார்கள். ஆக அமெரிக்கா, சிரியாவின் பக்கம் தன் கவனத்தை திருப்பியது, சிரியாவின் கபளீகரங்களுக்குப் பிறகு துருக்கியை தாக்கிட அமெரிக்காவும் பன்னாட்டுப் படைகளும், அதாவது ஐரோப்பிய நாடுகள் திட்டமிட்டிருக்கின்றன. இதற்காக அமெரிக்கா டாலர் 250 மில்லியனை ஒதுக்கி இருக்கின்றது. (Source : Front Line, March-16, 2018)

எதிர்வரும் நாட்களில் 250 மில்லியன் டாலர்களைக் கொண்டு, துருக்கியின் மீது தாக்குதல் நடத்தும்.


vaigarai velicham official

இன்றைய உலக அரங்கில் முஸ்லிம்கள் அவதிகளுக்கு உள்ளாகும் போதெல்லாம் அங்கே தலையிட்டு பிரச்சனைகளுக்குத் தீர்வுகளைத் தேடும் நாடாக துருக்கியும் அதன் அதிபர் ஏர்துக்கான் அவர்களும் இருந்து வருகின்றார்கள்.

மியான்மரில் முஸ்லிம்கள் இன சுத்திகரிப் பிற்கு ஆளானபோது மியான்மர் நாட்டுக்குச் சென்று நிவாரணங்களை வழங்கினார் (விரிவான தகவல்களுக்கு பார்க்க வைகறை வெளிச்சம்)

மியான்மர் முஸ்லிம்கள் பௌவுத்த தீவிர வாதிகளால் விரட்டடப்பட்டு பல நாட்கள் கால் நடை யாகவே நடந்துசென்று வங்காள தேசத்தை அடைந் தார்கள். வங்காளதேசம் அவர்களை அகதிகாளக ஏற்றுக்கொள்ள மறுத்தது. அந்நிலையில் வங்கத்தின் ஆட்சியாளர்களைச் சந்தித்து, அந்த மக்களை ஏற்றுக்கொள்ளச் செய்தார் துருக்கியின் அதிபர் எர்துகான்.

அதேபோல் பாலஸ் தீனில் காஸா பகுதியில் பாலஸ்தீன முஸ்லிம்களை இஸ்ரேலியர்கள் அதாவது யூதர்கள் தாக்கியபோது அங்கே இளைஞர்களையும், பள்ளி சிறார் களையும் கத்தர் நாட்டையும், ஈரான் நாட்டின் ஆயுதங்கள், நுண்மான் நுழைபுலம் ஆகியவற் றையும் இணைத்து இஸ்ரேலின்மேல் அதிர்ச்சி யானதொரு தாககுதலை நடத்தினார்.

அத்தோடு இஸ்ரேல் வெல்ல முடியாத நாடு என்ற பிரம்மையை உடைத்தார். இறுதியில் அமெரிக்கா வழியாக ஐக்கிய நாடுகளின் சபையின் காலில் வீழ்ந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டது இஸ்ரேல். ஈரானிடம் ஆயுதம் ஏன் தந்தார்கள் என கேட்டபோது இன்னும் தருவோம் என்ன செய்வீர் எனக் கேட்டார் ஈரான் அதிபர் முஹம்மத் அஹ்மத் நஜ்ரி

அதேபோல் கடந்த (2017) ரமழான் மாதத்தில் கத்தாருக்கு உணவுப் பொருட்கள் கிடைக்காதபோது அந்த உணவுப் பொருள் களை உடனே வழங்கிட முன் வந்தது, துருக்கி இந்தப் பணியில் ஈரானையும் இணைத்துக் கொண்டார் துருக்கி ஆட்சியாளர் தையூப் எருதுகான்.

இப்படி ஷியா-சன்னி வேற்றுமைகளை மறந்து முஸ்லிம் நாடுகள் பொதுப் பிரச்சனை களை அணுகி வெற்றிகளைக் குவித்து வருகின்றார். தையூப் எருதுகான் - துருக்கியின் தலைவர்.



**ஜெருசலேம் - இஸ்ரேல் தலைநகர்**

அண்மையில் ஜெருசலத்தை இஸ்ரேலின் தலைநகராக ஆக்கிடப் போகின்றேன் என கர்ஜித்தார் அமெரிக்க அதிபர் டிரம்ப். இதனை எதிர்த்து ஐக்கிய நாடுகள் சபையின் பொது அவையில் தீர்மானம் ஒன்றை டிசம்பர்-21, 2017-இல் கொண்டு வந்தன. துருக்கியும் ஏமன் நாடும் இதிலேயும், எர்துகான்-துருக்கியின் ஆட்சியாளர் ஆற்றிய பணி அலாதியானது.

இந்தத் தீர்மானத்தை அமெரிக்காவின் உதவிகளைப் பெறும் நாடுகள் ஆதரித்தால், அதாவது ஜெருசலேம் இஸ்ரேலின் தலைநகராக இருக்கக் கூடாது என வாக்களித்தால்,

நிச்சயமாக அமெரிக்கா உதவிகளை நிறுத்தும் என அறிவித்தார் அமெரிக்க அதிபர் டிரம்ப். அதனையும் கடந்து தீர்மானத்திற்கு ஆதரவாக 128 (நூற்று இருபத்தெட்டு) வாக்குகளைப் பெற்று வென்று காட்டினார். எர்துர்கான் டிரம்புக்கு ஆதரவாக வெறும் எட்டு ஓட்டுகள் மட்டுமே கிடைத்தன.

இப்படி பொதுப் பிரச்சனைகளில் ஷியாக் களும், சன்னிகளும் ஒன்றாய் நின்று வென்று காட்டிடும்போது சிரியாவில் மட்டும் முஸ்லிம் களைக் கொலை செய்து கொண்டிருப்பார்களா?

**துருக்கி மீதான தாக்குதல் எப்படி?**

முஸ்லிம்களைப் பல்வேறு வகையிலும் ஒருங்கிணைத்து வெற்றியின் பக்கம் இட்டுச் செல்லும் துருக்கிதான் அமெரிக்காவின் அடுத்த இலக்கு.

இந்நிலையில் அடுத்த இலக்காக துருக்கியை மனதில் வைத்திருக்கும் அமெரிக்கா தன்னு டைய திட்டங்களைச் செயல்படுத்திட என்ன செய்கின்றது என்பதைப் பாருங்கள்...

துருக்கிக்கும் சிரியாவுக்கும் உள்ள எல்லைப் பகுதியில் குருதுகள் எனப்படும் குருது முஸ்லிம் களின் ஒருசிலரை அமெரிக்கா தூண்டிவிட்டு தங்களுக்கு ஒரு நாடு வேண்டும் என போராடிடப் பணிந்து வருகின்றது.

இந்தக் குருது இன மக்களின் மற்றொரு சாராரை கம்யூனிட்கள் தங்கள் பக்கம் இழுத்து ஈராக்கிலும் சிரியாவிலும் பிரச்சனைகளைச் செய்து வருகின்றார்கள். தேவைப்படும்போது இந்த மக்களை ஈராக்கிலும், சிரியாவிலும் தூண்டி விட்டுத் தங்கள் அபிலஷைகளை நிறை வேற்றிக் கொள்கிறார்கள் அமெரிக்கர்களும், ரஷ்யர்களும்

சதாம் ஹுசைன் ஈராக்-இன் அதிபராக இருந்த நாட்களில் இந்தக் குருது முஸ்லிம்களை சதாம் தாக்கினார். விஷ வாயுவை இந்த குருது முஸ்லிம்களுக்கு எதிராகப் பயன்படுத்தினார் என்றெல்லாம் குறைசொல்லி, குற்றம் சாட்டி பலமுறை ஈராக்-ஐ தாக்கினார்கள் 1990-களில் அந்த தாககுதல்களின் உண்மையான நோக் கம் ஈராக்-இன் தொழில் நகரங்களையும், அணு நிலையங்களையும் தகர்ப்பதுதான். ஆனால் ந ாம் குருது முஸ்லிம்களைக் காப்பதில் சதாம் ஹுசைனைவிட அமெரிக்கா அலாதியானது என எண்ணிடத் தலைப்பட்டோம்.

துருக்கியிலும் குருது முஸ்லிம்கள் வாழு கின்றார்கள். அவர்களை தனி நாடுகேட்டுப் போராடிடும் அளவுக்கு எர்துகான் - துருக்கியின் அதிபர்விடவில்லை. அவர்களை துருக்கியின் குடிமக்களாக ஆக்கிவிட்டார். அவர்களுக்கு துருக்கியில் நாடாளு மன்றத்தில் பிரதிநிதித்துவமும் கொடுத்துவிட்டார். இதனால் துருக்கியின் உள்வாழும் குருது முஸ்லிம்கள், துருக்கிக்குத் துரோகம் செய்வ தில்லை. அமெரிக்காவுக்கோ, ரஷ்யாவுக்கோ துணைபோக மாட்டார்கள்.

ஆனால் அமெரிக்கா துருக்கி, சிரியா எல்லையோரத்தில் வாழும் குருது முஸ்லிம்களை மையமாகக் கொண்டு காய்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றது துருக்கியை கபளீகரப்படுத் திட.

இந்த வகையில் தனிநாடு ஒன்றை துருக்கி, சிரியா எல்லையில், குருதுகளுக்கு உருவாக்கித்





vaigarai velicham official



தருவதாக வாக்களித்து அங்கு போராளிகளை உருவாக்கிடத்தான் இப்போது டாலர் 250 மில்லியன்களை ஒதுக்கி இருக்கின்றது அமெரிக்கா.

இந்த 250 மில்லியன் டாலர்களைக் கேட்டுப் பெறும்போது அமெரிக்காவின் உளவுத்துறை "to Train and Equib Activates" குருது முஸ்லிம்களுக்குப் பயிற்சி கொடுக்கவும் ஆயுதபாணியாக ஆக்கிடவுமே என்று கூறியே வாங்குகின்றது. (Source : Front Line, March-16, 2018)

இதில் மிகப்பெரிய வேதனை என்னவெனில் எந்தக் குருதுகளுக்கு - குருது முஸ்லிம்களுக்கு ஆசைக்காட்டி வருகின்றதோ அந்தக் குருது முஸ்லிம்களின் அமைப்பை (PKK) தீவிரவாத அமைப்பு எனச்சொல்லி அமெரிக்கா 2017-இல் தடை செய்தது. இந்த அமைப்பின் பெயர் பி.கே.கே. என்பதாகும். குருது மொழியில் அமைந்த இந்தப் பெயரை ஆங்கிலத்தில் Kurdish Workers Party குர்திஷ் ஒர்கர்ஸ் பார்ட்டி என்று அழைக்கின்றார்கள். குருதுகளின் தொழி லாளர் கட்சி" எனக் கூறுகின்றார்.

ஓராண்டுக்கு முன்னர் தான் தடை செய்த கட்சியை - அமைப்பைத்தான் இப்போது துருக்கிக்குத் தலை வலியை தர தயார் செய்கின் றனர் அமெரிக்க உளவுத்துறையினர்.

தான் தீவிரவாத அமைப்பு என அழைத்த அமைப்பிற்குத் தானே ஆயுதமும் பயிற்சியும் தந்தால் உலக நாடுகள் தன்னை குறைகாணும் என்பதை உணர்ந்த அமெரிக்கா, இந்தப் பி.கே. கே.-க்கு ஒரு புதிய பெயர்-ஐ சூட்டியுள்ளது. அதுதான் PYD-பி.ஒய்.டி. இதனை ஆங்கிலத்தில் Democratic Union Party. இதனை YPG என்றும் அழைப்பர். ஜனநாயக ஒருமைப்பாட்டு கட்சி எனப்பெயர் மாற்றம் செய்திருக்கின்றது. (Front Line, March-16, 2018) இவர்களுக்கு உதவி செய்ய 2000 அமெரிக்கப் படைகள் நிற்கின்றன சிரியாவில்.

ஆனால் துருக்கி இந்த அமெரிக்க வலையில் குருது முஸ்லிம்கள் வீழ்ந்து விடாமல் பார்த்து வருகின்றது. அந்தக் குருது முஸ்லிம்களுக்கு ஆலோசனைகளை வழங்கி வருகின்றது. துருக்கி, சிரியா எல்லையோரத்தில் அமெரிக்கா உருவாக்கிய பயிற்சி தளங்களை தாக்கி அழித்து விட்டது. இந்தப் பயிற்சி தளங்களை வான் வெளி தாக்குதல் மூலம்தான் தகர்த்து வருகின் றது துருக்கி. இதனைப் பயன்படுத்தி சில (மிகக் குறைவான) ஊடகங்கள், சிரியாவில் துருக்கியும் குண்டு போடுகின்றது எனப்பேசி வருகின்றன. ஆனால் இதனால் அங்கே அமெரிக்க இராணு வத்தினர் எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள் என்பது தெரியவில்லை. (FL. March-16, 2018)

ஆக நடந்துகொண்டிருப்பது ஷியா-சன்னிப் பிரச்சனை அல்ல. ஒரு சர்வதேச சதியின் அரங்கேற்றம். அமெரிக்கா இதைப்பற்றி அதன் வழி மேலை நாட்டவர்களின் கலாச்சாரத் திணிப்பு. உண்மையான பார்வையும், தெளிவும்

பெறாத வரை நாம் நமக்குக் காட்டப்படும் காட்சிகள் நமக்குச் சொல்லப்படும் செய்திகள் இவற்றை நம்பியே நின்றால் உண்மையை உயிருள்ளவரையும் அறிந்திட மாட்டோம். இதில் துருக்கிக்கு இருக்கும் மிகப்பெரிய தலை வலி. தனது எல்லையோரத்தில் தயாராகும் இந்த குருதுகளோடு போரிட்டே ஆக வேண் டும் என்பதே!



நாம் நமது வைகறை வாசகர்களுக்கு ஒரு செய்தியை தொடர்ந்து சொல்லி வருகின்றோம். அது நீங்கள் எதைப் பார்க்க வேண்டும் என்று அவர்கள் அதாவது, உங்கள் எதிரிகள் முடிவு செய்கின்றார்களோ அதுவே உங்களுகக்குச் சொல்லப்படுகின்றது. நீங்கள் - எந்தச் செய்தி யைச் கேட்க வேண்டும் என்று அவர்கள் கருது கின்றார்கள், அதுவே உங்களுக்கு காட்டப்படு கின்றது. இவற்றின் மூலம் நீங்கள் எப்படிப் பட்டதொரு மனநிலையைப் பெற வேண்டும் என்பதையும் அவர்களே முடிவு செய்து விடுகின்றார்கள்.

**சில யதார்த்தங்கள்**

சரி இத்தனையும் நமக்குப் புரிந்த அளவுக்கு அங்கே முஸ்லிம்களைப் பிணங்களாக ஆக்கிக் கொண்டிருக்கின்றார்ளோ அவர்களக்குப் புரிந்திடவில்லையா?

உண்மையைச் சொன்னால், இவர்கள் பல்வேறு சிறைகளிலுமிருந்தும் சிரியாவுக்கு அனுப்பப்பட்டவர்கள் சவூதி அரேபியாவில் மரண தண்டனை பெற்ற சில ஆயிரம் கைதிகள், மூளைச் சலவைச் செய்யப்பட்டு, ஆயுதங்கள் வழங்கப்பட்டு, சிரியாவுக்குள் அனுப்பப்பட்டார்கள். இதை மிடில் ஈஸ்ட் மானிட்டர் என்ற இதழ் குறிப்பிட்டுள்ளது.

இதுதான் உண்மை யதார்த்தம் என்பதற்கான ஆதாரங்களையும் அது வழங்கியுள்ளது. இவர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள எதையும் செய் வார்கள் என்பதே உண்மை.

ஆனால் இவற்றையெல் லாம் கடந்து சில முஸ்லிம் கள் - சிரியாவின் பூர்வீக குடிகள், சில முயற்சிகளை மேற்கொள்கின்றார்கள். அவர்கள் சில யதார்த்தங் களை நம்முன்னே வைக் கின்றார்கள். அவற்றை இங்கே தருகின்றோம்.

நாங்கள் இந்தப் போராளி குழுக்களிடம் பேசி வருகின்றோம். அவர்கள் போரை நிறுத்த வேண்டும் என்றால் எந்தக் குழுவும், தான் இப்போது இருக்கும் பகுதியைக் கடந்து இன்னொரு பகுதிக் குள் வந்திடக் கூடாது எனக் கூறிவருகின்றோம்.

ஏனெனில் ஒவ்வொரு பகுதியையும் ஒரு போராளிக்குழு தன் கையில் வைத்திருக்கின்றது. இவர்கள் தங்கள் ஆதிக்கத்தை விரிவுபடுத்திட முயற்சிகளை மேற்கொள்ளும்போது இந்த போராளிகள் தங்கள் பிடியை விட்டுக்கொடுக்க மறுத்து சண்டையைத் தொடருகின்றார்கள். இவர்களை மட்டுப்படுத்தி வருகின்றோம்.

ஆனால் அமெரிக்காவில் உருவாக்கப்பட்ட குழுக்கள், இதில் உடன்பட மாட்டேன் என்கின்றன. இருப்பினும் பேசி வருகின்றோம். "மஹ்மூத்" என அறியப்படும் இந்த இளைஞர் நமது பிரண்லைன் நிருபர் விஜய் பிரகலாம்-இடம் இன்னொரு செய்தியை சொல்லி இருக் கின்றார்..

அதாவது நாங்கள் 2011 ஆம் ஆண்டு ஏற்படுத்திய எழுச்சி-அரபு எழுச்சி-வெற்றிதான். அதில் நாங்கள் வேலை வாய்ப்புகள், கல்வி

மருத்துவம் போன்றவற்றைத்தான் முதலில் கேட்டோம். அது அல்லாதபோது ஆட்சியாளர் பதவி விலக வேண்டும் என்றோம். ஆனால் அமெரிக்கா மொத்தப் பிரச்சனையும் வேறு பக்கம் திருப்பிவிட்டது.

முஸ்லிம் நாடுகளில் ஆட்சி மாற்றம் என்ற அமெரிக்காவின் திட்டத்தை முன்னே கொண்டு வந்து "Regim Change" எங்கள் போராட்டத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டது. உண்மை யைச் சொன்னால், போராட்டத்தில் கனிந்த வெற்றியை பறித்து எங்கள் மக்களை அழித்து வருகின்றது.

**கலாச்சார சின்னங்கள் ஆய்வு**

அஷ்ஷாம் என்ற சிரியா இஸ்லாமியக் கலாச்சார சின்னங்கள் நிறைந்த நாடு! அதனை அமெரிக்கா தன்னுடைய கைப்பாவைகளை ஏவிவிட்டு தாக்கித் தகர்த்து வருகின்றது. அவர் களால் முடியாதவற்றை அமெரிக்க விமானங் கள் அல்லது இஸ்ரேலின் விமானங்களை ஏவி விட்டு அழித்துவிடுகின்றன.

ஆப்கானிஸ்தானை 1839 முதலே பிரிட்டன் பின்னர் ரஷ்யா பின்னர் அமெரிக்கா என கடந்த 170 ஆண்டுகளாகத் தாக்கிவந்தன. அவற்றின் விளைவாக இஸ்லாத்தின் அத்துனை கலாச்சார அடையாளங்களும் அழிக்கப் பட்டன. மலையும், பள்ளத்தாக்கும் பாய்ந் தோடும், நீரருவிகளும் கொண்ட நாடு ஒரு மயானமாகக் காட்சி தருகின்றது என்கின்றனர். அங்கு சென்று வருகின்றவர்கள். அதையேதான் ஈராக்கில் செய்து வந்தார்கள்.

ஈராக்-ஐ பொறுத்தவரை அமெரிக்கர்கள் 1990 முதல் தாக்குதலை நடத்தி வந்தார்கள். பின்னர் ஈராக்-ஐ நேரடியாக ஆக்கிரமித்தார்கள். 2015 வரை பல்வேறு பெயரிலும் தாக்குதலை நடத்தினார்கள். அங்கிருந்த இஸ்லாமியக் கலாச்சார தடங்களை அழித்தார்கள். அத்தோடு சியா, சன்னி பிரிவுகளைப் பெரிது படுத்தி னார்கள்.

அத்தோடு சதாம் ஹூசைன் மெத்த சிரமத்தோடு பலாயிரம் பெண் விஞ்ஞானிகளை உருவாக்கி வைத்திருந்தார். அத்தனை பேரையும் அபூஹூரைப் சித்திரவதைக் கூடத்தில் வைத்து குரூரமாகக் கொலை செய்தது அமெரிக்கா!

இப்போது சிரியாவைக் கபளீகரப்படுத்தி வருகின்றார்கள். அங்குள்ள இஸ்லாமிய கலாச்சார தடங்களையும், இஸ்லாத்டதின் வரலாறு கூறும் தடயங்களையும் அழித்துக் கொண்டிருக்கின்றார்கள். இதில் பிளாக் வாட்டர் தீவிரவாதிகள் மிகவும் லாவகமாச் செயல்பட்டு வருகின்றார்கள்.

(அமெரிக்காவின் உருவாக்கமான இந்த பிளாக் வாட்டர் தீவிரவாதிகளைப் பற்றி சென்ற வைகறை வெளிச்சத்தில் விரிவாக கூறியுள்ளோம்)

இந்த இலட்சியங்களோடு அடுத்தடுத்து துருக்கியின் பக்கமும் திருமபிட இருக்கின் றார்கள். அங்கே நாம் குருது முஸ்லிம்கள் என்றும், சன்னி முஸ்லிம்கள் என்றும் பேசிடத் தலைப்பட்டால். இந்த மொத்த விவகாரத் தையும் புரிந்துகொள்ள இன்னும் பல தலை முறைகள் ஆகலாம்.

**போராட்டக் குழுக்கள்**

இவர்கள் அமெரிக்காவின் உருவாக்கம் என்பதை நாம் - (வைகறை வெளிச்சம்) தொடக்க நாள் தொட்டே தெளிவுபடுத்தி வந்தோம். இஃது இப்போது இன்னும் மிகவும் தெளிவாகி விட்டது.

இப்போது கிடைக்கும் தகவல்கள் இவர்களில் ஒரு பகுதியினர் சவூதி சிறைகளில் வெளியே வர முடியாத தண்டனைகளைப் பெற்றவர்கள் என்பதும் தெளிவாகி இருக்கின்றது. சிலர் மரண தண்டனையைப் பெற்றவர்கள். மிடில் ஈஸ்டன் மானிட்டர் இதழில் இடம்பெற்ற ஆதாரங்களின் அடிப்படையில் விடுதலை இதழ் இதனை கூறுகின்றது. (விடுதலை, Middle East Monitor 10-3-2018 ஐ.எஸ்.ஐ.எல். உருவாக் கியதில் பிரிட்டன் பிரான்ஸ் ஆகியவையும் தங்கள் பங்கை ஆற்றி இருக்கின்றன) இவர்கள், ஷியா, சன்னி என்பதோடு சலபின்கள் என் றொரு புதிய பிரிவை முஸ்லிம்களுக்குள் ஏற்ப டுத்தி வருகின்றார்கள். இவர்கள் இப்போது சலபி ஜிஹாதிகள் எனப்பெயர்.

Free Sriyan Army -
**சிரியாவின் விடுதலைப்படை**

இஃது 2011ஆம் அண்டில் சிரியாவில் ஏற்பட்ட மக்கள் எழுச்சியின் பின்னணியில்,

சிரியாவின் இராணுவத்திலிருந்து வெளியே வந்தவர்களால் உருவாக்கப்பட்டது. இப்போது இவர்கள் அமெரிக்காவைச் சார்ந்து நின்றிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள்.

அமெரிக்கா இவர்களையும் ஐ.எஸ். ஐ.எல்-ஐயும் நம்பித்தான் சிரியாவை சின்னா பின்னப் படுத்தி வருகின்றது. இனி ஒரு வேளை குருது களின் தேசியம் எனப்பேசும் குருது முஸ்லிம் களும் இவர்களின் கைகளில் சிக்கலாம்.

ரஷ்யாவும் இஸ்ரேலும் இனி கைக் கோர்க் கலாம். துருக்கியும் தொடர்ந்து ஈரானும் இவர் களால் துவம்சப்படுத்தப்படலாம். அல்லாஹ் பாதுகாப்பானாக!

### ஹிஸ்புல்லாஹ்

மிகவும் புத்திசாலித்தனமாக செயல்பட்டுக் கொண்டிருந்த ஓர் அமைப்பு. இஸ்ரேலை ஆட்டிப் படைத்திட்ட அமைப்பு. இதுவும் இப்போது போர்க்களத்தில் புகுந்துவிட்டது. காரணம் இதன் ஆதிக்கத்திற்குட்பட்ட பகுதிக் குள் இதரப் போராட்டக் குழு வருவதை விரும்பவில்லை.

இப்படித்தான் நுஸ்ரத்-ஷபாப் என்ற பலக் குழுக்கள் பலப் பகுதிகளைக் கையில் வைத்திருக் கின்றன. இந்தப் பகுதியைக் கைப்பற்ற வரும் குழுக்கள் யாராக இருந்தாலும் கவலைப்படாமல் போர்த் தொடுக்கின்றன. இப்படிப்பல குழுக் கள். இந்தக் குழுக்கள் அத்தனை பேரிடமும் அமெரிக்காவில் தயாராகும், உயர்தர ஆயுதங் கள் தாராளமாக இருக்கின்றன. அமெரிக்காவுக்கு அளவிட முடியாத ஆயுத விற்பனை.

### இஸ்ரேல்

இஸ்ரேலுக்கு ஒரு பெரும் திட்டம். அது அகண்ட இஸ்ரேலை உருவாக்கிட வேண்டும் என்பதே! இந்தத் திட்டத்தின் மிக முக்கியமான பகுதி முஸ்லிம்கள் அதிகமாக வாழ்ந்திடும் பகுதி. முஸ்லிம்கள் அதிகமாக வாழ்ந்திடும் தனது அண்டை நாடுகளில் குழப்பங்களை உருவாக்கிட வேண்டும். அதன்மூலம் தனக்குத் தேவைப்படும் இடங்களைக் குண்டு போட்டுத் தகர்த்திட வேண்டும். பின்னர் அந்த இடங் களை ஆக்கிரமித்திட வேண்டும். காலப்போக் கில் அங்கே யூதர்களைக் குடியேற்றிட வேண்டும். இந்தத் திட்டம் இஸ்ரேல் உருவாக் கப்பட்ட நாட்களில் (1948 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பெற்று, இன்றளவும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இன்னும் ஒரு நூற்றாண் டுக்குத் தொடரும்.

சிரியாவைப் பொறுத்தவரை, அதாவது சிரியாவைத் தாக்கித் தகர்த்திட வேண்டும். அதன்மூலம் அகண்ட இஸ்ரேலை நாம் உருவாக்கிட வேண்டும் என்ற திட்டம் 10 ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்டது. அமெரிக்காவால் அங்கீகரிக்கப்பட்டு, அதற் கான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. (Front Line, March-16, 2018)

2007-இல் ஒரு முறையும், 2017-இல் ஒரு முறையும் சிரியாவின் அணு ஆயுத பரிசோத னைக் கூடங்களிலும், அணுமின் நிலையங்களி லும், இஸ்ரேல் குண்டு மழைகளைப் பொழிந் துள்ளது. இப்போதுள்ள குழப்பங்களைப் பயன் படுத்தி சிரியாவை உடைத்தே ஆக வேண்டும் என நிற்கின்றது இஸ்ரேல் (Front Line, March-16, 2018)

இப்போது சிரியாவில் நடந்துகொண்டிருக் கும் குழப்பங்களைப் பயன்படுத்தி, சிரியாவின் இராணுவத் தளங்களையும், தளவாடங்களையும் அழித்து விடுகின்றது இஸ்ரேல். இதன்மூலம் இந்தக் குழப்பங்கள் முடிந்த பின்னரும், சிரியா இராணுவ பலமற்றதாக இருக்கும்.

2018 பிப்ரவரி இரண்டாவது வாரத்தில் பல இஸ்ரேலிய (F16) எஃப் 16 ரக போர் விமானங்களை சிரியா இராணுவம் சுட்டு வீழ்த்தியது குறிப்பிடத்தக்கது.

இங்கே நாம் கவனிக்க வேண்டியது என்ன வெனில் இஸ்ரேல் உருவாகிய நாள்முதலே சிரியா இஸ்ரேலை எதிர்ப்பவர்களுக்குப் பெரிய அளவில் உதவி செய்து வந்திருக்கின்றது என்பதாகும்.

இதனால்தான் அகண்ட இஸ்ரேல் கனவுக்கு சிரியா பெரும் தடை எனக் கருதுகின்றது இஸ்ரேல். ஆகவே சிரியாவின் இராணுவ தளங்களையும் தளவாடங்களையும் இப்போது அழிக்க தொடர் தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

- MGM


vaigarai velicham official

# சிரியாவில் நடப்பது என்ன? பாகம்-2

**இந்த** அட்டைப்பட கட்டுரை பகுதி ஒன்றில், கோவையில் நடந்த குண்டு வெடிப்புகளை பற்றிக் குறிப்பிட்டிருந்தோம்.

அதே கோவையில் *23*, நவம்பர் *2022*இல் ஒரு குண்டு வெடிப்பு நடந்தது. அதைப் பற்றிய சிறு குறிப்பு ஒன்றை இங்கே பதிவு செய்கின் றோம். எப்படி முஸ்லிம்கள் மீதான சதிகள் நிறைவேற்றப்படுகின்றன என்பதை இதுவும் எடுத்துக்காட்டும்

கோவையில் *23*, நவம்பர் *2022*இல் நடந்த கார் சிலிண்டர் வெடிப்பு பச்சையாக பி.ஜே.பி. யினர் செய்த ஏற்பாடு. ஏனெனில் அந்தக் குண்டு வெடிப்பில், அதிகமான தகவல்களை ஊடகங்களுக்குத் தந்தவர் பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை. அவருடைய சட்டைப் பைக்குள், ஆணிகளும், கண்ணாடித் துகள்களும் இருந்தன. அதனை அவர் ஊடங்களின் முன் காட்டினார். விசாரணை முகமைகளைவிட அதிகமான தகவல்கள் மீடியாக்களுக்குத் தந்ததும் அவர்தான். அதனால் அவரைத்தான் விசாரணைச் செய்திடத்தான் வேண்டும் என தமிழக சட்டசபை நடுவர் சபாநாயகர் அப்பாவு அவர்கள், சொல்லியும் யாரும், பா.ஜ.க. பக்கம் திரும்பிக் கூடப்பார்க்கவில்லை. இப்போது சாட்சியங்கள் உருவாக்கும் பணிகள்தாம் நடக் கின்றன. Manufacturing Evidence உளவுத் துறையின் கோட்டைக்குள் வெடி பொருட்கள் வந்ததெப்படி என நாம் எழுப்பின வினா அப்படியே இருக்கின்றது. மேலும் விபரங் களுக்கு பார்க்க வைகறை வெளிச்சம், நமது கள ஆய்வு, (வைகறை வெளிச்சம், நவம்பர், 2022)

அட்டைப் படக் கட்டுரை பகுதி ஒன்றில் நாம் விடுதலை இதழில் இடம்பெற்ற இரண்டு கட்டுரைகளைச் சுட்டிக்காட்டியுள்ளோம். விடுதலை *9-3-2018* மற்றும் *13-2-2018*

அதில் அகண்ட இஸ்ரேலுக்காக சிரியா என்பதைக் குறிப்பிட்டிருந்தோம். இப்போது அந்த அகண்ட இஸ்ரேல் சாத்தியமாகிவிட்டது.

இப்போது, HTS என்ற அமைப்பு, டிசம்பர்-*8*, *2024*இல் சிரியாவைக் கைப்பற்றியது. டிசம்பர்-*11,2024*இல் இஸ்ரேல் சிரியாவை ஆக்கிரமித்தது. டெமாஸ்கஸ் வரை இப்போது சிரியாவின் கைகளில்.

இந்த HTS என்ற ஹயாத் தஃரிக் அல்ஷாம் என்ற அமைப்பு அமெரிக்காவால் உருவாக்கப் பட்ட அல்கொய்தா இஸ்லாமிய ஸ்டேட் (இஸ்லாமிய ஆட்சி என்ற ISIL / ISIS ஆகிய அமைப்புகளிலிருந்து பிரிந்து வந்தது. இந்த அமைப்பு நவம்பர் *27,2024*இல் ஹிஸ்புல்லாஹ் வுக்கும் இஸ்ரேலுக்குமிடையே ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தில் பின் உயிர் பெற்று எழுந்தது. இதன் இந்த திடீர் எழுச்சியை ஏற்பாடு செய்தது, இஸ்ரேல் அமெரிக்கா, எகிப்து ஆகிய நாடுகள். இந்த HTS போராளிகளுடன் சிரியாவின் படைகள், பஷருல் ஆசாத்திற்காக மோதி இருக்க வேண்டும். ஆனால் அந்தப் படைகள், மோதவில்லை. காரணம் மீண்டும், பல லட்சம் முஸ்லிம்கள் பிணங்களாக வீழ்வதை "ஆசாத்"இன் படைகள் விரும்பவில்லை. காரணம், அவர்களின் சொந்த குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்களுடைய சொந்த பந்தங்கள், அண்டை நாடுகளுக்கு அபயம் தேடி செல்கின்றார்கள். ஆகவே சம்பளத்திற்காக சக, சகோதரர்களுக்கு எதிராக போர் செய்யவும், பிணங்களைக் குவிக்கவும் விரும்பவில்லை.

தன் படைகளுக்கு சம்பளம் எனப் பார்த்தால் அவர்களுக்கு கடந்த ஆறுமாதமாக முழு சம்பளம் கிடைப்பதில்லை. சிரியாவின் பொரு ளாதார நிலை அப்படி. ஆனால் பஷருல் ஆசாத்தின் ஆடம்பரங்களுக்கும் படோடபங் களுக்குக் கொஞ்சமும் குறைவில்லை.

இந்நிலையில் எதிர்ப்பே இல்லாமல், எதிர்த் துப் போராடுபவர்கள் யாருமில்லாமல், என்ற நிலையில் வேறு சொற்களால் சொல்வதானால் எந்தப் பிணங்களையும் குவிக்காமல் வாளா விழுந்துவிட்டன. இதனால் HTS என்ற ஹயாஸ் அல்ஷாம் பிரதேசத்தை மீட்பவர்கள் பதவிக்கு வந்துவிட்டார்கள் ஆசாத்-இன் படைகள்.

ஆனால் HTS-சும் அவர்களுக்கு லாலிபா டில்வர்களும் கிளர்ச்சிப் படைகள் வென்றுவிட்ட தாகவே அலறின. அடுத்து அவை இஸ்ரே லுக்குள் புகும், அல்குத்ஸ்-ஐ மீட்கும் என்றெல் லாம் அலறின. அரற்றின.

ஆனால், HTS தலைவர் அஹ்மத் அல் ஷாரா அல்லது முஹம்மத் அல்ஜோலானி தொடக்க நாள் முதலே நாங்கள், இஸ்ரேலோடு மற்றும் மேலை நாட்டினரோடு சண்டையிட

மாட்டோம் என ஐயங்களுக்கு அப்பால் நின்று அறிவித்துவிட்டார்.

ஆக, சிரியாவின் 500 சதுர கிலோ மீட்டர் தூரம் - இஸ்ரேலின் கைவசம். டெமாஸ்கஸ் என்ற சிரியாவின் தலைநகர்-ஐ சுற்றி இஸ்ரேலின் படைகள். இப்போது டெமாஸ்கஸ் இஸ்ரேலின் கண்காணிப்பின்கீழ்.

இந்த வகையில் அல்கொய்தா ISIL, HTS என்ற எல்லா அமைப்புகளும், அமெரிக்காவின் ஆக்கம். இவையெல்லாம் அகண்ட இஸ்ரேலுக்குப் பெரிய அளவில் உதவி செய்கின்றன. இந்த உண்மைகளை நாம் அப்போதிலிருந்தே சொல்லி வருகின்றோம்.

விடுதலையின் கூற்று உண்மை என்றானது முஸ்லிம்களிடையே ஒரு கூட்டத்தை உருவாக்கிட இஸ்லாத்தின் எதிரிகள் கண்டெடுத்த பொருள் ஷியா - சன்னி வேறுபாடு. அதை ஊதி பெரிதாக்கினார்கள். பின்னர் சன்னிகளுக்கிடையே சலபிகள் - தௌஹூதிகள் என்ற பிரிவை ஏற்படுத்தினார்கள். இதில் சன்னிகளுக்கிடையே பல பிரிவுகள். அதில் எல்லாக் குழுக்களுக்கும் ஆயுதங்களை தாராளமாக வழங்கினார்கள். பணமும் தந்து, பயிற்சியும் தந்தார்கள். இதில் அமெரிக்க சிறைகளில் நீண்ட நாட்கள், விடுதலை இன்றிக் கிடந்த முஸ்லிம் கைதிகளும் பெரிய அளவில் பயன்பட்டார்கள்.

இந்த அல்காயிதா, ISIL, HTS இவர்களுக்கு பல நேரங்களில் டெல்அவிவ் மருத்துவமனை தான் சிகிச்சை நோயுற்றபோது

**நடைமுறையில் அருகி வந்த ஷியா - சன்னி வேறுபாடு**

காஸாவில் அக்டோபர்-7,2023இல் சன்னி முஸ்லிம்களைச் சார்ந்த ஹமாஸ் என்ற இயக்கத்தின் படைப்பிரிவு ஓர் தாக்குதலை நடத்தினார்கள். இஸ்ரேலை அதிர்ச்சிக்குள்ளாக்கினார்கள்.

அந்தத் தாக்குதலைப் பற்றி, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அண்டோனி கவுட்ரஸ், இப்படிக் கூறினார் :

“The are fighting 56 years of suffocating occupation” அதாவது அவர்கள் 56 ஆண்டுகால மூச்சுத் திணறும் ஆக்கிரமிப்பை, எதிர்த்துப் போராடுகின்றனர்.

அடுத்த நாள் லெபனானில் இருந்த பெரிய இஸ்லாமிய இயக்கம் ஹிஸ்புல்லாஹ்! இஸ்ரேல் மீது தாக்குதலைத் தொடுத்தார்கள். அவர்கள் ஷியா பிரிவைச் சார்ந்தவர்கள். அவர்களின் தாக்குதலால் இஸ்ரேல் நிலைகுலைந்தது. பெருத்த சேதங்களுக்கு உள்ளானது.

அடுத்த ஹூதீஸ் - ஏமன் நாட்டைச் சார்ந்தவர்கள் தாக்குதலைத் தொடர்ந்தார்கள். அவர்களும் ஷியாப் பிரிவைச் சார்ந்தவர்கள்.

இவர்களுக்கெல்லாம் ஈரான் உதவி, அது ஷியா முஸ்லிம்களைக் கொண்ட நாடு. அங்கு நடப்பது இஸ்லாமிய ஆட்சி.

இப்போது இஸ்ரேலின் 78 ஆண்டுகால ஆக்கிரமிப்பை எதிர்த்து போர் செய்தவர்கள், தங்களின் உயிரைத் தந்தவர்கள் பெரும் பகுதி ஷியாக்கள். அவர்கள் சன்னி முஸ்லிம்களுக்காகச் சொல்லொண்ணாத் தியாகங்களைச் செய்துள்ளார்கள். ஆனால் அவர்கள் ஷியா-சன்னி எனப் பார்க்கவில்லை. அவர்கள் தங்கள் ஒருங்கிணைந்த முயற்சிக்கு தந்த பெயர் Axis of Islamic Resistence இஸ்லாமியப் போராளிகளின் அணி.

இதில் Islamic Resistence இஸ்லாமிய போராளிகள் என்ற உடனேயே அமெரிக்காவுக்கு (Allergy) ஓர் ஒவ்வாமை

ஐய்யய்யோ ஷியாக்களும்-சந்நிதிகளும் இஸ்லாத்தின் பெயரால் ஒன்று சேர்ந்துவிட்டார்களே! என்ற ஆதங்கம்.

பல ஆண்டுகள் - பலகோடி ரூபாயில் ஊட்டி வளர்த்தப் பிளவு ஒன்றுபட்டு விட்டதே என்ற ஆதங்கம்!

உடனேயே தங்கள் கைக்கூலிகளை ஏவினார்கள் - மீண்டும் HTS என்ற அமைப்பின் வழி அந்தப் பிரிவினையைக் கொண்டு வந்து விட்டார்கள். அந்தக் கைப்பிள்ளைகள் வழி இன்னொன்றையும் சாதித்துவிட்டார்கள். இஸ்ரேல் சிரியாவில் 500 கிலோ மீட்டர்களைக் கைப்பற்றிக் கொண்டது.

இந்தப் பிரிவினைகள் - இந்தச் சதிகள் எல்லாம் எப்படி உருவாகின என்பதை வைகறை விஷன் / வைகறை வெளிச்சம் அஃபிசியல் என்ற சமூக வலைதலங்களில் தந்திருகின்றோம். அதனைப் பார்த்து பயன்படுத்திக் கொள்ளுங்கள் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

**- MGM**

கடைசி செய்தி - சிரியாவின் பொதுமக்கள் இஸ்ரேலின் ஆக்கிரமிப்புகளுக்கு எதிராகப் போராடுகிறார்கள்.



# சம்பல் மஸ்ஜித்-ஐ தொடர்ந்து இன்னும் பல மஸ்ஜித்கள்!

## ஒரு பார்வை!

**மத** வழிபாட்டுத் தலங்களின் மீதான இந்திய நீதி மன்றங்களின் வழக்குகள் மிக ஆழமான வகுப்புவாத பிரிவினையைக் காட்டுகின்றன. சம்பலில் உள்ள 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மசூதியின் சமீபத்திய உச்ச நீதிமன்றத்தின் ஆய்வுக்கான உத்தரவானது, வன்முறையைத் தூண்டி நான்கு நபர்களை கொலைக்கு உள்ளாக்கியுள்ளது.

வழிபாட்டுத்தலங்கள் (சிறப்பு விதிகள்) சட்டம், 1991 வழிபாட்டு தலங்களுக்கு பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் போதும் டஜன் கணக்கான வழக்குகள் இந்தியாவின் பல்வேறு நீதிமன்றங்களிலும் நிலுவையில் உள்ளன!

இந்த வழக்குகளை பற்றிய ஒரு விரிவான பார்வையை இக்கட்டுரையில் காண்போம்.

**1. தீலே வாலி மசூதி,**
**லக்னோ - உத்தர பிரதேசம்**

2013ஆம் ஆண்டில் தீலே வாலி மசூதி இருந்த இடம் குறித்து, உரிமை கோரி லக்னோ நீதிமன்றத்தில் ஒரு சிவில் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டது. முகலாய ஆட்சியாளர் ஔரங்கசீப்பின் ஆட்சி காலத்தில் லக்ஷ்மன் தீலாவில் இருந்த இந்து மத கட்டமைப்பை இடித்துதான் தீலே வாலி மசூதி கட்டப்பட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

2017 ஆம் ஆண்டில், சிவில் நீதிபதி (மூத்த பிரிவு) லக்னோ இந்த வழக்கை ஏற்புடையது என்று தீர்ப்பளித்தார். இதற்கு எதிராக விதி O7 R11 CPC இன் கீழ் வாதத்தை நிராகரிக்க மசூதி நிர்வாகம் தாக்கல் செய்த விண்ணப்பத்தையும் நிராகரித்துவிட்டார்.

அதன்பிறகு, இந்த உத்தரவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மறுஆய்வு மனுவை கூடுதல் மாவட்ட நீதிபதி நீதிமன்றமும் தள்ளுபடி செய்துவிட்டது.

இந்த இரண்டு உத்தரவுகளையும் எதிர்த்து, மஸ்ஜித் தரப்பு அலகாபாத் உயர் நீதிமன்றத்தை நாடியது, இறுதியில் அலகாபாத் உயர் நீதிமன்றம் ஏப்ரல் 2023 இல் எதிர் தரப்பினரிடமிருந்து பதில்களைக் கோரியது.

அதே வருடம் தீலே வாலி மசூதியின் வளாகத்திற்குள் சென்று தரிசனம் மற்றும் சடங்குகளைச் செய்வதில், முஸ்லிம் சமூகத் தினர் தலையிடுவதை தடை செய்யும் உத்தரவு ஒன்றினைக் கோரி மற்றொரு வழக்கானது தாக்கல் செய்யப்பட்டது. இதற்கு பதிலளிக்கும் விதமாக மசூதியின் தரப்பில் வழிபாட்டுத் தலங்கள் சட்டம், 1991 மற்றும் வஃக்பு வாரிய சட்டம், 1995 ஆகியவற்றின் கீழ் இவ்வாறு உரிமை கோருவது தடை செய்யப்பட்டுள்ளது என வலியுறுத்தி வழக்கின் தன்மை ஏற்புடைய தன்று என கேள்விக்குள்ளாக்கினர் மசூதி நிர்வாகத்தினர். இருப்பினும் 2023 செப்டம்பரில் சம்பந்தப்பட்ட சிவில் நீதிபதி மசூதி தரப்பு எதிர் வழக்கை நிராகரித்துவிட்டார்.

இதன்பிறகு மசூதி நிர்வாகம் ஒரு மறுசீராய்வு மனுவை முன் வைத்தது, அதுவும் பிப்ரவரி 2024இல் தள்ளுபடி செய்யப்பட்டது.

## 2. குவ்வத்- உல்-இஸ்லாம் மசூதி-குதுப்மினார், டெல்லி.

2020ஆம் ஆண்டு மெஹ்ராளியில் உள்ள குதுப்மினார் வளாகத்திற்குள் அமைந்துள்ள குவ்வத்-உல் -இஸ்லாம் மசூதியானது 27 கோயில் களின் இடிபாடுகளை பயன்படுத்திக் கட்டப் பட்டதாகக் கூறி ஒரு சமண தெய்வத்தின் பெயரில் வழக்கொன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

தற்போதுள்ள இந்த மசூதியை கட்டு வதற்காக 1198 ஆம் ஆண்டில் முகலாய பேரரசர் குதுப் தீன் ஐபக்கின் ஆட்சியின் கீழ் சுமார் 27 கோவில்கள் அழிக்கப்பட்டதாக மேற்கண்ட வழக்கில் குற்றச்சாட்டாக வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்திய தொல்லியல் துறை, குதுப்மினார் வழிபாட்டுத்தலம் அல்ல அது மத்திய அளவில் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னம், அதன் தற்போதைய நிலையை மாற்ற முடியாது என்று கூறியதோடு அங்கு வழிபாடு நடத்தப்படவில்லை என்றால் மட்டுமே அந்த நினைவுச் சின்னம், நினைவுச்சின்னமாக பாதுகாக்கப்பட முடியும் எனவும் இந்திய தொல்லியல் துறை கூறியுள்ளது.

இறுதியில் சிவில் நீதிமன்றம் இந்த வழக்கானது வழிபாட்டுத்தலங்கள் சட்டம், 1991இன் கீழ் தடை செய்யப்பட்டுள்ளதாக கூறி இந்த மனுவை நிராகரித்துவிட்டது.

அதனுடன் “கடந்த கால தவறுகள் தற்போதைய அமைதியை சீர்குலைக்க அடிப் படையாக இருக்க முடியாது” என்றும் நாட்டின் “மதச்சார்பற்ற தன்மையை'' பேணுவதே வழிபாட்டுத்தலங்கள் சட்டத்தின் முக்கியமான நோக்கம் எனவும் கூறியுள்ளது.

இந்த சிவில் நீதிமன்ற உத்தரவை எதிர்த்து கூடுதல் மாவட்ட நீதிபதி முன்பு வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது. அடுத்த விசாரணை டிசம்பர் 12ஆம் தேதி நடைபெற உள்ளது.

## 3. ஞானவாபி மசூதி, வாரணாசி - உத்தரப்பிரதேசம்

1991ஆம் ஆண்டு காசி விஸ்வநாதர் கோவிலின் பக்தர்களால் ஒரு வழக்கு தொடரப் படுகிறது. அதில் அவர்கள் விஸ்வேஸ்வர் கோவிலை அழித்து முகலாயப் பேரரசர் ஔரங்கசீப் இந்த மசூதியை கட்டியதாக குற்றம் சாட்டி வழக்கினை தொடர்ந்தனர் எனினும் இந்த வழக்குவிசாரணை அப்போதே நிறுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 2021ல் பெண் பக்தர்களால் ஞானவாபி மசூதியில் உள்ள சில தெய்வங்களை வணங்குவதற்காக உரிமை கோரி மற்றொரு வழக்கொன்று தொடர்படு கிறது, இதன் தொடர்ச்சியாக வழக்கறிஞர் ஆணையர் (Advocate Commissioner) மசூதி வளாகத்திற்குள் ஆய்வு செய்யும் இடத்தில் சிவலிங்கம் இருப்பதாக கூறியதில்,மே 2022ல் இந்த வழக்கு பெரும் திருப்பத்தைக் கண்டது. அதனடிப்படையில் சிவலிங்கம் இருப்பதாக கூறப்படும் அந்த குறிப்பிட்ட இடத்தை சீல் வைக்கும்படி வாரணாசி விசாரணை நீதிமன்றம் உத்தரவிட்டது.

வாரணாசி நீதிமன்றத்தின் இந்த நடவடிக் கையானது முஸ்லிம்களின் தொழுகையை எந்த விதத்திலும் பாதிக்காது என்று கூறிய உச்ச நீதிமன்றம், பிறகு இந்த வழக்கை வாரணாசி விசாரணை நீதிமன்றத்திற்கு மாற்றவும் செய்தது.


vaigarai velicham official

2022 செப்டம்பரில், மசூதி நிர்வாகம் மேற்கண்ட வழக்கை, வழிபாட்டு தலங்களின் சட்டம் தடை செய்வதாகக் கூறி தாக்கல் செய்த மனுவினை வாரணாசி நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

2023-மே மாதம் அலகாபாத் உயர் நீதி மன்றமும் வாரணாசி நீதிமன்றத்தின் தீர்ப்பையே உறுதி செய்தது.

அதேசமயம் 2023 - டிசம்பரில் வேறு சில வழக்குகளின் ஏற்புடையமையை உயர்நீதி மன்றம் உறுதி செய்தது.

2023 ஜூலையில் சீல் வைக்கப்பட்ட அந்த இடத்தை விடுத்து மற்ற இடங்களை "அறிவியல் ஆய்வு" செய்யும்படி வாரணாசி நீதிமன்றம் இந்திய தொல்லியல் துறைக்கு (ASI) உத்தரவிட்டது.

ஆகஸ்ட் 4ஆம் தேதி தொல்லியல் துறை மேற்கொண்ட ஆய்வை நிறுத்த உச்சநீதி மன்றமும் மறுத்துவிட்டது.

ஜனவரி 2024இல் ஞானவாபி மசூதி வளாகத்தில் சீல் வைக்கப்பட்ட மசூதியின் அடித்தளத்தில் இந்து சடங்குகளை நடத்த வாரணாசி நீதிமன்றம் அனுமதி அளித்தது. இந்த உத்தரவை எதிர்த்து அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது.

ஏப்ரல் 2024 இல் மசூதியில் தொழுகை நடத்தலாம் மற்றும் தெஹ்கானாவில் (அடித் தளத்தில்) இந்து சடங்குகளை நடத்தலாம் என்று வாரணாசி நீதிமன்றம் கூறியதை மாற்றத் தேவையில்லை என உச்ச நீதிமன்றம் உத்தர வளித்தது.

சமீபத்திய உச்சநீதிமன்ற விசாரணையில் இது சம்பந்தப்பட்ட அனைத்து வழக்கு களையும் ஒருங்கிணைத்து வாரணாசி நீதிமன் றத்திலிருந்து அலகாபாத் உயர் நீதிமன்றத்திற்கு மாற்றக்கோரி விண்ணப்பம் தாக்கல் செய்யப் பட்டுள்ளதாக விண்ணப்பதாரர்கள் தெரிவித் திருந்தனர்.

அதேசமயம் மறுபுறம் வழிபாட்டு தலங்களின் சட்டத்தின் கீழ் வழக்கின் ஏற்புடைத் தன்மையை கருத்தில் கொண்டு, அதற்கு முன்னுரிமை அளித்து விசாரணை நடத்த வேண்டும் என மசூதி நிர்வாகம் வலியுறுத்தியது.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட பிறகு சீல் வைக்கப்பட்ட பகுதியை இந்திய தொல்லியல் துறை ஆய்வு செய்யக் கூறி எதிர்தரப்பினர் தொடுத்த வழக்கிற்கு பதில் அளிக்குமாறு மசூதி நிர்வாகத்தை அழைத்ததோடு இந்த வழக்கை டிசம்பர் 17ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தது.

### 4. கமால் மௌலா மசூதி - போஜ்ஷாலா வளாகம், மத்திய பிரதேசம்.

போஜ் ஷாலா,பதினொன்றாம் நூற்றாண் டைச் சார்ந்த இந்திய தொல்லியல் துறையால் பாதுகாக்கப்படக்கூடிய ஒரு நினைவுச் சின்னம்.


இந்த நினைவுச் சின்னத்தை இந்துக்கள் சரஸ்வதி தேவிக்கு அர்ப்பணிக்கப்பட்ட கோவிலாகவும், முஸ்லிம்கள் கமால் மௌலா மசூதியாகவும் கருதுகின்றனர்.

2003ஆம் ஆண்டு உடன்படிக்கையின் படி, போஜ்ஷாலா வளாகத்தில், செவ்வாய்க்கிழமை களில் இந்துக்கள் பூஜைகளையும், வெள்ளிக் கிழமைகளில் முஸ்லிம்கள் தொழுகைகளையும் நடத்துகின்றனர்.

2022ஆம் ஆண்டில் இந்து முன்னணி நீதிக்கான அமைப்பானது (Hindu front for justice) மத்திய பிரதேச உயர் நீதிமன்றத்தில் போஜ்-ஷாலா வளாகத்தில் முஸ்லிம்கள் தொழுகை நடத்துவதை தடுக்க கோரி ரிட் மனு ஒன்றை தாக்கல் செய்தது.

மார்ச் 2024 இல் போஜ்ஷாலா வளாகத்தில் அகழ்வாராய்ச்சியை நடத்தும் படி மத்திய பிரதேச உயர் நீதிமன்றம் இந்திய தொல்லியல் துறைக்கு உத்தரவிட்டது.

இதனை எதிர்த்து, நினைவுச் சின்னத்தின் கட்டமைப்பை மாற்றும் எந்த ஆராய்ச்சியையும் தொல்லியல் துறை மேற்கொள்ளக்கூடாது என மசூதி தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது, இதன் அடிப்படையில் உச்ச நீதிமன்றமும் இதனை தடுத்தது. மேலும் உச்ச நீதிமன்றத்தின் அனுமதியின்றி எந்த நடவடிக்கையும் மேற் கொள்ளக் கூடாது எனவும் உத்தரவிட்டது. இந்த



வழக்கு டிசம்பர் 20ஆம் தேதி உச்ச நீதிமன்றத்தில் தற்காலிகமாக பட்டியலிடப்பட்டுள்ளது.

**5. ஷம்சி ஷாஹி மசூதி, பதாவுன், உத்தரப்பிரதேசம்.**

2022ஆம் ஆண்டு நீலகண்ட மகாதேவ் கோவில் இருந்த இடத்தில் தான் தற்போது ஷம்சி ஷாஹி மசூதி இருப்பதாகக் கூறி பதாவுன் மாவட்ட நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

மன்னர் லகன்பால் கட்டிய கல் கோயிலை இடித்து, கிபி 1222ல் பேரரசர் ஷம்ஸ் உத்தின் இல்துமிஸ் என்பவரால் கட்டப்பட்டதே ஷம்சி ஷாஹி மசூதி என பதாவுன் அரசாங்கப் பதிவை அடிப்படையாகக் கொண்டு அந்த இடத்தில் வழிபாடு நடத்த மனுதாரர் அனுமதி கோரினார்.

மசூதியானது 850 வருட பழமையானது மற்றும் இதற்கு முன் அந்த இடத்தில் கோவில் இல்லை .

சிவில் நீதிபதி (மூத்த பிரிவு), வழக்கின் பிரதிவாதிகள் ஷம்ஸி ஷாஹி இன்டெஜாமியா மசூதி கமிட்டி மற்றும் வக்பு வாரியம் மற்றும் அரசாங்கத்திடமும் (தகவல்கள் படி) இதனைப் பற்றி கேட்டுள்ளார்.

பிரதிவாதிகள் அல்லது எதிர்மனுதாரர்கள் விதி 07 R11 CPCஇன் கீழ் வழக்கை நிராகரிக்க வேண்டும் என்று கோரியுள்ளனர் மற்றும் தொல்லியல் துறையின் அறிக்கையும் சமர்ப்பிக் கப்பட்டுள்ளது.

இந்த விசாரணை டிசம்பர் முதல் வாரத்திற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**6. அடாலா மஸ்ஜித், ஜான்பூர், உத்தரப்பிரதேசம்.**

அடாலா மசூதி முதலில் அடாலா மாதா வுக்கு அர்ப்பணிக்கப்பட்ட கோவில் என்று கூறி ஆக்ரா நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மசூதியானது தற்போது உத்தரப் பிரதேசம் சன்னி மத்திய வக்ஃபு வாரியத்தின் கீழ் உள்ளது.

துக்ளக் வம்சத்தை சேர்ந்த ஃபெரோஸ் ஷாவின் பெயரில் கோவிலானது மசூதியாக மறுசீரமைக்கப்பட்டதாக மனுதாரர்கள் குற்றம் சாட்டினர்.


vaigarai velicham official

## 7. ஷாஹி ஈத்கா மசூதி- மதுரா, உத்தரப்பிரதேசம்.

கிருஷ்ணர் பிறந்த இடமான மதுராவில் உள்ள கோவிலை இடித்து ஔரங்கசீப் காலகட்டத்தில் மசூதி கட்டப்பட்டதாக இந்த சர்ச்சை எழுந்தது.

1968ஆம் ஆண்டில் கோவில் மேலாண்மை - ஸ்ரீ கிருஷ்ணா ஜன்மஸ்தான் சேவா சன்ஸ்தான் மற்றும் ஷாஹி மஸ்ஜித் அறக்கட்டளை இடையே ஒரு சமரச ஒப்பந்தம் ஏற்படுத்தப் பட்டது. இதன் அடிப்படையில் இரண்டு வழிபாட்டு தலங்களையும் ஒரே நேரத்தில் செயல்பட அனுமதி இருந்தது.

2021இல் அந்த ஒப்பந்தத்தின் செல்லுபடி யாகும் தன்மையை குறித்து சந்தேகித்து இந்த ஒப்பந்தம் மோசடியாக செய்யப்பட்டது மற்றும் சட்டப்படி செல்லுபடி ஆகாது என வழக்கினை தாக்கல் செய்தவர்கள் தரப்பில் வாதிட்டனர் மேலும் சர்ச்சைக்குரிய இடத்தில் தங்களது வழிபாட்டினை நடத்தவும் ஷாஹி ஈத்கா மசூதியை அகற்றவும் கோரினர்.

மே 2023 அலகாபாத் உயர்நீதிமன்றம், மதுரா நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த அனைத்து வழக்குகளையும் தனக்குத்தானே மாற்றிக் கொண்டது. இதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மசூதி நிர்வாகம் ஒரு வழக்கினை தொடர்ந்தது, அதன்பிறகு உத்தரப்பிரதேச சன்னி வக்ஃபு வாரியமும் வழக்கு தொடர்ந்தது.

ஷாஹி ஈத்கா மசூதியை ஆய்வு செய்ய நீதிமன்ற ஆணையரை நியமிக்கக் கோரி எழுப் பப்பட்ட மனுவிற்கு 2023 டிசம்பரில் உயர் நீதிமன்றம் அனுமதி அளித்தது. இதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மசூதி நிர்வாகம் தொடுத்த வழக்கின் அடிப்படையில் நீதிமன்ற ஆணையரை நியமிக்கும் திட்டம் நிறுத்தப் பட்டது.

ஆனால் ஆகஸ்ட் 1ஆம் தேதி மசூதி தரப்பின் சார்பில், எதிர் மனுதாரர்களின் வழக்கின் ஏற்புடைத் தன்மையை மையப்படுத்தி அதனை நிராகரிக்குமாறு கோரிய மனுவை தள்ளுபடி செய்தது.

மேலும்

1. வழிபாட்டு தலங்கள் சட்டம், 1991 (The Places of Worship Act,1991)

2. வரம்புச் சட்டம், 1963 (Limitation Act 1963) மற்றும்

3. குறிப்பிட்ட நிவாரணச் சட்டம் (Specific Relief Act,1963) ஆகியவற்றை மேற்கோள் காட்டிய வாதங்களையும் உயர்நீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

ஆகஸ்ட் 1 ஆம் தேதி உயர் நீதிமன்றம் அளித்த இந்த தீர்ப்பை எதிர்த்து, மசூதி தரப்பு உச்ச நீதிமன்றதில் மேல் முறையீடு செய்ததை தற்போது உச்ச நீதிமன்றம் ஆய்ந்துவருகிறது.

இந்த வழக்கு டிசம்பர் 9-ம் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## 8. ஜாமா மஸ்ஜித், சம்பல், உத்தரப்பிரதேசம்.

சந்தௌசியில் உள்ள ஷாஹி ஜமா மஸ்ஜித் தானது 1526 ஆம் ஆண்டில் முகலாய பேரரசர் பாபரால் அங்கிருந்த ஸ்ரீஹரிஹர் கோவிலை (விஷ்ணுவின் கடைசி அவதாரமான கல்கிக்கு அர்ப்பணிக்கப்பட்டது) இடித்து கட்டப்பட்ட தாகக் கூறி எட்டு நபர்களால் இந்த ஆண்டு ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

நவம்பர் 2024இல் ஒரு சிவில் நீதிபதி, வழக்கறிஞர் ஆணையர் ஒருவரை மசூதியை ஆய்வு செய்ய உத்தரவிட்டதற்கு "Ex parte" உத்தரவை பிறப்பித்தார்.

இந்தியன் எக்ஸ்பிரஸ் வெளியிட்ட அறிக்கையின்படி விண்ணப்பம் சமர்ப்பிக்கப் பட்ட மூன்று மணி நேரத்திற்குள் உத்தரவு நிறைவேற்றப்பட்டது தெரியவருகிறது, இதனால் இந்த விஷயம் வன்முறையைத் தூண்டி 4 பேர் கொலைக்கு உள்ளாவதற்கும் பலர் காயமடைவதற்கும் காரணமாக அமைந்தது.

மசூதியை ஆய்வு செய்ய உத்தரவிட்ட விசாரணை நீதிமன்ற உத்தரவிற்கு எதிராக சம்பல் ஷாஹி ஜாமா மஸ்ஜித் குழு உச்ச நீதிமன்றத்தை அணுகியது. அதில்,

1. முஸ்லிம் தரப்பிற்கு எந்த அறிவிப்பும்



கொடுக்காமல் ஆய்வுக்கான உத்தரவு அவசரமாக நிறைவேற்றப்பட்டுவிட்டது.

2. இந்த வழக்கு, வழிபாட்டுத்தலங்கள் சட்டத்தால் தடை செய்யப்பட்ட ஒன்று மற்றும்

3. மசூதி (இந்திய தொல்லியல் துறையால்) பாதுகாக்கப்பட்ட 16ஆம் நூற்றாண்டின் நினைவுச் சின்னமாகவும் உள்ளது என்றும் வாதிட்டனர்.

சமீபத்தில் உச்ச நீதிமன்றம், ஷாஹி ஜாமா மஸ்ஜிதுக்கு எதிரான வழக்கில், உயர் நீதி மன்றத்தின் ஆய்வுக்கான உத்தரவிற்கு எதிராக ஷாஹி ஜாமா மசூதி கமிட்டி தாக்கல் செய்த மனுவை பட்டியலிடும்வரை இந்த வழக்கை தொடர வேண்டாம் என சம்பல் விசாரணை நீதிமன்றத்தை கேட்டுக்கொண்டது.

இதற்கிடையில் வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கை சீல் செய்து வைக்கப்பட வேண்டும் அதனை திறக்க கூடாது என்றும் உத்தர விட்டுள்ளது.

மாவட்ட நிர்வாகத்தால் அமைதி மற்றும் நல்லிணக்கம் பராமரிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய உச்சநீதிமன்றம், இந்த விஷயத்தை நிலுவையில் வைத்ததோடு மூன்று வேலை நாட்களுக்குள் மசூதி தரப்பு மனுவை உயர் நீதிமன்றத்தில் பட்டியலிடவும் உத்தர விட்டது.

### 9. உத்தரப்பிரதேசத்தின் ஃபதேபூர் சிக்கிரியில் உள்ள ஷேக் சலீம் சிஷ்டியின் ஜாமா மஸ்ஜித் மற்றும் தர்கா

ஃபதேபூர் சிக்ரி கோட்டைக்குள் (மற்றும் அருகிலுள்ள மசூதி) உள்ள ஷேக் சலீம் சிஷ்டி தர்கா முதலில் காமக்யாதேவி கோவிலாக இருந்தது என்று கூறி இந்த ஆண்டு ஆக்ரா நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப் பட்டது.

அதேசமயம் மற்றொரு வழக்கில் கிருஷ் ணரின் சிலை ஜாமா மசூதியின் படிக்கட்டு களுக்கு அடியில் புதைக்கப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டது.

சமீபத்தில் இந்த வழக்கில் உத்தரபிரதேச சன்னி வக்பு வாரியம், தர்கா நிர்வாக குழு மற்றும் ஜாமா மஸ்ஜித் நிர்வாகக்குழு ஆகிய வற்றிற்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

### 10. அஜ்மீர் ஷெரீப் தர்கா, ராஜஸ்தான்

செப்டம்பர் 2024இல் ராஜஸ்தானின் அஸ்மீர் ஷெரீப் தர்காவின் இடத்தில் ஏற்கனவே ஒரு சிவன் கோவில் இருந்ததாகவும் அதனால் இந்துக்களுக்கு வழிபாட்டு உரிமை கோரி இந்து சேனா தலைவர் விஷ்ணுகுப்தா என்பவர் அஜ்மீர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கை தாக்கல் செய்தார்.

வழக்கை தொடுத்தவர் (பகவான் ஸ்ரீ சங்கத் மோச்சன் மகாதேவ் விராஜ்மானின் நண்பர் என்ற நிலையில்) தர்காவானது பழைய இந்து கோவிலின் இடத்தில் கட்டப்பட்டதாக தெரிகிறது எனவும், ஓரளவு ஏற்கனவே இருந்த கட்டமைப்புகளைச் சேர்ப்பதன் மூலமும் ஆரம்பகால முஸ்லிம் ஆட்சியாளர்கள் கால கட்டங்களில் இருந்த கோவில்களின் அமைப்பில் இருப்பதைப் போன்றே உள்ளது எனவும் கூறியிருந்தார்.

நவம்பர் 27 அன்று சம்பந்தப்பட்ட நீதிமன்ற மானது தர்கா குழு, சிறுபான்மையினர் விவகார அமைச்சகம் மற்றும் இந்திய தொல்லியல் துறை (ASI) ஆகியவற்றிற்கு நோட்டீஸ் அனுப்பியது. அடுத்த விசாரணை டிசம்பர் 20ஆம் தேதிக்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### 11. தாஜ்மஹாலுக்கு எதிரான வழக்கு

தாஜ்மஹால் முதலில் “தேஜோ மஹாலயா” என்று அழைக்கப்படும் ஒரு சிவன் கோவில் என்றும், நினைவு சின்னத்தின் உண்மையான வரலாற்றை ஆய்வு செய்ய “உண்மை கண்டறியும் குழுவை” அமைக்க வேண்டும் என்றும் கூறி 2022 ஆம் ஆண்டில் அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது, 2022ஆம் ஆண்டில் உயர் நீதிமன்றம் அந்த மனுவை தள்ளுபடி செய்துவிட்டது. உச்ச நீதிமன்றமும் இதனை உறுதிப்படுத்தியது.

நன்றி - Live Law


vaigarai velicham official



# லெபனான்-ஹிஸ்புல்லாஹ் VS இஸ்ரேல் ஒப்பந்தம்

**27, நவம்பர் 2024** அதிகாலையில் (4 மணி) இந்த ஒப்பந்தம் செயலில் வந்தது. ஒப்பந்தத்தின் பல பிரிவுகள் ஹிஸ்புல்லாவுக்கு எதிரானவை. அவை,

**பிரிவு-1** ஹிஸ்புல்லாவே, இந்த ஆயுதந் தாங்கிய குழுக்களோ இஸ்ரேலைத் தாக்கிடக் கூடாது.

**பிரிவு-2** இஸ்ரேலும், தரை வழியாகவோ, வான் வழியாகவோ, கடல் வழியாகவோ லெபனானின் எந்தப் பகுதியையும் தாக்கிடக் கூடாது. ஆனால் இதுவரை 180 முறை இஸ்ரேல் இந்தப் பிரிவை மீறி இருக்கின்றது.

**பிரிவு-3** லெபனானும் - இஸ்ரேலும் - ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானம் 1701-ஐ அங்கீகரிக்க வேண்டும்.

(இந்த தீர்மானத்தை இஸ்ரேல் 35,000 முறை மீறி இருக்கின்றது. இது இப்போதை போருக்கு முன் - அதாவது அக்டோபர்-7,2023 முன் வரை நடந்த மீறல்கள்)

**பிரிவு-4** இந்த ஒப்புதல்கள் லெபனானுக்கோ அல்லது இஸ்ரேலுக்கோ இருக்கும் தற்காப்பு உரிமையைப் பாதிக்காது.

**பிரிவு-5** லெபனானுடைய அரசு அங்கீகாரம் பெற்ற பாதுகாப்பு அமைச்சகம்தான் ஆயுதங்களை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்ட அமைப்பு. அல்லது அயுதந் தாங்கிய தாக்குதலை நடத்த அனுமதிக்கப்பட்டது.

**பிரிவு-6** லெபனானின் ஆயுத உற்பத்தி ஆயுதங்கள் தொடர்பான பொருள்கள் கொடுக்கல் வாங்கல் அனைத்தும் லெபனான் அரசின், மேற்பார்வை, கட்டுப்பாடு ஆகிய வற்றின் கீழ்தான் நடந்திட வேண்டும்.

**பிரிவு-7** சட்டத்திற்குப் புறம்பான எல்லா ஆயுத நிறுவனங்களையும் அழித்துவிட வேண்டும்.

**பிரிவு-8** எல்லா இராணுவத்தளங்களும், கட்டுமானங்களும் அழிக்கப்பட வேண்டும். இதர சட்ட விரோதமான ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்படும்.

**பிரிவு-9** இவற்றையெல்லாம் கண்காணிக்க ஓர் குழு அமைக்கப்படும் அந்தக்குழு இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் ஏற்புடையதாக இருக்கும்.

**பிரிவு-10** இஸ்ரேல் அல்லது லெபனான் போர் நிறுத்த விதிகளை மீறினால், UNFIL என்ற ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி பாதுகாப்புக் குழுவிடம் புகார் செய்யும்.

**United Nations Interim Force in Lebenon**

(இந்த ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி பாதுகாப்புக் குழுவை இஸ்ரேல் கிஞ்சிற்றும் வகை வைப்பதில்லை. போர் நடந்து கொண்டி

ருந்தபோது பலமுறை இந்த ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி பாதுகாப்பு குழுவை பலமுறை தாக்கியது. இந்தக் குழு பல நாடுகளின் படைகளைக் கொண்டது. இந்தியாவின் சார்பில் 938 இராணுவத்தினர் இதில் இடம் பெறுகின்றார்கள். சுருங்கச் சொன்னால் இந்த அமைதி பாதுகாப்புக்குழு ஒரு செல்லாக்காசு)

**பிரிவு-11** லெபனான், படைகள் மட்டுமே எல்லா எல்லைகளையும் பாதுகாக்கும்.

குறிப்பு: தெற்கு லெபனானின் எல்லையில் லெபனான் படைகள் மட்டுமே இருக்கும்.

**பிரிவு-12** இஸ்ரேல் பூளூலைன் - நீல எல்லைக்கோடு என்ற பகுதிக்குப் பின்னால் வந்துவிட வேண்டும். லெபனானின் எந்தப் பகுதியில் இருக்கக்கூடாது - இப்படிப் பின்னே வந்திட அது 60 நாள்கள் வரை எடுத்துக் கொள்ளலாம்.

இந்த புளூலைன் - என்ற எல்லைக்கோடு 1978, 1982களில் லெபனானை இஸ்ரேல் ஆக்கிரமித்தபோது சர்வதேச உடன்படிக்கை களின் கீழ் வகுக்கப்பெற்றது.

இப்போது நடந்த தாக்குதலில், இஸ்ரேல் லெபானில் ஒரு அங்குலத்தைக்கூட பிடித்திட இயலவில்லை. ஆனாலும், அதற்கு 60 நாள்கள் காலக்கட்டம் கொடுக்கப்பட்டுள்ளது. அது ஹிஸ்புல்லாஹ் இல்லாத ஓர் எல்லைப் பகுதியை இஸ்ரேலுக்கு 60 நாள்கள் திறந்துவிடுவதற்கான ஒரு பெரிய சதி.

### போர் நிறுத்தத்திற்குப் பின்

போர் நிறுத்த ஒப்பந்தம், இந்த வகையில் ஒரு பெரும் சதி. இப்போதைய இஸ்ரேலின் நடவடிக்கைகளும் அதையே காட்டுகின்றன.

இந்த ஒப்பந்தத்தின் பிரிவுகளைப் பார்த்தால் ஹிஸ்புல்லாஹ்வை நிராயுதபாணியாக ஆக்கிட அனைத்தும் உண்டு.

இந்நிலையில் ஹிஸ்புல்லாஹ் இந்த ஒப்பந் தத்தை எப்படி ஒத்துக்கொண்டது. இந்த ஒப்பந்தம் முழு அளவில் செயல்படும் என்றால், ஹிஸ்புல்லாஹ் சாறெடுக்கப்பட்ட ஓர் சக்கை யாக மாறிவிடும். அதற்கு வழிவிட்டால், ஹிஸ்புல்லாஹ்வின் இத்தனை நாள் ஆயுத சேகரிப்பும் சுரங்கங்களில் செலவிட்ட 16 ஆண்டுகளும் இவற்றிலெல்லாம் கொட்டிய உழைப்பும், பணமும் வீணாகிவிடும். ஒருவேளை அஃதோர் சமுதாய சேவை அமைப்பாக மட்டும் செயல்பட இயலும்.

அதாவது எந்த நோக்கத்திற்காகத் தொடங்கப்பெற்றதோ, அந்த இலட்சியம் நிறைவேறாமலேயே போய்விடும்.

ஆனால் அத்துணை இழித்த வாயர்களல்ல ஹிஸ்புல்லாஹ்வினர். அவர்கள் தொடர்ந்து என்ன உத்திகளைக் கையாளுகின்றார்கள். என்பதை இனிவரும் நாள்களில் அவர்கள் என்ன செய்யப் போகின்றார்கள் என்பதை வைத்தே முடிவு செய்ய இயலும்.

அதேபோல் நாங்கள் காஸாவிலுள்ள போராளிகளோடு நிற்போம். அவர்களைக் கைவிடமாட்டோம். அவர்களுக்கு வேறு வழிகளில் உதவி செய்வோம் எனக்கூறி இருக் கின்றார்கள். இதெல்லாம் எப்படி சாத்தியப் படும் என்பதற்கு காலந்தான் பதில் சொல்லிட வேண்டும்.

### ஹஸன் நஸருல்லாஹ்

ஹஸன் நஸருல்லாஹ் அவர்கள் ஷஹீத் ஆக்கப்படுவதற்கு முன்பு, அவரிடம் பேச்சு வார்த்தைக்குச் சென்றபோதெல்லாம் அவர், காஸாவில் போராடுபவர்களோடு ஒப்பந்தம் செய்தால்தான் நாங்கள் தாக்குதலை நிறுத்து வோம் என்றார்கள்.

ஆனால் ஹஸன் நஸருல்லாஹ்வின் இடத் திலிருக்கும் ஷேஹ் நயீம் காஸம் அவர்கள் காஸாவில் போர் ஒப்பந்தம் ஏற்படாமலேயே போரை நிறுத்தி ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண் டார்கள். இதற்கு இன்றளவும் ஓர் ஏற்றுக் கொள்ளும்படியான காரணத்தைச் சொல்ல வில்லை. டிசம்பர் 6,2024க்குள் இரண்டுமுறை பேசிவிட்டார். ஆனால் ஒரு காரணத்தையும் சொல்லிடவில்லை.

மேலெழுந்த வாரியான காரணம் ஒன்றை சொல்லுகின்றார். அது வரலாற்றில் நாங்கள் இன்றளவுமில்லாத ஓர் நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம் என்பதே.

### ஹிஸ்புல்லாஹ்வின் சாதனைகள்

இந்த ஒரு விஷயத்தையும் விட்டுவிட்டால்,


vaigarai velicham official

ஹிஸ்புல்லாஹ் இஸ்ரேலுக்கு தந்த அடி வரலாறு காணாதது. இஸ்ரேலின் இராணுவ பலத்தை அடித்து நொறுக்கியது. இதனால் இஸ்ரேலின் போர் செய்யும் ஆற்றல் பெரிய அளவில் அழிந்தது.

அதேபோல் இஸ்ரேலினுடைய இராணுவ உபகரணங்களைத் தயாரிக்கும் ஆலைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டன.

இஸ்ரேலின் கப்பல் படையை பெருமளவில் சேதப்படுத்தியது.

அதேபோல் அதனுடைய ஆலைகளை - தொழிற்சாலைகளை நசிந்துபோகச் செய்தது. இந்தப் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து இஸ்ரேல் வெளியே வந்திட பல ஆண்டுகள் ஆகும் என்பது இஸ்ரேல் மற்றும் பொது பொருளாதார நிபுணர்களின் கருத்து.

4,00,000 இஸ்ரேலியர்கள் தொடர்ந்து பதுங்கும் குழியில் இருந்தார்கள். பின்னர் பதுங்கு குழிகளில் Safety Rooms என்ற இடம் பற்றாக்குறையால், பாதுகாப்பு அறைகளுக்குள் பொது இஸ்ரேலியர்கள் தஞ்சம் புகுந்திட வேண்டியது வந்தது.

**ஹைஃபா**

இஸ்ரேலின் மிகப்பெரிய பொருளாதார நகரம் என அறியப்பட்ட ஹைஃபா தொடர் தாக்குதலால் தொலைந்துபோனது.

டெல்அவிவ் - ஹைஃபா, அக்கிரி ஆகிய இடங்கள் பல நாட்கள் ஆள் நடமாட்டமே இல்லாமல் வெறிச்சோடி போய்க்கிடந்தது.

ஹைஃபாவிலிருந்த 81,500 இஸ்ரேலிய இராணுவ கம்பெனிகள் அழிக்கப்பட்டன.

**முதலீடுகள்**

அதனுடைய பெரிய முதலீட்டாளர்கள் எல்லாம், தங்கள் முதலீடுகளில் கையிலே அகப்பட்டதை எடுத்துக்கொண்டு, வெளிநாடு களுக்குச் சென்றுவிட்டார்கள். இதன்வழி 73% முதலீடுகள் இஸ்ரேலைவிட்டு வெளியேறி விட்டன.

உலகெங்கும் பாலஸ்தீன மக்களுக்காகப் பேராடிய மக்கள், கொடுத்த அழுத்தங்களால், பல நாடுகள் இஸ்ரேலிலும், உலகிலுள்ள இஸ்ரேலிய கம்பெனிகளும் முதலீடு செய்வதை நிறுத்திக்கொண்டன. இதனால் ஏற்பட்ட இழப்புகளைவிட ஹிஸ்புல்லாஹ்வின் தாக்குதல்கள் ஏற்பட்ட இழப்புகள் அதிகம்.

தாஸ் ஹமாயிம் என்ற இடத்தில் இஸ்ரேல் ஆயிரக்கணக்கான கோடியில் நிர்மாணிக்க இருந்த மிகப்பெரிய தொழில் நிறுவனங்கள் அழிக்கப்பட்டன. இதில் நெதன்யாஹூவோ அதிர்ந்து போனார். இந்தப் பொருளாதார இழப்புகள், இஸ்ரேல் போர் ஒப்பந்தத்திற்கு விரைந்ததற்கு மிக முக்கியமான காரணங்களில் ஒன்று என்பது பொருளாதார நிபுணர்களின் கருத்து.

**ஹிஸ்புல்லாஹ்விடம் தோல்வியை ஒத்துக்கொண்ட நெதன்யாஹூ**

நான் லெபனானில் ஒரு பாதுகாப்பு வளையத்தை ஏற்படுத்தப் போகின்றேன். அது பாதுகாப்பைத் தரும். அந்தப் பின்னணியில் வடக்கு இஸ்ரேலில் இருந்து வெளியேற்றப்பட்ட Northern Gaza Refugess அகதிகளை அங்கே கொண்டு குடியமர்த்துவேன் என்ற இலக்கு ஈடேறவில்லை.

லெபனானுக்குள் ஓர் அங்குலம் இடத்தைக் கூட கைப்பற்ற இயலவில்லை. ஆனால் வடக்கு காஸாவிலிருந்து டெல் அவிவ் வரை ஏற்பட்ட இழப்புகளுக்கு அளவே இல்லை.

இதனால் தோல்வியை ஒத்துக்கொண்டு அமெரிக்காவின் கால்களில் வீழ்ந்து ஒப்பந் தத்தை ஏற்படுத்திக் கொண்டது.

கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்ட வில்லை என்ற கதையாக, ஒரு புருடாவை விட்டார் நெதன்யாஹூ.

அது அமெரிக்கா மிரட்டியதால்தான், நான் போர் ஒப்பந்தத்தை ஒத்துக்கொண்டேன் என்பதாகும்.

ஆனால் இது ஜமுக்காளத்தில் வடிகட்டின பொய். நெதன்யாஹூதான் அமெரிக்காவின் கால்களில் விழுந்து இந்த ஒப்பந்தத்தை ஒத்துக்கொண்டு ஹிஸ்புல்லாஹ்வின் தாக்குதல்களிலிருந்து தப்பித்துக் கொண்டது.

- MGM



# தலீத் போராளி வி.டி.இராஜசேகர் மரணம்

## 1932 - நவ.29,2024

- மு. குலாம் முஹம்மது

**தலீத் போராளிகள் எல்லோரையுமே தலீத்களே சில நேரங்களில் கண்டுகொள்வதில்லை.**

நான் அவரை 30 ஆண்டுகளாகத் தொடர்ந்து சந்தித்து வந்தேன்.

அவர் ஓர் பத்திரிகையாளர் என்ற அளவில் தான் தன் வாழ்க்கையைத் தொடங்கினார். ஆங்கில நாளேடான இந்தியன் எக்ஸ்பிரஸ்-இல் 25 ஆண்டுகள், பல நிலைகளிலும் பணியாற்றி னார். பின்னர் 1981இல் தலீத் வாய்ஸ் என்ற ஆங்கில இதழ் மாதமிருமுறையைத் தொடங் கினார். அத்தோடு இணையதள இதழாகவும் அது வெளிவந்தது.

இந்த இதழ் முதல் இதழ் முதலே அவரை சந்தித்து வந்தேன்.

அவருடைய ஆக்கங்கள் பலவற்றை நான் நிறுவி நடத்தி வந்த "சிம் செய்தி மடல்", "விடியல் வெள்ளி", பின்னர் "வைகறை வெளிச்சம்" ஆகியவற்றில் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கின்றேன்.

வி.டி.இராஜசேகர் அவர்களின் பெங்களூரு இல்லத்தில் வைத்துத்தான் அவரை சந்தித்தேன். என்னோடு தலீத் ஏழுமலையும் வந்திருந்தார். பின்னர் அவரின் என் பெயரை தலீத் எழில்மலை என மாற்றிக்கொண்டார்.

எங்கள் இருவரிடமும் தலீத் வாய்ஸை தமிழில் கொண்டு வந்திடும் பொறுப்பை ஒப்படைத்தார். இந்நிலையில் தலீத் எழில் மலை, மத்திய அமைச்சரனார். அதன்பின் அவர் காணாமல் போய்விட்டார் என்றே சொல்ல வேண்டும்.

VTR ஜாதிய அடுக்குமுறையை கடுமையாகச் சாடினார். சர்வதேச அமைப்புகளால் கண்ணியப் படுத்தப்பட்டார்.

கடல் கடந்தும், சென்றார் அங்கும் மேலை நாடுகளில் இருக்கும் நிறவெறியை விடக் கேவலமானது இந்தியாவின் தீண்டாமை என்பதை விளக்கினார்.

இந்தியாவின் வி.டி.இராஜசேகருக்கு எதிராக சங்கப்பரிவாரம் எழுந்தது. அவருக்கு எதிராக தேசத் துரோக வழக்குகளைப் பதிவு செய்தார்கள்.

**இதனால் அவர் கைது செய்யப் பட்டார். சிறையில் அடைக்கப்பட்டார். அவருடைய பாஸ்போர்ட் முடக்கப் பட்டது. அதனை உச்ச நீதிமன்றம் வரை சென்று மீட்க முற்பட்டார்.**

### தாஃவா

வி.டி.இராஜசேகர் புத்தமதத்தில் நம்பிக்கைக் கொண்டவராக இருந்தார். தன்னை சந்திக்கும்


vaigarai velicham official

தலீத்களை புத்த மதத்திற்கு வந்துவிடுங்கள் என அழைப்பார். இதைத்தான் உறுதியாகப் பிடித்திருந்தார்.

நான் புத்த மதத்திற்கு சென்றவர்கள், முழுமையாக விடுதலை அடைந்திடவில்லை, மாறாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்கள். முழுமையாக விடுதலையடைந்திருக்கின்றார்கள் எனச் சொல்வேன்.

கம்யூனிசத்தை ஏற்றுக்கொண்டு ஜாதியத்தை ஒழிக்கலாம், சமத்துவ சமுதாயத்தை அமைக்கலாம் என்று போனவர்களும் இறுதியில் அங்கு தீர்வு இல்லாததால் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்பேன்.

நீ சொல்வது உண்மைதான். இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட தலீத்கள் விடுதலை அடைந்தார்கள் என்பது என்னவோ உண்மைதான்.

ஆனால் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து தலீத்கள் சனாதனத்திற்கு எதிராகப் போராடுவதை நிறுத்தி விடுகின்றனர். குறிப்பாக உங்களிடையே தப்லீக் ஜமாஅத் அவர்களைப் பிடித்துக் கொண்டால் எல்லாம் பாழ்பட்டுப் போகின்றது. காலப்போக்கில் பொது அறிவே இல்லாதவர்களாகவே ஆகிவிடுகின்றார்கள்.

இந்நிலையில் இந்திய மாணவர் இஸ்லாமிய அமைப்பு அதைத் தொடர்ந்து நான் நிறுவி நடத்திவந்த மனித நீதி பாசறை இவற்றையெல்லாம் அவர் (VTR) அறிந்திருந்தார்.

நான் சொன்னேன்.

"நாங்கள், எல்லா அநியாயங்களுக்கும் எதிராகப் போராடுகின்றோம். குறிப்பாக சங்கப் பரிவாரத்தின் எல்லா தகிடு தத்தங்களுக்கும் எதிராகப் அவர்களுக்குப் புரியும் வகையில் போராடுகின்றோம்" (என்றேன்)

ஏற்கெனவே மனித நீதிப்பாசறையின் செயல்களையெல்லாம் தினமும் பத்திரிகைகள் வெளியிட்டன. இதனால், அவர் நமது அநீதிக்கெதிரான பெரும் போரைப் பற்றி நன்றாகத் தெரிந்திருந்தார். அதனால் என்னிடம் 'நீ தலீத்களை உன்னுடைய இஸ்லாத்திற்கு மாற்றிக் கொள் மற்ற அமைப்புகளின் இஸ்லாத்திற்கு வேண்டாம்' என்றார்.

**இஸ்லாத்தின் யதார்த்தமும் - மத சடங்குகளும் Spirit vs Ritual**

போர்க்குணம் கொண்ட (VTR) தலீத்கள், இஸ்லாத்திற்குப் போய்விட்டால் ஆண்டாண்டு காலமாக, அவர்கள் நடத்திவந்த இந்துத்துவ பாசிச எதிர்ப்போர் பாழ்பட்டு போகும் என எண்ணினார்.

உன்னுடைய இஸ்லாம், இதர இயக்கங்களின் இஸ்லாம் என வருகின்றபோது, அவரிடம் சில விளக்கங்களைச் சொன்னேன்.

அதை வைத்துக்கொண்டு அவர் ஒரு கட்டுரையை வெளியிட்டார். அதன் கருப்பொருள் முஸ்லிம்கள் இஸ்லாத்தின் சடங்குகளைத்தான் பின்பற்றுகின்றார்கள். இஸ்லாத்தின் உணர்வையும் அதன் அசல் வடிவத்தையும் பின்பற்றவில்லை என்பதற்காக அமைந்தது.

Mischif lies in supporting the spirit of islam and preaching rituals of islam. why muslim religions leadership failed in india?

இதன்பொருள் - தவறு எங்கே நடக்கின்றது என்றால் இஸ்லாத்தின் உண்மையான உணர்வுகளை ஒடுக்கிவிட்டு, அதன் சடங்கு சம்பிரதாயங்களை மட்டுமே ஆதரிப்பதில்தான்.

இந்தக் கட்டுரையில், பல பிரபல்யமான இந்திய இஸ்லாமிய இயக்கங்களை - அமைப்புகளை வி.டி.இராஜசேகர் விமர்ச்சிக்கின்றார். (இப்போதைய இந்திய முஸ்லிம்களின் நிலையை கவனத்தில் கொண்டு அவற்றை நாம் இங்கே குறிப்பிட விரும்பவில்லை)

இந்த Spirit of Islam - இஸ்லாத்தின் உள் உணர்வை பற்றிப் பேசும்போது, செச்சன்யாவில் முஸ்லிம்கள் பெற்ற வெற்றியைக் குறிப்பிடுகின்றார். அவர்கள் இந்த மொத்த உலகத்திற்கும், குறிப்பாக முஸ்லிம்களுக்கும் யதார்த்த இஸ்லாம், எது? என்பதைக் கூறி விட்டார்கள் என்றார்.

அவர் இந்த விவாதத்தை - கட்டுரையை அவர் எழுதிய காலக்கட்டங்களில் அதாவது 1997களில் இஸ்லாம் மிகப்பெரியதொரு வெற்றியை ஈட்டி இருந்தது.

செச்சன்யாவில் அல்லாஹ்வின் வழியில் போராடிய முஜாஹித்கள் பெற்ற வெற்றியாகும் அது.

ஏறத்தாழ 300 ஆண்டுகளாக அதாவது ரஷ்யாவின் ஸார் மன்னர்கள் காலத்திலிருந்தே தொடங்கியது. இஸ்லாத்தை முன்வைத்து

ஸார் மன்னர்களின் அநியாயங்களை எதிர்த்துப் போர் செய்தார். அன்று - அதாவது நமது வி.டி.இராஜசேகர் அவர்கள் கட்டுரையை எழுதிய காலக்கட்டத்தில் அவர்கள் பெற்ற வெற்றி அறுதியானது.

அந்த முஜாஹித்தார்கள் இஸ்லாத்தை முன்வைத்தே காலமெல்லாம் போராடி வந்தார்கள். அதிகமான ஆயுதங்கள் இல்லை, போர் செய்வதற்கான எந்த வசதியுமில்லாமல் பல தலைமுறைகள் போராடி வந்த முஜாஹித்கள் 1997இல் பெற்ற வெற்றி.

இந்த வெற்றி வி.டி.இராஜசேகரை அதிகமாக கவர்திருக்கின்றது. அந்தப் பின்னிணியில் எழுந்ததே அந்தக் கட்டுரை.

அவர் அதைப் பற்றி இப்படி எழுதினார்

நான் (செச்சன் தலைவர்) அஸ்லான் மஸ்காடோவ் அவர்களைப் பாராட்டுகின்றேன். அவர் பிப்.-1,1997இல் செச்சன்யாவை இஸ்லாமியக் குடியரசு என அறிவித்து அதன் தலைவராக அமர்ந்தார். ரஷ்ய படைகளை செச்சன்யாவை விட்டு விரட்டினார். பின்னர் ரஷ்யப் படைகளைச் சரணடையச் செய்தார். இந்த உலகிற்கே, இஸ்லாத்தின் யதார்த்த உணர்வு Spirit of Islam என்ன என்பதை உணர வைத்தார். DV. Editorial, April 1-15, 1997, P-21/22

மொத்தத்தில் எல்லா அடக்குமுறைகளுக்கும், அநீதிகளுக்கும் இஸ்லாமே தீர்வு என்ற முடிவுக்கு வந்தார்கள் வி.டி.இராஜசேகர்.

அதன்பின் நான் அவருடைய அலுவலகத்தில் இருக்கும்போது வரும் தலீத்களிடம், இவர் உங்களுக்கு ஒரு தீர்வைச் சொல்வார். பிடித்தால் இவரை பின்பற்றுங்கள் என்பார். பலர் நமது விளக்கங்களைக் கேட்டு இஸ்லாத்தின் பக்கம் சாய்ந்திருக்கின்றார்கள். 7 பேர் இஸ்லாத்தை ஏற்றார்கள்.

அதேபோல் நாம் நடத்தும் தாஃவா நிகழ்ச்சிகளுக்கு அவரை அழைத்திருக்கின்றோம். அவர்கள் நடத்திய பல நிகழ்ச்சிகளுக்கும் நம்மை அழைத்திருக்கின்றார்.

### வி.டி.இராஜசேகரின் நூல்கள்

வி.டி.இராஜசேகர் ஓர் சிறந்த சிந்தனையாளர், ஆசிரியர். தலீத் மக்களின் விடுதலைக்காகவும் விழிப்புணர்வுகளுக்காகவும் பல நூல்களை எழுதியவர். அதேபோல், முஸ்லிம்களின் சிந்தனைகளுக்காகவும் இங்குள்ள பிராமிணிஸ்ட்டுகளின் சதிகளை முஸ்லிம்கள் புரிந்துகொள்ளவும் பல நூல்களை எழுதியவர்.

முஸ்லிம்கள், தலீத் மக்களை விடுதலை அடைய செய்திட வேண்டிய கடமையுடையவர்கள். அவர்கள் இஸ்லாத்தின் மூலம் இந்தியாவை விடுதலை அடையச் செய்திட வேண்டியவர்கள். ஆனால், அவர்கள் தங்கள் கடமையை அறியாதவர்களாகவும், புரியாதவர்களாகவுமிருக்கின்றார்கள் அவர்கள் தங்கள் கடமையைச் செய்திட வேண்டும்.

### முஸ்லிம்களைப் பூண்டோடு ஒழிக்கத் திட்டம்

அவ்வாறு அவர்கள் வி.டி.இராஜசேகர் அவர்கள் எழுதிய நூலில் மிகவும் முக்கியமானது

"India's Muslim Problem" இந்தியாவின் முஸ்லிம் பிரச்னைகள்.

இந்த நூலில் - முதல் அத்தியாயமாக இடம் பெற்றது.

"How to Exterminate Muslims in India". "Spanish experiment being Followed"

அதாவது, முஸ்லிம்களைப் பூண்டோடு ஒழிக்கத் திட்டம். அன்றைய ஸ்பெயினின் முறைமை பின்பற்றப்படுகின்றது.

> **இது மே திங்கள் 16-31,1985 தலீத் வாய்ஸ் ஆங்கில இதழில் இடம் பெற்ற தலையங்கம். அதாவது 1985களிலேயே இந்திய முஸ்லிம்களை தங்கள் எதிர் காலத்தைக் குறித்து விழிப்படையச் செய்தவர் வி.டி.இராஜசேகர்**

இந்த விழிப்புணர்வை அன்றே நாம் முஸ்லிம்களைப் "பூண்டோடு ஒழிக்கத் திட்டம், அன்றைய ஸ்பெயின் முறைமைப் பின்பற்றப்படுகின்றது" என்ற தலைப்பில், தமிழில் தந்தோம்.

அதனை பலதரப்பாரும், வெளியிட்டார்கள். முஸ்லிம்களை விழிப்படையச் செய்திட தமிழகத்தில் ஓர் அளவுக்கு விழிப்படையச் செய்திடவும் முடிந்தது.

### முஸ்லிம்கள் வகுப்பு வாதத்தின் பக்கம்....?

இதேபோல் இன்னொரு தலையங்கம் அது "Who made indian muslims communal" அதன்


vaigarai velicham official

பொருள் - இந்திய முஸ்லிம்களை வகுப்பு வாதத்தின் பக்கம் இழுத்துக் கொண்டிருப்பது யார்? - தலீத் வாய்ஸ் தலையங்கம், ஜூலை *16-31, 1986*

இந்தக் கட்டுரை முஸ்லிம்களை இந்து பாசிச வாதிகள், எடுத்ததற்கெல்லாம் பழி சுமத்திக் கொண்டிருந்தபோது, எழுதப்பட்டது. இந்துத்துவ வாதிகளுக்கு பதில் தந்திட பெரிதும் பயன்பட்டது. மட்டுமல்லாமல், உண்மையான வகுப்புவாதிகள் இந்துத்துவ வாதிகள்தாம் என்பதை நிலை நிறுத்திட பெரிய அளவில் பயன்பட்டது.

நாம் தமிழில் கொண்டுவந்த பின்னர் பல்வேறு அமைப்பினரும் பல ஆயிரம் பிரதிகளை வெளியிட்டார்கள்.

இங்கே தமிழகத்தில் இந்துத்துவ வாதிகளின் வாயை அடைத்திட பெரிய அளவில் பயன்பட்டது.

### பொது சிவில் சட்டம்

நமது அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 44 வழிகாட்டும் கொள்கையில் பொது சிவில் சட்டம் பற்றிப் பேசுகின்றது. இந்தப் பிரிவை வைத்துக்கொண்டு முஸ்லிம்களை காலமெல் லாம் மிரட்டியும் உருட்டியும் வருகின்றார்கள் இந்துத்துவவாதிகள்.

அவர்களுக்குப் பிரச்சனைகள் ஏற்படும் போதெல்லாம் இந்தப் பொதுசிவில் சட்டத்தைக் கையிலெடுத்துக் கொள்வார்கள்.

இதுகுறித்த தெளிவான ஆய்வு ஒன்றை தலீத் வாய்ஸ் இதழில் ஆகஸ்ட் 16-31, 1985இல் வெளியிட்டார்கள்.

அதில் பொதுசிவில் சட்டம் என்றொன்று இந்து சமுதாயத்திற்குள்ளேயே எடுபடாது என்பதை குறிப்பிட்டார். அத்தோடு நடைமுறை வாழ்க்கையில் எல்லோரும், ஷரீஅத் சட்டத்தை பின்பற்றுகின்றார்கள், என்பதையும் தெளிவு படுத்தினார்.

இந்தக் கட்டுரையின் தமிழாக்கத்தை நாம் முதலில்நமது“வைகறைவெளிச்சம்”மாதஇதழில் வெளியிட்டோம். பின்னர் அது வேர்கள் வெளி யீட்டகத்தின் வெளியீடாக வெளிவந்த “பொது சிவில் சட்டம், முழு வரலாற்றுப் பின்னணி” என்ற நூலிலும் இணைத்தோம்.

இப்படி அவருடைய ஆய்வுரைகளையும் இடித்துரைகளையும் நாம் நிரம்பவே தமிழில் வெளியிட்டுள்ளோம். இன்னும் சில ஆய்வுகள் எஞ்சியுள்ளன, அவற்றையும் விரைவில் இன்ஷா அல்லாஹ் வெளியிடுவோம்.

### அருண்ஷோரி

அருண்ஷோரி என்றொரு எழுத்தாளர் ஆங்கில எழுத்துலகில், அவர் காங்கிரஸ் கட்சி ஆட்சியிலிருந்தபோது ஆங்கிலப் பத்திரிகை உலகில் ஆடாத ஆட்டமில்லை. போடாத கூத்துமில்லை.


திமிர் தலைக்கேறிய போதுதான் மறைவான வற்றை அறிந்திடும் அதிசய ஆற்றல்களுக்குச் சொந்தமானவர் எனக் காட்டிக் கொண்டார். அதை பத்திரிகைகளின் நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றபோது, வாங்கிக் கட்டிக் கொண்டார்.

அதன்பின் சாடினார் இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்கள் மீதும் தன் இந்துத்துவ விசுவா சத்தைக் காட்டிக்கொள்ள, “பாபரி மஸ்ஜித் என்றொன்று எப்போதும் இருந்ததில்லை.” என்றொரு ஜமுக்காளதர்தில் வடிகட்டின பொய்யை பக்கம், பக்கமாக இந்தியன் எக்ஸ்பிரஸ்-ல் எழுதினார்.

ஆதாரம் கேட்டபோது அலீமியான் என அறியப்பட்ட அபுல் ஹஸன் அலீ அவர்களின் தந்தை ஒரு நூலை எழுதி இருக்கின்றார் என்றார். அதில்தான், தான் சொன்ன கருத்துக்கள் இடம் பெற்றிருக்கின்றன என்றார். அலீ மியான் அவர்கள் தன் தந்தை எந்த நூலிலும், இப்படியொருக் கருத்தை எழுதியதில்லை என்றார்.

நேரடியாக இந்தியன் எக்ஸ்பிரஸ்-இன் தாளாளர் உரிமையாளர் கோயாங்காவை சென்று சந்தித்தார், அலீமியான் அவர்கள் உண்மைகளை எடுத்துரைத்தார். அதனை ஆய்வு செய்த கோயாங்கோ, அருண்ஷோரியை தன் பத்திரிகையான இந்தியன் எக்ஸ்பிரஸிலிருந்து தூக்கி எறிந்தார். அஸ்தமித்தது அருண்ஷோரி யின் பத்திரிகை வாழ்க்கை.

இந்துத்துவாவின் பக்கம் சாய்ந்தார், இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் கொச்சைப் படுத்தும் அளவில் "The World of Fatwas" “பத்துவாக்களில் உலகம்” என்றொரு நூலை




'Who Killed Karkare' நூல் வெளியிடப்பட்டது

எழுதினார். ஃபத்துவாக்கள் என்ற மார்க்கத் தீர்ப்பு களை ஏகடியம் செய்தார் எள்ளி நகையாடினார்.

அதேபோல் தலித் மக்களைக் கொச்சைப் படுத்தும் அளவில், அம்பேத்கர் அவர்களை நையாண்டி செய்யும் அளவில் நூல் ஒன்றை எழுதினார். அதன் பெயர் Worshipping False Gods -"தவறான கடவுளை வணங்குவது" என்பது நூலின் பெயர். அதாவது அம்பேத்கர் துதிக்கப்பட வேண்டியவரல்ல, அதாவது இந்த அளவுக்கு கொண்டாடப்பட வேண்டியவரல்ல என்பது நூலின் கருத்து.

இந்நிலையில் அருண்ஷோரியின் எல்லாத் தகிடு தத்தங்களையும், அம்பலப்படுத்திடுவது என முடிவு செய்து நான் நிறுவி நடத்திவந்த விடியல் வெள்ளி பத்திரிகையில், அறிவோம் அருண்ஷோரியை என்றொரு கட்டுரையை வெளியிட்டேன்.

அதற்கான கருவைத் தேடிடும்போது, வி.டி.இராஜசேகர் அவர்களைச் சந்தித்தேன். அவர் அருண்ஷோரி இந்து மதத்திற்கெதிராக, எழுதி இருந்த நூல் ஒன்றைக் கொடுத்தார். தொடக்கக் காலத்தில் அவர் ஓர் நாத்திகவாதி பின்னர் ஓர் இந்துத்துவ வாதி, இப்படி வேஷங்கள் பலவற்றைப் போட்டார் அருண்ஷோரி என்ற உண்மையை தந்தார்கள் வி.டி.இராஜசேகர். அந்த நூலையும் தந்தார். அதையும் படித்து, நான் வெளியிட்ட அறிந்திடுவோம் அருண் ஷோரியை என்ற கட்டுரையை வெளி யிட்டோம்.

இன்ஷாஅல்லாஹ் விரைவில் அது நூலாக வெளிவரும்.

**S.M. முஷ்ரிஃப் - V.T. இராஜசேகர்**

இந்தியாவில் நடந்த அத்தனைக் குண்டு வெடிப்புகளுக்கும் RSS-ம் அதன் இணை அமைப்புகளும்தான் காரணம். நான் இதனை நமது வைகறை வெளிச்சம் பத்திரிகையில் தொடர்ந்து எழுதி வந்தேன்.

இந்நிலையில்தான் 26/11 என அறியப்பட்ட மும்பைத் தாக்குதல் நடைபெற்றது. அதனைப் பயன்படுத்திக் கொண்டு, மத்திய உளவுத் துறையும், இந்துத்துவ கும்பல்களுமாகச் சேர்ந்து "கர்கரே" என்ற ATS தீவிரவாதத் தடுப்புப் படையின் தலைவரைக் கொலை செய்தார்கள்.

இந்தக் கொலையில் நடந்த யதார்த்தங்களை எல்லாம் கண்டெடுத்து வெளிச்சத்திற்கு கொண்டு வந்தார் மராட்டிய மாநிலத்தின் முன்னாள் காவல்துறை அதிகாரி எஸ்.எம். முஷ்ரிஃப். கர்கரேயைக் கொலை செய்தது பாகிஸ்தானிலிருந்து வந்த தீவிரவாதகள் அல்ல, மாறாக இந்தியாவின், மத்திய உளவுத்துறையும், சங்கப்பரிவாரமும் தான், அந்த மும்பைத் தாக்குதலில் கர்கரேயைக் கொலை செய்த பகுதியை மறு ஆய்வுக்கு உட்படுத்திட வேண்டும், உண்மையான குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்க வேண்டும் என பொதுநல வழக்கொன்றை உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்தார் எஸ்.எம்.முஷ்ஃரிப் அவர்கள். ஆனால், உச்ச நீதிமன்றம் முதலில் உயர்நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்லுங்கள், பின்னர் உச்ச நீதிமன்றம் வாருகள் என்றது. இந்த ஆணையின்படி வழக்கை மும்பை உயர்நீதி மன்றம் எடுத்துச் சென்றார். அங்கும் நீதி கிடைப் பதாகத் தெரியவில்லை. எனவே மொத்த உண்மையையும் மக்கள் மன்றத்தில் வைத்தார். அதுவே பின்னர் ஒரு நூலாக கர்கரேயைக் கொலை செய்தது யார்? - இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம் என்ற பெயரில் ஆங்கிலத்தில் வெளிவந்தது. "Who Killed Karkare?" The Real


vaigarai velicham official




face of Terrorism in India”

இந்த நூலை நாம் தமிழகத்தில் அறிமுகப் படுத்திடும் அளவில் ஒரு பெரும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தோம். இதில் திராவிட கழகத்தின் தலைவர் டாக்டர் கீ. வீரமணி அவர்களையும் இணைத்துக்கொண்டோம்.

திராவிடர் தலைவர் கீ. வீரமணி அவர்கள் பெரியார் திடலை இலவசமாகத் தந்தார்கள். அழைப்பிதழையும், அவர்கள் சார்பில் வெளியிட்டார்கள். நாம் எஸ்.எம்.முஷ்ஃரிப் அவர்களை மும்பையிலிருந்து வரவைப்பது, விளம்பரங்கள் என்பனவற்றை ஏற்பாடு செய்தோம்.

வழக்கம்போல் வி.டி.இராஜசேகர் அவர் களுக்கும், தகவல் தந்தோம். தன் சொந்த செலவில் வந்து சென்றார். பெரியார் திடல் அதிரும் அளவில் உரை ஒன்றை நிகழ்த்தினார்.

இங்கு மட்டுமல்ல, பல மாநிலங்களில் இந்த நூல் அறிமுகமானபோதெல்லாம் வி.டி.ஆர். அவர்கள் தவறாமல் கலந்துகொண்டார்கள்.

அதேபோல்தான் எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்களின் அடுத்த நூலான 26/11 Why Judiciary Also Fauid - *26/11* நீதித்துறையும் மயங்கியது ஏன்? என்றால் இப்போது வெளியாகியுள்ள “Braminists Bombed Muslims Hanged” பிராமி ணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - என்ற நூலும் இப்படி தலீத் விடுதலையிலும், முஸ்லிம்களை விழிப்படைய செய்திட செய்வதிலும் அவர் காட்டிய ஆர்வம் அலாதியானது.

**தலீத் வாய்ஸ் தமிழில்**

தலீத் வாய்ஸ் ஆங்கிலப் பத்திரிகை தமிழில் கொண்டுவந்திட பல முயற்சிகளை மேற் கொண்டார்கள் வி.டி.இராஜசேகர் அவர்கள்

ஒருகட்டத்தில், என்னிடத்தில் கேட்டார்கள், நான், என்னால் முழு பொறுப்பையும் எடுத்திட வியலாது. வேறு யாராவது இந்தப் பொறுப்பை எடுத்தால் நான் உதவி செய்திட இயலும் என்றேன்.

முடிவில் தலீத் எழில்மலை என்பவரிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அவர் அதிமுக சார்பில் மத்திய அமைச்சரானார் - அத்தோடு இந்த முயற்சி முடியாமலே போய்விட்டது.

**தாஃவா - பொருளாதார விடுதலை**

தாஃவா களத்திற்கு இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைப்பதற்கு மிகவும் உதவியான பல சிந்தனைகளையும் வி.டி.இராஜசேகர் அவர்கள் தந்துள்ளார்கள்.

அவற்றில் முக்கியமான ஒரு கருத்து அதிகம் பேசப்படாத ஒன்று.

தீண்டாமைக் கொடுமைகளுக்கு உள்ளாகி வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களுக்கு இஸ்லாம் நிரந்தரமான சமூக விடுதலையை மட்டுந் தந்திடவில்லை. மாறாகப் பொருளாதார விடுதலையையும் வழங்குகின்றது என்பதாகும்.

அதாவது, இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட வுடன் அவர்கள் மனிதன் என்ற கண்ணியத்தைப் பெற்றுவிடுகின்றார்கள்.

அங்கிங்கொனாதபடி எங்கும் அவர்கள் பாய் - சகோதரர்களே! என அழைக்கப்படு கின்றார்கள். அவர்கள் எந்தத் தொழிலை வேண்டுமானாலும் எடுத்துச் செய்ய முடி கின்றது. அவர்களின் “டீ” கடைகளில் அன்று வரை அருந்தாதே எட்டி நில் என்றவர்கள், அவர்கள் ஆற்றித் தரும் டீயை தாராளமாக அருந்தினார்கள்.

அவர்கள் தொட்டு எடுத்துத் தரும் திண் பண்டங்களை உண்கின்றார்கள். இதனால் வியாபாரம் தழைக்கின்றது. பொருளாதாரத்தில் முன்னேறுகின்றார்கள். இது தானாக இதர முன்னேற்றங்களுக்கு வழிவிடுகின்றது.

இந்தப் பொருளாதார விடுதலையும் இணைத்தே இஸ்லாம் பெற்றுத் தருகின்றது. இதனை இஸ்லாத்தை பிரச்சாரம் செய்பவர்கள் எடுத்துச் சொல்வதில்லை எனக் குறைபட்டுக் கொள்கிறார் VTR அவர்கள்

**- MGM**



## பாபரி மஸ்ஜித்
## எல்லாம் கெட்டுப்போய்விடவில்லை

# பாபரி மஸ்ஜித்

## என்றும் நம் நினைவில்...

**எல்லாம்** கெட்டுப் போய்விடவில்லை. மஸ்ஜித் இருந்த இடத்தில் ராமர் கோயில் வரக்காரணமாக அமைந்தது. ஆனால் அந்த உச்ச நீதிமன்றத்தில் அந்தத் தீர்ப்பு எப்படி வாங்கப்பட்டது என்ற உண்மைகள் மக்கள் மன்றத்தில் இப்போது தெளிவாகி வருகின்றன. அதனால் பல மாற்றங்கள்...

பாபரி மஸ்ஜித், இடிக்கப்பட்டப் பின்னணியில் நடந்த தேர்தலில், அயோத்யா தொகுதியில் பாரதீய ஜனதா கட்சி ஜெயிக்க இயலவில்லை. படுதோல்வியடைந்தது.

அதேபோல அதிக பண பலத்தோடும், .... படோ பத்தோடும் கட்டப்பட்டது. பாபரி மஸ்ஜித் இருந்த இடத்தில் இராமர் கோயில், அடுத்து வந்த நாடாளுமன்ற தேர்தலில் 2024இல் அயோத்யா இருக்கும், பைஜாபாத் தொகுதியில் இந்துத்துவ பாசிச கட்சி தோல்வியைத் தழுவியது.

மக்கள் இவர்களை எதிர்க்க தலைப்பட்டு விட்டார்கள். அநீதிகள் பளிச்சென தெரிந்தன.

இத்தனைக்கும் இந்த 2024 ஆண்டு தேர்தலில் இந்திய தேர்தல் ஆணையம், தங்கு தடையின்றி பாரதீய ஜனதா கட்சிக்கு எல்லா உதவிகளையும் செய்தது.

மின்னணு வாக்கு இயந்திரங்கள் தேவையான அளவுக்கு பாரதீய ஜனதா கட்சிக்கு சேவை செய்தன.

அயோத்யா இடம்பெறும் உத்திரப் பிரதேசத்தில் முன்னர் நடந்த மாநிலத் தேர்தலிலும் பா.ஜ. கட்சி பெரும் தோல்வியைச் சந்தித்தது.

மின்னணு வாக்கு இயந்திரத்தின் உதவியால் தான் உ.பி.இல் யோகி ஆதித்யனாத் உ.பி. ஆட்சிக்கு வந்தார். மட்டுமல்ல, 2024 நாடாளு மன்றத் தேர்தலில், மொத்த பாரதீய கட்சியும், பெரும் பின்னடைவையே சந்தித்தது. அறுதி பெரும்பான்மை என்ற ஆணவ கோஷம் தகர்ந்தது. கூட்டணி ஆட்சியே மத்தியில் அமைந்தது.

இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன என்றால் இந்துத்துவ பாசிச சிந்தனையி லிருந்து மக்கள் பெருமளவில் விடுபட்டு வருகின்றார்கள். இவர்களின் உண்மை முகத்தைப் புரிந்துகொண்டார்கள்.

இனி அவர்களாக ஏற்பாடு செய்யும் குண்டு வெடிப்புகளும் முன்னர் போல் எடுபடாது. ஏனெனில் குண்டு வெடிப்புகளை நடத்தியதே சங்கப்பரிவாரந்தான் என்ற உண்மை எல்லோ ருக்கும் தெரிந்துபோனது. ஆனால் இன்றளவும் பழியைச் சுமந்த முஸ்லிம்கள் மேல் ஓர் அனுதாபம் தோன்றியுள்ளது.

இதில் பாசிச பயங்கரவாதிகளே பல ஒப்புதல் வாக்குமூலங்களை வழங்கிவிட் டார்கள். அவையும் மக்களை வெகுவாகவே சென்றடைந்துள்ளது.

- கர்கரேயைக் கொலை செய்தது யார்? (இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம்) இந்த நூல் இந்தியாவில் 8 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு மக்களைச் சென்றடைந் துள்ளது.

- 26/11, நீதித்துறையும் மயங்கியது ஏன்?
- பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார் கள் - முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்
- புரோகித்-இன் லேப்டாப்-இல் இருந்ததென்ன?
- இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு.
- நாடாளுமன்றத் தாக்குதல் வெளிச்சத் திற்கு வந்த உண்மைகள்
- கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்?

என்று அடுக்கடுக்காய் அணிவகுத்து வந்த நூல்கள் மக்கள் மன்றத்தில் நிறைவான விளக்கத்தையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தி யுள்ளன.

மக்கள் இந்துத்துவ பாசிசத்தின் பிரித்தாளும் சூட்சியையும், கொள்ளைகளையும், ஊழல் களையும் ஊதாரித் தனத்தையும் நன்றாகவே புரிந்துகொண்டார்கள்.

அதேபோல், பாபரி மஸ்ஜித் வழக்கில் நடந்த தகிடுத்தத்தங்கள் தீர்ப்பின்போது தலைமை தாங்கிய தலைமை நீதிபதியின் பாலியல் குற்றங்கள், அதை வைத்து மிரட்டி பிடுங்கப்பட்ட தீர்ப்பு. இவையும் மக்கள் மன்றத்தில் வெட்ட வெளிச்சம்!

ஆக, மக்கள் கருத்து பாபரி மஸ்ஜித் விவகாரத்தில் நீதியின் பக்கம் வெகுவாகத் திரும்பி வருகின்றது. அடித்தட்டு மக்களின் கருத்துக்கள் மட்டுமல்ல அறிவார்ந்த ஆராய்ச்சி யாளர்கள், மூத்த வழக்கறிஞர்கள், இவர்களும் பாபரி மஸ்ஜித் வழக்கிலும், தீர்ப்பிலும் நடந்த அநீதிகளை நன்றாகவே உணருகின்றார்கள். மக்களுக்கு எடுத்துச் சொல்கின்றார்கள்.

பாசிசம், இப்போது பல்வேறு தகிடுதத் தங்கள்கள் வழி இந்தியாவில் ஆட்சியில் தன்னை தக்க வைத்துக் கொண்டிருக்கின்றது. அது விழும்! நீதி மீண்டும் எழும்!! முதல் வாய்பிலேயே பாபரி மஸ்ஜித் மீளும்!!! இன்ஷாஅல்லாஹ்.

அன்றளவும் பாபரி மஸ்ஜித் விவகாரத்தில் வழக்கில் நடந்த அனைத்து உண்மைகளையும் மக்கள் மன்றத்தில், விளம்பிக் கொண்டே இருக்க வேண்டும். அறிவுப்பூர்வமாக எதிர்வரும் தலைமுறைக்குப் புரிய வைத்திட வேண்டும்.

இதை அமைதியாக, ஆரவாரமில்லாமல் ஆதாரங்களோடு செய்துகொண்டே இருக்க வேண்டும்.

இதில் தொய்வோ, தளர்வோ கூடாது. அதற்கு இந்த நூல் தேவையான அனைத்தையும் தரும்!

குறிப்பாகத் தீர்ப்புக் குறித்து மூத்த வழக் கறிஞர் லஜபதிராய் அவர்களின் பேட்டி நிச்சயமாக உதவும். அறிவாளர்கள் அனைவரும் இன்றளவும் தீர்ப்பை விமர்சித்துக் கொண்டே தான் இருக்கின்றார்கள்.

இந்த நூலை வாசிப்பவர்கள் தங்களோடு நிறுத்திக்கொள்ளாமல், தங்களோடு உள்ளவர்கள் அனைவருக்கும் தந்து அல்லது பரிந்துரைத்து தங்கள் பங்களிப்பை வழங்கிட வேண்டும்.

வேர்கள் பதிப்பகத்தின் நீதிக்கான பெரும்

போர்! நெடும்போர்!!

இறைவன் நிலைகுலைய விடாமல், எடுத்தப் பணியில் உறுதியாக, நிலையாக நிற்பவர்களுடன் இருக்கின்றான்.

சூதும் வாதும் நிலைக்க மாட்டா? (சத்தியம்) உண்மை மட்டுமே நிலைக்கும்.

சத்தியம் வரும், அசத்தியம் அழியும்!
அசத்தியம் அழிந்தே தீரும்!

**பத்திரிகைகள் / ஊடகங்கள்**

பாபரி மஸ்ஜித் விவகாரத்தில் வழக்கில் ஊடகங்களின் திரிபுகள், பொய்ச் செய்திகள் இவற்றிற்கு அளவே இல்லை. தொடக்கக் காலங்களில் பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்ட பின்னணியில் பாபரி மஸ்ஜித் என்பதைச் சொல் லிடவே தயங்கின. பின்னர், “Disputed Structure” விவகாரத்திற்குள்ளான கட்டடம் என்ற சொல்லையே அதிகமாகப் பயன்படுத்தின. பின்னர் அயோத்தியா வழக்கு என்ற சொல்லையே மக்கள் மன்றத்தில் திணித்தார்கள்.

அநீதியை ஓர் தீர்ப்பாக ஐந்து நீதிபதிகள் தந்தபோது, அதனை அயோத்தியா தீர்ப்பு என்றே குறிப்பிட்டார்கள். ஆனால், பின்னர் தீர்ப்பில் தெறித்த அநீதி, தில்லுமுல்லுகள் இவையெல்லாம், எல்லோரிடமும் ஓர் பதற்ற ஏக்கத்தை ஏற்படுத்தியபோது, ஊடகங்களால் தங்கள் தான்தோன்றித் தனத்தை நிறுத்தாமல் இருக்க முடியவில்லை.

தீர்ப்பின் தார தம்மியங்களை எழுதியாக வேண்டும். இல்லையேல் மக்கள் தங்களை இனங்கண்டு ஒதுக்கிவிடுவார்கள் என்பதை அறிந்தார்கள். ஆகவே தீர்ப்பை விமர்சித்து அதன் தவறுகளைச் சுட்டிக்காட்டிடத் தொடங்கினார்கள்.

ஆனாலும் பாசிசத்தின் பணத்திற்கும், மிரட்டலுக்கும் படிந்தவர்கள் சற்றே பாசிசத் திற்குத் தூபம் போட்டார்கள். இன்னும் மொத்தத்தில் தீர்ப்பு ஆட்சியிலிருக்கும் பாசிசத்தை திருப்திப்படுத்தி கிடைப்பதைப் பெற்றுக்கொள்ள எழுதப் பெற்றது என்பதை உணர்ந்தார்கள்.

பின்னர், தீர்ப்பிற்குத் தலைமைத் தாங்கிய



நீதிபதி சந்திரசூட்

தலைமை நீதிபதி ரஞ்சன் கோகை நடாளுமன்ற மேலவை பதவியைப் பெற்றபோது, எல்லா ஐயங்களும் அகன்றுபோயின. அவருக்கு உயர் பாதுகாப்பும் வழங்கப்பட்டது (Z Plus catagary Security) அவருடைய மனைவிக்கும் ஒரு பதவி மாநில அளவில் வழங்கப் பெற்றது.

இவற்றிற்கெல்லாம் மேலாக அவர் செய்த பாலியல் குற்றத்திலிருந்து முழுமையான விடுதலை வழங்கப்பட்டது.

குற்றம் சுமத்திய அவருடைய பெண் உதவியாளர், நான் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகையால் பாலியல் வன்மத்திற்கு ஆளாக் கப்பட்டது உண்மை. நான் சமரசம் செய்து கொள்ள மாட்டேன். நீதிக்காகப் போராடியே தீருவேன் எனச் சொன்னபோது, அவரிடமிருந்து பிடுங்கப்பட்ட பதவிகள் கொடுக்கப்பட்டன. அவரை பணியிலிருந்து நீக்கிய காலத்தை பணிகாலம் எனக் கொண்டார்கள்.

அவர் பணிக்கு வராத காலக்கட்டத்தை பிரசவ விடுப்பு என்றார்கள். பணியிலிருந்து விலக்கப்பட்ட காலத்திற்கு ஊதியத்தை ஒரு காசு பிசகாமல் கணக்குப் பார்த்து அவரது கணக்கில் சேர்த்தார்கள்.

அவருடைய உறவினர்கள் பலர் அரசு பணிகளில் இருந்தார்கள். அத்தனை பேரும் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அத்தனைக்கும் பிறகும் அந்தப் பெண்மணி, தனக்கு நீதியே வேண்டும் என்றார். அதிகார இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கியேப் போட்டார்கள்.

இத்தனை உண்மைகள் மக்களை எட்டின


vaigarai velicham official

ஊடகங்களால் பொய்களுக்குப் பின்னால் ஒளிந்துகொள்ள இயலவில்லை.

ஆக, பெரும் எதிரியான ஊடகங்களும் இப்போது உண்மையின் பக்கம் நின்றிட வேண்டிய நிர்பந்த நிலை.

மொத்தத்தில் பொதுவானதொரு சூழல் தீர்ப்பிற்கு எதிராக முழுஅளவில் திரும்பி இருக்கின்றது.

இதனையும் மக்கள் கருத்தை உருவாக்கிடவே பயன்படுத்திடலாம்.

**ஏ.ஜி. நூராணி அவர்கள்**

பாபரி மஸ்ஜித் வழக்கை நீண்ட காலம் நடத்திய, இன்னுஞ் சொன்னால் இறுதிவரை நடத்திய வழக்கறிஞர் ஜாஃபர்யாம் ஜீலானி, நம்மோடு தொடர்பிலிருந்தார்.

நான் (வைகறை வெளிச்சம் ஆசிரியர்) அவரை, அவருடைய லக்னோவ் இல்லத்திலும், அவரது அலுவலகத்திற்கும் பலமுறை சந்தித்திருக்கின்றேன்.

ஒருமுறை அவருடைய அலுவலகத்தில் வைத்து பேசிக்கொண்டிருந்தபோது, நான் எழுதிய பாபரி மஸ்ஜித் அடிப்படைத் தகவல்கள் நூலைப் பற்றிப் பேசினோம். நூலின் உள்ளடகத்தைக் கேட்டார்.

நான் சற்று விளக்கமாகவே சொன்னேன். பொறுமையாகச் செவிமடுத்த அவர், இன்னும் சில அடிப்படை ஆதாரங்களைத் தருகின்றேன் இணைத்து ஆங்கிலத்தில் ஒரு நூலைக் கொண்டு வாருங்கள் என்றார். அப்போது ஜாபர்யாப் ஜீலானி உ.பி. மாநிலத்தில் வழக்கறிஞர். நான் ஏ.ஜி. நூராணி அவர்கள் ஆங்கிலத்தில் ஒரு நூலை தொகுப்பதாக அறிந்தேன் என்றேன். கேட்டுவிடுவோம், என்றார் - கேட்டார். ஏ.ஜி.நூராணி அவர்கள் நூல் விரைவில் வரும் என்றார். ஆகவே நான் அந்தப் பணியிலிருந்து என்னை விடுவித்துக் கொண்டேன். ஏ.ஜி. நூராணியின் நூல், இரு பாகங்களாக முதலில் வெளிவந்தது.

அரும்பெரும் தகவல்களை உள்ளடக்கிய நூல். அதிலிருந்து சில முக்கிய கட்டுரைகளை நான் வைகறை வெளிச்சம் பத்திரிகையில் வெளியிட்டிருக்கின்றேன். - பாபரி மஸ்ஜித் அடிப்படைத் தகவல்கள் என்ற நூலும் இடம்பெறச் செய்திருக்கின்றேன்.

ஏ.ஜி.நூராணியின் நூல் உலகளாவிய அளவில் ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இத்தனையும் லாவகமாகப் பயன்படுத்தி மக்களுக்கு நடந்த அநியாயங்களைப் புரிய வைத்திட வேண்டும்.

இன்றைய நாள்களில் சகோதர சமுதாயத்தை சார்ந்த பலர் இதை தொலைக்காட்சி விவாதங் களிலும், சமூக ஊடகங்களிலும் நிரம்பவே சுழல விடுகின்றார்கள். இந்தச் சாதகமான சூழ்நிலையை, உண்மையை விளம்பிடப் பயன்படுத்திடலாம்.

இனி என்ன ஆகப்போகின்றது? என விரக்தியின் விளிம்பிற்குச் சென்றுவிட்டனர் பலர். அவர்களை விரக்தியிலிருந்து வெளியே கொண்டுவந்திட வேண்டும். அதற்கும் நாம் திரட்டித் தந்துள்ள இந்தத் தகவல்கள் பெரிதும் உதவும்.

சந்திரசூட் அவர்களைப் பொறுத்தவரை அவருடைய தந்தை அவர்கள், அவசரகால, நெருக்கடி காலத்தின்போது உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியாக 1975/1976 இருந்தார்கள். அப்போது அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் போட்ட ஆட்டங்களுக்கெல்லாம் ஆமாம் சாமி போட்டார்கள்.

தந்தை சந்திரசூட் அவர்களை மூத்த வழக்கறிஞர், எழுத்தாளர் ஏ.ஜி.நூராணி அவர்கள் சந்தித்து, ஏன்? நீங்கள் நெருக்கடி காலக்கட்டங்களில் சற்றும் நெஞ்சுரமில்லாமல் செயல்பட்டீர்கள் எனக் கேட்டபோது, நெருக்கடி காலத்தில் நாங்கள் - நீதிபதிகள் அனைவரும் கோழைகளாகவிருந்தோம் என்றார்கள்.

இப்போது பாபரி மஸ்ஜித் தீர்ப்பு வழங்கப்படும்போது, இந்தியா ஓர் அறிவிக் கப்படாத நெருக்கடியின் கீழிருந்தது. இருந்து வருகின்றது என்பது உண்மை!

**மீண்டும் பாபரி மஸ்ஜித் தீர்ப்பு**

பாபரி மஸ்ஜித் தீர்ப்பில் நடந்த முறை கேடுகள் மக்கள் மன்றத்தில் மெல்ல மெல்ல

சென்று கொண்டிருந்தன. அவற்றை மீண்டும் நினைவூட்டும் வகையில் பின்னாளில் இந்தியாவின் தலைமை நீதிபதியாக இருந்த D.Y. சந்திரசூட் ஒரு குண்டை எடுத்து வீசினார்.

2024 அக்டோபர் திங்களில், மராட்டிய மாநிலத்தில் ஒரு பொது நிகழ்ச்சியில் பேசிடும் போதுதான் அந்தக் குண்டை எடுத்து வீசினார்.

அது, பாபரி மஸ்ஜித் பிரச்சனைக்கு என்ன தீர்வு என எங்களுக்குத் தெரியவில்லை. ஆகவே நான் கடவுளைக் கேட்டேன் அவர் தீர்வைச் சொன்னார். அதைத்தான் தீர்ப்பாகத் தந்தோம் என்றார்.

இது அவர் ஓய்வு பெறுவதற்கு ஓரிரு நாள்களுக்கு முன்னர் சொன்னது.

இதன்மூலம் அவர் ஒரு செய்தியை ஆட்சியாளர்களுக்குச் சொல்லுகின்றார். அது, நான் தீர்ப்பை எழுதினேன். அதுவும் இராமரை கேட்டுத்தான் எழுதினேன். எனக்குரியதைத் தாருங்கள், நான் நவம்பர் 11ஆம் நாள் 2024இல் ஓய்வு பெறுகின்றேன் என்பதாகும்.

சந்திரசூட் சொன்ன சொற்களையும் சொல்லாமல் சொன்ன சொற்களையும் பிடித்துக் கொண்டார்கள் நமது மூத்த வழக்கறிஞர்கள். நீதியை நாடுபவர்கள் முதலானோர்.

எல்லோரும் ஓர் உண்மையை மீண்டும் உரக்க முழங்கினார்கள். அது,

1. பாபரி மஸ்ஜித் வழக்கில், வழங்கப்பட்ட தீர்ப்பு நீதி நியாயங்களின் அடிப்படையில் வழங்கப்படவில்லை. அது, ஆட்சியிலே இருப்பவர்களை திருப்திபடுத்திட வழங்கப் பட்ட தீர்ப்பு.

2. நீதிமன்றங்கள் வழங்கிடும் தீர்ப்புகள் சட்டப்படியானவையாக இருந்திட வேண்டும். சட்டத்தின் எந்தெந்த பிரிவுகளின் அடிப்படையில் இந்தத் தீர்ப்பு வழங்கப்படுகின்றது என்பது தெளிவு படுத்திட வேண்டும். ஆனால் பாபரி மஸ்ஜித் வழக்கில் இது பின்பற்றப்பட வில்லை என்பது திண்ணம். அதற்கு தீர்ப்பை வழங்கிய நீதிபதிகளில் ஒருவரான சந்திரசூட் அவர்கள், நாங்கள் சட்டங்களைப் பற்றி கவலைப்படவில்லை. மாறாக, நாங்கள் கவலைப்பட்டதெல்லாம், ஆட்சியாளர்கள், எங்கள் எதிர்காலம் என்பன வற்றைப் பற்றித்தான் என்பதை தெளிவாகவும், தீர்க்கமாகவும் அறிவித்துவிட்டார். மராட்டிய மாநிலத்தில் அக்டோபர் 20,2024இல் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் நீதிமன்றத்தில் வைக்கப்படுகின்ற

3. ஆதாரங்களின் அடிப்படையில் வழிதான் தீர்ப்பு வழங்கிட வேண்டும் என்பது நீதியின் தேவை. ஆனால், சந்திரசூட் அவர்களின் சொற்கள், ஆதாரங்கள் நாங்கள் ஏறெடுத்தும் பார்த்திடவில்லை என்பதை தெளிவுபடுத்திற்று.

4. தரப்படுகின்ற ஆதாரங்களைத் தொடர்ந்து வைக்கப்படுகின்ற வாதங்கள், அந்த வாதங்களுக்கு எதிர்வாதம், இவற்றிற்கான ஆதாரங்கள். இவையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அவை தீர்ப்பில் தரப்பட வேண்டும். ஆனால் அதையெல்லாம் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை, பாபரி மஸ்ஜித் வழக்கில், என்பதை தெளிவுபடுத்திவிட்டார் நீதிபதி சந்திரசூட்.

இந்த சட்ட ரீதியான விவகாரங்கள் அல்லாமல், தார்மீக அடிப்படையிலும் சில விழிப்புணர்வைத் தந்தார்கள். முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி சந்திரப் பிரகாஷ் அவர்கள்.

அவை,

1. பாபரி மஸ்ஜித் வழக்கின் தீர்ப்பு ஓர் அநீதி.

2. பாபரி மஸ்ஜித் வழக்கில் நீதுயை நிலை நாட்டுவதற்கு ஓர் அச்சமின்மை, நெஞ்சுரம் தேவை. அது சந்திரசூட் அவர்களுக்கு இருக்கவில்லை.

**நீதிபதிகளின் தைரியம்**

நெஞ்சுரத்தைப் பொறுத்தவவர சந்திரசூட் அவர்களின் தந்தைதான் இந்திராவின் நெருக்கடி நிலையிலிருந்த போது உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்தார்கள்.

நெருக்கடி காலத்தின்போது பிரதமர்


vaigarai velicham official

இந்திரா காந்தி மேற்கொண்ட எல்லா நடவடிக் கைகளுக்கும் ஆமாம் சாமி போட்டார்.

மக்களின் அடிப்படை உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்ட நேரத்தில், தானாக முன்வந்து காப்பாற்றி இருக்க வேண்டிய உச்ச நீதிமன்றம், ஆளும் வர்கத்திற்கு ஜால்ரா தட்டிக்கொண்டிருந்தது. எல்லோரையும் விரக்தியில் ஆழ்த்தியது.

இதுகுறித்து பிற்றை நாள்களில் அவரிடம் பிரபல எழுத்தாளர், மூத்த வழக்கறிஞர் ஏ.ஜி.நூராணி அவர்கள் கேட்டபோது, அவர் இப்படிப் பதில் சொன்னார்.

அன்றைய நாள்களில் அதாவது, நெருக்கடி நாள்களில், நாங்கள் (நீதிபதிகள்) கோழைகளாக இருந்தோம் என்றார்.

இப்போதைய நீதிபதி சந்திரசூட் அவர்கள், தந்தையைப்போல் உண்மையை ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால், அநீதிக்கும் ஆட்சியாளர்களுக்கும், ஆலவட்டம் சுழற்றியதை பெருமையோடு சொல்லிக்காட்டுகின்றார். தன் தவறுகளையும், கோழைத்தனத்தையும்கூட ஒத்துக்கொள்வதற்கு ஒருவித அசாதாரண பெருந்தன்மையும், நெஞ்சுரமும் தேவை. Courage of Conviction என்பார்கள்.

தொடர்ந்து சந்திரசூட் அவர்களின் உரையை, அதாவது மும்பையில் ஒரு பொது நிகழ்ச்சியில் 20-10-2024இல் ஆற்றிய உரையை விமர்சித்த சந்திர பிரகாஷ் என்ற முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி அவர்கள் இப்படித் தன் விமர்சனத்தை முன் வைக்கின்றார்.

கடவுளைக் கேட்டுத்தான் பாபரி மஸ்ஜித் வழக்கில், தீர்ப்பை வழங்கினோம் என்று கூறியது, தீர்ப்பு அநியாயமானது என்பதன் மறைமுகமான ஒப்புதல்.

(நவம்பர்-2019)இல் வழங்கிய தீர்ப்பு அநியாயமானது என்பது இன்றளவும் அவர்களின் மனதை உறுத்திக் கொண்டிருக்கின்றது. எனினும், இன்னொன்றும் தொனிக்கின்றது. அது தீர்ப்பை யார் எழுதியது என்பதை எங்கேயும் தேடிக் கொண்டிருக்க வேண்டாம். சாத் சாத் நான்தான் எழுதினேன் ஆனால் உள்ளதை கொடுங்கள் எனச் சொல்வதுபோல் இருக்கின்றது என்கின்றார்கள் சட்ட வல்லுநர்கள்.

முன்னாள் உச்சநீதிமன்ற சட்டக்குழு தலைவர் Bar Council துஷாந்த் தேவ் அவர்கள், இவர் - சந்திரசூட். தன் கடவுளைக் கேட்டார் என்றால், எச்ச நீதிபதிகள் எந்தக் கடவுளைக் கேட்டார்கள். அந்தக் கடவுகள் என்னச் சொன்னார்கள் எனக் கேட்கின்றார்

சந்திரசூட், தான் நீதிபதியாகப் பதவி ஏற்கும்போது எடுத்த உறுதிமொழியை மீறி விட்டார். அதனால் இவர் கொடுத்த எந்தத் தீர்ப்பும் செல்லாது என அறிவிக்க வேண்டும் என்பது வழக்கறிஞர்களின் ஒருமித்த கருத்து.

இவற்றிற்கெல்லாம் மேலான மிகப்பெரிய கெடுதல் என்னவெனில் உச்ச நீதிமன்ற தீர்ப்புகள், கீழ் நீதிமன்றங்களின் வழிகாட்டுதல்களாகக் கருதப்படும்.

எனவே, நாட்டிலுள்ள கீழ்நீதிமன்றங்கள், இனி தீர்ப்புகளை வழங்கிடும்போது நாங்கள், எங்கள் கடவுளைக் கேட்டுத்தான் தீர்ப்புகளை வழங்கினோம் என்றால் இந்த நாட்டில் இன்றளவும் பாதுகாக்கப்பட்ட சட்டங்கள் என்னவாகும்? பாபரி மஸ்ஜித் விவகாரத்தில் கடவுள்கள் நிரம்பவே விளையாடுகின்றார்கள்.

- முதலில் இராம் லல்லி உருவமற்ற கடவுள் - ஒரு கட்சியாக, நீதிமன்றத்தில் வாதிட்டார்.

- பாபரி மஸ்ஜித்-இல் பூட்டை திறந்து வழிபாடுகளை அனுமதிக்கும் போது, அனுமார் (குரங்கு) வந்து சமிஞ்சைக் காட்டியதாக அன்று பூட்டைத் திறக்க உத்தரவிட்டார் நீதிபதி குறிப்பிட்டார்.

பதவிகளை லஞ்சமாகத் தந்து பெறப் பட்டதே இராமர் கோயில்.

மனசாட்சி உள்ள எந்தக் கடவுளும் இதுபோன்ற கோயிலில் குடியிருக்கமாட்டார்.

ஏனெனில் அன்று 1949இல் டிசம்பர் 21 தேதிகளில் பாபரி மஸ்ஜித்-இல் சிலை வைத் ததை ஆமோதித்த மாவட்ட நீதிபதி கே.கே. நய்யாருக்கு பல காணி நிலங்கள் லஞ்சமாகத் தரப்பட்டன. பின்னர் அவருக்கு அரசியல் பதவிகளும் தரப்பட்டன. பின்னர் பூட்டைத்

திறந்துவிட்டவருக்கு அதேபோல் பதவிகள் தரப்பட்டன.

இப்போது இறுதி தீர்ப்புக்கு தலைமை தாங்கிய நீதிபதி ரஞ்சன் கோகைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி, அத்துடன் உயர்மட்ட பாதுகாப்பு அவருடைய மனைவிக்கும் பதவி.

அத்தோடு அவர் மீதிருந்த பாலியல் வன்கொடுமை வழக்கிலிருந்தும் விடுவிக்கப் பட்டார். சுருக்கமாகச் சொன்னால் சிறையிலிருக்க வேண்டிய நீதிபதிக்கு சிம்மாசனம்.

அடுத்து தீர்ப்பை எழுதியதாகக் கருதப்படும் சந்திரசூட்டிற்கு பதவிகள், பல காத்திருக்கின்றன. ஆனால் அவர் சற்றுக் காலந்தாழ்த்தே தரப்படும் என்பது அரசியல் நோக்கர்களின் கருத்து.

பொறுத்திருந்து பார்ப்போம். **- MGM**

**நீதிபதி சந்திரசூட் சிறுபான்மை முஸ்லிம்களுக்குச் செய்த மிகப்பெரிய துரோகம்!**

மூத்த வழக்கறிஞர், முன்னால் உச்சநீதிமன்ற பார் கவுன்சில் தலைவர் துஷாந்த் தேவ் கண்ணீர்.

இந்தியாவில் நீதித்துறையின் அநீதிகளுக்கு எதிராகப் போராடும் - தங்கள் கருத்தையும், கண்டனத்தையும் தைரியத்துடன் தெரிவிப்ப வர்கள், சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்களே.

நீதிபதி சந்திரசூட்-இன் இன்னொரு இந்துத்துவ சேவை. பாபரி மஸ்ஜித் தீர்ப்பில் பெரிதாகப் பேசப்பட்ட வழிபாட்டுத் தளங் களின் சட்டம் 1991

இந்தச் சட்டத்தின் அடிப்படையில் 1947, ஆகஸ்ட் 15,இல் இருந்த வழிபாட்டுத் தளங்கள் எவற்றின் நிலைகளை மாற்றிடவே கூடாது. அவற்றில் எந்த வழக்கையும், எந்த நீதிமன்றமும் விசாரணைக்கு எடுக்கக் கூடாது.


ஆனால், நீதிபதி சந்திரசூட், தான் பதவி வகித்த காலங்களில் மஸ்ஜித்களை மறு ஆய்வுக்கும் சர்வேவுக்கும் உட்படுத்தலாம் என்று ஒரு தீர்ப்பை வழங்கி, பாபரி மஸ்ஜித் தாங்கள் வழங்கிய தீர்ப்பையே மறுத்திருக்கின்றார்.

இதனால் இன்று பல மஸ்ஜித்கள் கோயில் களாக மாறும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஏன் 'சம்பல்' (உத்திரப் பிரதேசத்தில்) பகுதி ஜாமா மஸ்ஜித் விவகாரத்தில் பலர் உயிரிழந் திருக்கின்றார்கள்.

சந்திரசூட், சிறுபான்மை முஸ்லிம்களுக்கு செய்த அநீதிகளை நினைவு கூர்ந்த மூத்த வழக்கறிஞர், துஷாந்தேவ் தான் வையர் Wire என்ற இணைய தளத்திற்குத் தந்தப் பேட்டியில், அதுபோது எனக்கு பல நாட்கள் தூக்கமில்லை. சந்திரசூட்-இன் அநீதியை எண்ணி எனச் சொன்னபோது அழுதுவிட்டார்.


கஷ்மீர் மக்களின்
இன்றைய அவலங்களை
அறிந்திட படியுங்கள்...
கஷ்மீரின் பாதி விதவைகள்..
வேர்கள் பதிப்பகம்..




விலை ரூ.70/-

கிடைக்குமிடம்
**வேர்கள் பதிப்பகம்**
மண்ணடி, சென்னை - 600 001.
பேசி : 8148129887, 74012 13394



# முஹம்மதியா மஸ்ஜித் - பர்பானி குண்டுவெடிப்பு வழக்கு 2003

## பிராமிணிஸ்ட் குற்றவாளிகளுக்கு ஆதரவாக செயல்பட்ட நீதிமன்றங்கள்

**நவம்பர் மாத தொடர்ச்சி....**

யோகேஷ் தேஷ்பாண்டே, மாருதி வாக் ஆகிய இருவரையும் கைது செய்தவர் அவர். குற்றவாளிகளின் வீடுகளிலும் அவர்களுடைய மற்ற நிறுவனங்களிலும் சோதனையை மேற் கொண்டு சஞ்சய் சவுத்ரி, ஹிமான்சு பான்சே ஆகிய இருவர் மீது முதலிலும் பின்பு யோகேஷ் தேஷ்பாண்டே, மாருதி வாக்கின் மீதும் குற்றப் பத்திரிகையை முதலில் பதிவு செய்தவர் அவர். எனவே விசாரணை தரப்பில் முக்கியமான சாட்சி அவர். நீதிமன்றத்தில் தன்னுடைய வாக்கு மூலத்தை உறுதியாக பதிவு செய்தார். மேலும் குறுக்கு விசாரணையின் போதும் உறுதியாக இருந்தார். எனவே குற்றவாளிகளை பொறுத் தவரை அவர்களுக்கு அவர் ஒரு அச்சுறுத்தலாக இருந்தார்.

ஆனால் ACP அணில் தமைசேகரை பயன் படுத்தியே அவருடைய வாக்குமூலத்தை ஒன்று மில்லாமல் ஆக்கிவிட்டது பிரதிவாத தரப்பு. குறுக்கு விசாரணையின் பின் பகுதியில் அவர் ஒரு தவறுதலான வாக்குமூலத்தை அளித்து விட்டார். ஜால்னா குண்டுவெடிப்பு சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் எந்தவித வாக்கு மூலத்தையும்தான் பதிவு செய்யவில்லை என்றும் சாதர் பஜார் காவல் நிலையத்தில் பதிவு செய்யப் பட்ட குற்ற வழக்கில் தன்னுடைய வாக்கு மூலம் ஜால்னா மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் (SESSIONTRIALNO.28/2007) பதிவுசெய்யப்பட வில்லை என்றும் கூறிவிட்டார். திட்டமிட்டபடி, ACP அணில் தமைசேகருடைய வாக்குமூலத்தின் நகலை ஜால்னா அமர்வு நீதிமன்றத்தில் சமர்ப் பித்தது பிரதிவாத தரப்பு.

இந்நேரத்தில்தான் நீதிமன்றத்தில் ஒரு விண்ணப்பத்தை தாக்கல் செய்தார் ACP அணில். அதில் தான் கடுமையான நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு இருந்ததை குறிப்பிட்டிருந்தார். அதனுடன் ஒரு தனியார் மருத்துவமனையில் பெறப்பட்ட சான்றிதழையும் இணைத்திருந் தார். அதில் இரத்த அழுத்தமும் ரத்தத்தில் சுகரின் அளவும் மாறுபடும்போது, அவருக்கு தற்காலிக நினைவு இழப்பு ஏற்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. மருத்துவர் கொடுத்த சான்றிதழை ஆய்வு செய்யவும் இல்லை அதை யாரும் சரி பார்க்கவும் இல்லை. ஆனால் இதனை வைத்துக்கொண்டு, இப்படிப்பட்ட ஒரு சாட்சியத்தின் மேல் எப்படி நம்பிக்கை வைக்க

முடியும் என்ற வினாவை எழுப்பியது நீதிமன்றம். இவ்வாறாக ஒரு முக்கியமான சாட்சியின் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்டு விட்டது.

இந்த நேரத்தில் விசாரணை தரப்பு என்ன செய்திருக்க வேண்டும்?. தனியார் மருத்துவர் தந்த சான்றிதழை ஆய்வு செய்து அதனை சரிபார்க்க வேண்டும் என்றும் ACP அணில் தமை சேகரை மருத்துவ வாரியம் சோதனை செய்து அவருக்கு உயர் ரத்த அழுத்தம், சுகர் நேரிடும் பொழுது அவர் தற்காலிக மறதி நோயால் அவதிப்படுகிறாரா இல்லையா என்பதை உறுதிப்படுத்திட வேண்டும் என்பதை அழுத்தம் திருத்தமாக கூறி இருக்க வேண்டும். சோதனையின் போது அவர் மேலே கூறப்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டு இருக்கிறார் என்று கண்டுபிடிக்கப்பட்டு விட்டால் அவருக்கு அரசாங்கம் கட்டாய விடுப்பு அளிக்க வேண் டும். அல்லது, அவருக்கு எந்த பாதிப்பும் இல்லை என்று நிரூபணமானால் குற்றவாளி களை தவறாக பயன்படுத்தியதற்காக அவர்மீது ஒழுங்கு நடவடிக்கைகளை எடுக்க பரிந்துரை செய்ய வேண்டும்.

ஆனால் விசாரணை தரப்பு இதிலும் ஒரு பார்வையாளரை போன்றே செயல்பட் டுள்ளது. ACP அணில் தமைசேகரின் வாக்கு மூலத்தை ஒன்றுமில்லாமல் ஆக்கிடவும் வழக்கை இழுத்து மூடிடவும் விசாரணை தரப்பும் சேர்ந்து சதிசெய்துள்ளதோ என்ற சந்தேகத்திற்கு வலு சேர்க்கிறது மேற்கூறப்பட்ட உண்மைகள்.

## 8) பயிற்சி அளித்த முக்கியமான நபர்களையும் விட்டுவிடல்

பர்பானி, ஜால்நா, நந்தேத் குண்டுவெடிப்பு வழக்குகளை விசாரணை செய்யும்போது, புனே, நாக்பூரில் வைத்து ஆர்எஸ்எஸ், பஜ்ரங்தள் உறுப்பினர்களுக்கு தீவிரவாத பயிற்சி அளித்த வர்களின் முக்கியமான நபர்களின் பெயர்களும் வெளிவந்தன.

*1) உண்மை கண்டறியும் சோதனையின் போது (புனே சின்ஹகட் அகான்சா ரிசார்ட்டில் வைத்து) பயிற்சி அளித்த முக்கியமாக நபரின் பெயரை வெளிப் படுத்தினான் சஞ்சய் சவுத்ரி. அவன் பெயர் மிதுன் சக்ர போர்தி. அவன் உயரமான தடித்த உருவம் கொண்டவன். தாடி வைத்திருந் தான். ஹிமான்சு அவரை ஐயா என்றே அழைத் தான். பர்பானி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நான்கு பேருடன் திரும்பும் பொழுது குண்டு செய்வதற்கான பொருட்கள் அடங்கிய பையை ரயில்வே நிலையத்தில் வைத்து அவர்களிடம் கொடுத்துள்ளான் மிதுன் சக்ர போர்தி.*



**எஸ்.எம். முஷ்ரிஃப், IPS**
முன்னாள் இன்ஸ்பெக்டர் ஜெனரல், மகாராஷ்டிரா காவல்துறை

*2) ஜால்நா குண்டுவெடிப்பு வழக்கில் (நவம்பர் 2008) ராகேஷ் தவாதேயை கைது செய்திடும் பொழுது அவன் காவல் துறையிடம் இவ்வாறு கூறினான். 2003 இல் அகான்சா ரிஷார்ட்டில் வைத்து குண்டு செய்வது எப்படி என்ற பயிற்சியை வேதியியல் பேராசிரியர்களான டாக்டர் சரத்குந்தேவும் தியோவும் வழங்கினர்.*

*3) நந்தேத், பர்பானி குண்டுவெடிப்பு வழக்கு விசாரணைகளில் சனத்குமார் பாதே அளித்த வாக்குமூலத்தின்படி, 2001இல் புனே போன்சாலா ராணுவ பள்ளிக்கூடத்தில் ஆர்எஸ்எஸ், பஜ்ரங் தள் நடத்திய 40 நாள்பயிற்சி முகாமில் நாடு முழுவதிலும் இருந்து 115 பேர் கலந்து கொண்டனர். இதில் இரண்டு ராணுவ முன்னாள் அதிகாரிகளும் ஒரு முன்னாள் மத்திய உளவுத்துறை (IB) அதிகாரியும் கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர்.*

இவர்கள் அனைவருமே சதிவலை பின்னிய வர்களில் முக்கியமானவர்கள். ஆனால் இவர்களில் ஒருவர் கூட மூன்று வழக்கு களையும் (பர்பானி, ஜால்னா நந்தேத்) விசாரித்த மகாராஷ்டிர தீவிரவாத எதிர்ப்புப்படையின ராலோ அல்லது நந்தேத் வழக்கை பின்னர் விசாரித்த மத்திய புலனாய்வு துறையாலோ (CBI) கைது செய்யப் படவில்லை.


vaigarai velicham official

மிதுன் சக்ரபோர்தி என்பது போலியான பெயராகத் தெரிகிறது. ஆனால் அவனைக் கண்டுபிடிக்கவோ கைது செய்யவோ எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. மகாராஷ்டிர தீவிரவாத எதிர்ப்புப்படை, மத்திய புலனாய் வுத் துறை (CBI) போன்ற சக்தி வாய்ந்த முகமை களுக்கு மிதுன் சக்ரபோர்தி யார் என்பதை கண்டுபிடிப்பதும் கைது செய்வதும் மிகப்பெரிய விஷயமல்ல. ஆனால் ஏதோ ஒரு சில காரணங் களுக்காக அவனுடைய அடையாளத்தை வெளிப்படுத்த விரும்பவில்லை என்று தெரிகிறது. அவன் ஆர்எஸ்எஸ், பஜ்ரங்தளின் மிக மூத்த உறுப்பினராக இருக்கலாம் அல்லது மத்திய உளவுத்துறையில் (IB) பணி செய்யும் அல்லது ஓய்வு பெற்ற அதிகாரியாகவும் இருக் கலாம். அப்படி இருந்தால் மத்திய உளவுத் துறையின் (IB) அனுமதி இல்லாமல் தீவிரவாத எதிர்ப்புப்படையாலோ(ATS) மத்திய புலனாய் வுத் துறையாலோ (CBI) அவரை தொடக்கூட முடியாது. IB அதற்கு அனுமதிக்கவும் செய்யாது.

புனே அகான்சா ரிசார்ட்டில் வைத்து நடந்த தீவிரவாத பயிற்சி முகாமில் பைப் வெடி குண்டுகளை செய்வது எப்படி என்ற பயிற்சி அளித்த வேதியியல் பேராசிரியர்களான சரத்குந்தே, தியோ ஆகிய இருவரையும் விசாரணை செய்யவில்லை. ஜால்னா குண்டு வெடிப்பு வழக்கில் (நவம்பர் டிசம்பர் 2008) முதன் முதலாக சரத் குந்தே, தியோவின் பெயர்கள் வெளிப்பட்ட போது, 2008 மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கு விசாரணையில் தொடர்புடைய அதிகாரியான புனே தீவிரவாத எதிர்ப்புப்படையின் தலைவரான காவல் ஆய்வாளர் பீட்டர் லோபோ சரத்குந்தேவை அழைத்து முதல்கட்ட விசாரணையை நடத்தி உள்ளார். அதில், புனே நவ்ரோஸ்ஜி வாதிய கல்லூரியில் 32 வருடங்களாக பௌதீக வேதியியல் பாடத்தை நடத்தியுள்ளார் என்பதும் இருபது வருடங்களாக VHPஇன் மாநிலத் தலைவராக செயல்பட்டு உள்ளார் என்பதும் தெரியவந்தது. ஆய்வாளர் லோபோ மீண்டும் அவரை அழைத்து ஒரு முழுமையான விசாரணையை நடத்த விரும்பினார். ஆனால் மகாராஷ்டிர தீவிரவாத எதிர்ப்புப்படையில் பணிபுரியும் மூத்த பிராமினிஸ்ட் அதிகாரிகள் அடுத்த கட்ட விசாரணைக்கு அவரை அனுமதிக்க வில்லை (84). மேலும் தியோவை விசாரணை செய்தார்கள் என்ற எந்தவித குறிப்பும் இல்லை.

சரத் குந்தே விசாரணை செய்யப்படாமல் விடப்பட்டது மட்டுமில்லை. அவருடைய சமூக அந்தஸ்தும் தொடர்ந்து உயர்ந்து கொண்டே இருந்தது. பிராமினிஸ்ட்கள் இயக்கும் புனே டெக்கான் கல்வி குழுமத்தின் நிருவாக குழுவின் தலைவராக 2017 இல் பதவி ஏற்றார். புகழ்பெற்ற FERGUSSON கல்லூரி இந்த குழுமத்தின் ஒரு அங்கம்.

விசாரணையில் வெளிப்பட்ட இன்னொரு முக்கிய கலக்க மடைய செய்யும் உண்மை என்னவென்றால் மத்திய உளவுத் துறையின் (IB) ஓய்வு பெற்ற மூத்த அதிகாரி நாக்பூர் தீவிரவாத பயிற்சி முகாமில் மிகவும் ஈடுபாட்டுடன் பங்கேற்று உள்ளார் என்பதே. ஆனால் விசாரணை முகமைகள் அவரின் அடையா ளத்தை மறைக்க முயன்றுள்ளது. மத்திய உளவுத் துறையின் அனுமதி இல்லாமல் இவரையும் கைது செய்ய முடியாது.

மத்திய உளவுத்துறையும் (IB) விசாரணை முகமைகளும் ஓய்வு பெற்ற மூத்த மத்திய உளவுத்துறை அதிகாரியின் அடையாளத்தை வெளிப்படுத்த மறுத்தாலும், மகாராஷ்டிராவின் IPS அதிகாரிகளுக்கு அவர் யார் என்பது தெரியும். அவரும் மகாராஷ்டிர ஐபிஎஸ் அதிகாரிகளில் ஒருவராக இருந்தவர். அவர் சுடுவதற்கான பயிற்சிகளை அளித்து உள்ளார். போன்சாலா ராணுவ பள்ளிக் கூடத்தோடு அவருக்கு இருந்த தொடர்பு மிகவும் தெரிந்ததே. ஆனால் அவர் இப்போது உயிரோடு இல்லை. அவர் உயிரோடு இருந்த காலம் வரை விசாரணை செய்யப்படவும் இல்லை. இதுவே மத்திய உளவுத்துறையின் பலம்.

நாக்பூர் தீவிரவாத பயிற்சி முகாமில் பயிற்சி அளித்தனர் என்று சனத்குமார் கூறிய இரண்டு முன்னாள் ராணுவ அதிகாரிகள் யாராக இருக்க முடியும் என்றால் Lt. Col. பிரசாத் புரோஹித் மற்றும் மேஜர் ரமேஷ் உபாத்யாய் (ஓய்வு). இவர்கள் இருவரும் பின்னர் 2008 மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கில் தீவிரவாத எதிர்ப்புப் படையின் தலைவர் ஹேமந்த் கர்கரேவால் கைது செய்யப்பட்டனர். ஆனால் ஆச்சரியப்படும்

விதமாக நந்தேத் குண்டுவெடிப்பு வழக்கோடு தொடர்புடைய மற்ற எந்த வழக்குகளிலும் இவர்கள் கைது செய்யப்படவில்லை. அவர்கள் ஏன் மற்ற வழக்குகளிலும் கைது செய்யப்பட வில்லைஎன்றால், அப்படி செய்யப்பட்டிருந்தால் அது விசாரணையின் எல்லையை மேலும் விரிவு படுத்தி இருக்கும். அப்படி நடப்பதை மத்திய உளவுத்துறை (IB) ஒருபோதும் விரும்பாது.

## 9) ராகேஷ் தவாதே

நாக்பூர், புனே ஆகிய இடங்களில் பயிற்சி அளித்த முக்கிய சதிகாரர்களை விட்டும் பொதுமக்கள் மற்றும் நீதிமன்றத்தின் கவனத்தை திசை திருப்ப நந்தேத் வழக்கில் ராக்கேஷ் தவாதே என்ற முக்கியமில்லாத நபரை கைது செய்தனர் விசாரணை அதிகாரிகள். இந்த வழக்கை பொறுத்தவரை அவனின் பங்கு மிகவும் குறைவு. ஆனால் புனே அகான்சா ரிஷார்ட்டில் நடந்த பயிற்சி முகாமில் முக்கிய உதவியாள னாக இருந்தான் என்ற அளவுக்கு கொண்டு வந்து விட்டனர்.

பர்பானி வழக்கு முழுவதுமாக முடிந்து இரண்டு குற்றப் பத்திரிகை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பின் அதாவது இரண்டு வருடத்திற்கு பின் அவன் பெயர் முன்னே கொண்டு வரப்பட்டது. முக்கிய சதிகாரர்களை காப்பாற்றிட அவன் பலிகடா ஆக்கப்பட்டார் என்பது வெளிப்படை. மிலிந்த் நட்டு, சுதன்வா தியோல், ராஜேந்திர இந்தல்கர் ஆகியோரின் சாட்சியத்தின் படி, புனே சின்ஹகட் அருகில் அமைந்திருக்கும் பபே மலையடிவாரத்தில் வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்யும் செயல் முறைகளை ஏற்பாடு செய்ததற்காக ராகேஷ் தவாதே மீது குற்றம் சுமத்தப்பட்டது.

மூன்றாவது குற்றப் பத்திரிக்கையும் அனுப்பப்பட்டது. அவன் தான் வெடிகுண்டு களை வெடிக்கச் செய்யும் செயல் முறைகளை நடத்தினான் என்ற முடிவுக்கும் நீதிமன்றம் வந்தது. ஆனால் ஆச்சரியப்படும் விதமாக அவன் மீது எந்த தண்டனையும் விதிக்கவில்லை.

## 10) அடுத்து என்ன?

பர்பானி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட வர்களை விடுதலை செய்ததற்கு எதிராக அரசு உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்ததா என்பது தெரியவில்லை. உயர்நீதிமன்ற மூத்த அரசு தரப்பு வக்கீல் இந்த வழக்கை எந்த அளவுக்கு தீவிரத்துடனும் கவனமுடனும் போராடுவார் என்பது சொல்ல முடியாது.

எனவே பர்பானி குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட அப்துல் சமதின் உறவினரோ அல்லது குண்டுவெடிப்பில் காயம் பட்டவர் களில் யாரேனும் ஒருவரோ உயர் நீதிமன்றத்தில் ஒரு நல்ல வழக்கறிஞரை வைத்து முறையிட வேண்டும். தீர்ப்பில் உள்ள பிழைகளை சுட்டிக் காட்டி, நான்கு வழக்குகளையும் (பர்பானி, ஜால்னா, பூர்நா, நந்தேத்) சேர்த்து மறுவிசாரணை செய்திட வேண்டும் என்றும் ஒரு நடுநிலையான தகுதி வாய்ந்த விசாரணை அமைப்பை கொண்டு இவை அனைத்தும் ஒரே சதித் திட்டத்தின் கீழ் நடந்தவை என்பதை விசாரணை செய்திட வேண்டும் என்றும் நீதிமன்றத்தில் கோரிக்கை வைக்க வேண்டும். இதை நீதிமன்றம் ஏற்று விசாரணை அமைப்பை ஏற்படுத்தி விட்டால், இந்த விசாரணை அமைப்பு பின்வருபவற்றை விசாரணை செய்திட வேண்டும்.

*1) சந்த், சாய்தா, இஸ்மாயில் கான் சுஜாத் கான் ஆகிய நேரடி சாட்சியங்களை விசாரணை செய்து அவர்களின் மூலம் உண்மையான குற்றவாளிகளை அடை யாளம் காணுதல்.*

*2) உண்மை கண்டறியும் சோதனையின் போது சஞ்சய் சவுத்ரி அளித்த வாக்கு மூலத்தை அறிக்கையாக சமர்பித்தல். இந்த சோதனையை நடத்திய பெங்களூர் தடய அறிவியல் நிபுணர்களின் மூலம் இதை உண்மை என நிரூபித்தல்.*

*3) உண்மை கண்டறியும் சோதனையின் போது சஞ்சய் சவுத்ரி கூறிய முக்கியமான பகுதிகளைப் பற்றி அவனிடம் கேள்வி கேட்டு சதித் திட்டத்தைப் பற்றி எவ்வளவு உண்மையான தகவல்களை பெற முடியுமோ அவை அனைத்தையும் பெற்றிடல்.*

*4) வாக்குமூலத்தின் ஒவ்வொரு பகுதியை யும் முழுமையாக விசாரணை செய்தல்.*

*5) நந்தேத் குண்டுவெடிப்பில் காயமுற்ற ராகுல் பாண்டேவிடம் நடத்தப்பட்ட*


vaigarai velicham official

உண்மை கண்டறியும் சோதனை பற்றியும் இதுபோன்ற விசாரணை நடத்தப்பட வேண்டும். ஏனெனில் சஞ்சய் சவுத்ரியின் வாக்குமூலத்தின் முக்கியமான பகுதிகளை இது உண்மைப்படுத்தும்.

6) ஆர்எஸ்எஸ், பஜ்ரங்தள் அமைப்புகளுக்கு தீவிரவாத பயிற்சி முகாமை தங்களுடைய இடங்களில் நடத்த அனுமதி தந்த நாக்பூர் போன்சாலா இராணுவ பள்ளிக்கூட அலுவலக உரிமையாளரின் மீதும் புனே சின்ஹகட் அகான்சா ரிஷார்ட் உரிமை யாளரின் மீதும் குற்றம் சுமத்துதல்.

7) மிதுன் சக்ரபோர்தி யார் என்பதை அறிந்து அவனை கைது செய்தல்.

8) தீவிரவாத பயிற்சி முகாமில் கலந்து கொண்ட மூத்த ஒய்வு பெற்ற மத்திய உளவுத்துறை (IB) அதிகாரி யாரென்பதை அடையாளம் காணுதல்.

9) குண்டு செய்வது எப்படி என்று பயிற்சி யளித்த புனேவை சேர்ந்த வேதியியல் பேராசிரியர்களான சரத் குந்தேவையும், தியோவையும் கைது செய்தல்.

10) 2008 மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட LT. COL. பிரசாத் புரோஹித் மற்றும் மேஜர் (ஓய்வு) ரமேஷ் உபாத்யாய் ஆகிய இரண்டு ராணுவ அதிகாரிகள் தான் சனத்குமார் பாதே வாக்குமூலத்தில் கூறிய போன்சாலா ராணுவ பள்ளிக் கூடத்தில் பயிற்சி அளித்த அதே ராணுவ அதிகாரிகள் என்பதை உறுதி செய்தல். அப்படி உறுதி செய்யப்பட்டால் இந்த வழக்கிலும் அவர்களை கைது செய்தல்.

11) நாக்பூரில் பயிற்சி அளித்தவர் களில் மிதுன் சக்ரபோர்தி என்பவர் யார் என்பதை சனத்குமார் பாதேவிடம் விசாரணை செய்து கண்டறிதல்.


12) பஜ்ரங்தள் தலைவன் பாலாஜி பாக்ரே விடமும் மற்ற ஆர்எஸ்எஸ், பஜ்ரங்தள் தலைவர்களிடமும் முழுமையான விசாரணை மேற்கொள்ளுதல். இவர்களில் யாரிடம் இருந்து ஹிமான்சு பான்சே குண்டுவெடிப்பு சம்பந்தமான கட்டளை களை பெற்றான் என்பதை அறிந்து அவர்களையும் சதிகாரர்கள் பட்டியலில் கைது செய்தல்.

13) அதுல் கம்திகர் என்பவனுடைய மொபைல் எண் 98222 97494. இந்த எண்ணிற்கு வந்த / சென்ற அழைப்பு விவரங்களை பெற்று அதனை ஆராய்தல். ஏனெனில் நந்தேத் வழக்கில் இந்த நம்பரை குற்றவாளி ஒருவன் பயன்படுத்தி உள்ளான் என்பது தெரியவந்தது.

14) குண்டுவெடிப்பு சம்பந்தமான தகவல் களை தன்னுடைய மேலிடத்தில் இருந்து பெறுவதற்கு ஹிமான்சு பான்சே பயன் படுத்திய சிம்கார்டின் நம்பரை அறிதல். அந்த நம்பருக்கு வந்த/சென்ற அழைப்பு விவரங்களை அறிந்து அதன்மூலம் ஹிமான்சு பான்சேவை இயக்கியவர்கள் யார் என்பதை கண்டறிந்து அவர்களை கைது செய்தல்.

மேற்கூறியவற்றில் விசாரணை செய்து நீதிமன்றத்தில் வழக்கை கவனமாக தொடர்ந்து சென்றால் சதிகாரர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று நம்பலாம்.

அடுத்த இதழில் தொடரும்...



# ஃபாலஸ்தீன முஸ்லிம்கள்

## அகதிகளான வரலாறு

**தொடர்...**



நவம்பர் மாத தொடர்ச்சி....

## 1930 வட்ட மேஜை மாநாடு!

1930 நவம்பர் திங்களில் லண்டனில் முதல் வட்ட மேஜை மாநாடு நடைபெற்றது. இந்துக்களும், முஸ்லிம்களும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும்படி அழைக்கப் பட்டிருந்தார்கள்.

இந்திய முஸ்லிம்களின் சார்பில் சென்றவர் களில் கிலாபத் கமிட்டியின் தலைவர் மௌலானா முஹம்மத் அலீயும் உண்டு.

மௌலானா முஹம்மத் அலீ அவர்கள் லண்டன் செல்லும் வழியில் எகிப்து சென்றார்கள்.

எகிப்திலுள்ள செய்யீத் துறைமுகத்தில் வைத்து ஜெருசலத்தின் முஃப்த்தி ஹாஜி அமீன் ஹுஸைன் அவர்கள் மௌலானா முஹம்மத் அலீ அவர்களைச் சந்தித்தார்கள். வட்ட மேஜை மாநாட்டில் முஸ்லிம்கள் சார்பில் வைக்கப் படும் கோரிக்கைகளுள் ஒன்றாக பாலஸ்தீன் முஸ்லிம்களின் உரிமைகளும் இருந்திட வேண்டும் எனக் கோரினார்கள் ஹாஜி அமீன் ஹுஸைன் அவர்கள்.

முஃப்த்தி ஹாஜி அமீன் ஹுஸைன் அவர்களின் கோரிக்கைகளை உடனேயே ஏற்றுக் கொண்டார்கள் மௌலானா முஹம்மத் அலீ அவர்கள். அத்தோடு பாலஸ்தீன் முஸ்லிம்களின் சார்பில் ஒரு பிரதிநிதியைக் கூட தான் லண்டன் அழைத்துச் செல்ல தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டார்கள்.

உடனேயே ஹாஜி அமீன் ஹுஸைன் அவர்கள் ஹாஜி ஜமால் அல் ஹுஸைனி அவர்களை உடன் அனுப்பி வைத்தார்கள்.



vaigarai velicham official

கிலாபத் கமிட்டியின் இன்னொரு உறுப்பினர் ஆகாகான். இவரும் லண்டன் சென்றிருந்தார், வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொள்ள. அங்கு வைத்து இருவரும் ஹாஜி ஜமால் அல் ஹுஸைனுடன் சேர்ந்து கொண்டார். இருவரும் பிரிட்டனின் பிரதம அமைச்சர்மெக்டேலாட்டை டிசம்பர், 1930-இல் சந்தித்தார்கள். பாலஸ்தீன முஸ்லிம்களின் அவலங்களை எடுத்துரைத்தார்கள். மெக்டோல்டு நிச்சயமாக பாலஸ்தீன் முஸ்லிம் களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என உறுதி தந்தான். ஆனால் பின்னர் காலை வாரினான். ஆங்கிலேயர்களின் வழக்கம்.

இது நடந்த வட்ட மேஜை மாநாட்டில் முஸ்லிம்கள் இந்திய முஸ்லிம்களின் உரிமை களுக்காகவும், தலித் மக்களின் அதாவது ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகவும் பாலஸ்தீன் முஸ்லிம்களின் உரிமைகளுக்காகவும் வாதாடினார்கள், போராடினார்கள்.

அதே போல் பாலஸ்தீனில் 1929 இல் யூதர் களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் நடந்த போரில் மூன்று முஸ்லிம்களைக் கைது செய்து வழக்குப்பதிவு செய்து, தூக்குத் தண்டனை வழங்கினார்கள் ஆங்கிலேயர்கள்.

இதனையும் வன்மையாக எதிர்த்தார்கள் இந்திய முஸ்லிம்கள். போருக்கு முஸ்லிம்கள் எந்த விதத்திலேயும் காரணமல்ல. ஆகவே எங்கள் சகோதரர்களைத் தூக்கில் போடக்கூடாது என நெருக்கடிகளைத் தந்தார்கள் ஆங்கில அரசுக்கு.

இந்திய முஸ்லிம்களின் எதிர்ப்பு கவனிக்கப் படும். மரண தண்டனை குறைக்கப்படும் எனக் கூறி இந்தியாவில் நடந்த எதிர்ப்புகளை சமாளித்தார்கள் ஆங்கிலேயர்கள். ஆனால் அந்த முஸ்லிம்களுக்கு மரண தண்டனையையே வழங்கினார்கள்.

இதனால் இந்தியாவிலும் பாலஸ்தீனிலும் ஆங்கிலேயர் களுக்கெதிரான எதிர்ப்பு வலுப்பெற்றது.

இந்தப் போராட்டம் உலகின் இதரப் பகுதிகளுக்கும் பரவிற்று. ஆங்கிலேயர்களுக் கெதிராக ஓர் எதிர்ப்பு அலை எங்கனும் உருவாயிற்று.

**1931: மௌலானா முஹம்மத் அலீ (ரஹ்) அவர்களின் மரணமும் பாலஸ்தீன் முஸ்லிம்களின் நன்றியுணர்வும்!**

வட்ட மேஜை மாநாட்டில் கலந்துகொள்ள சென்ற மௌலானா முஹம்மத் அலீ அவர்கள் லண்டனில் வைத்து ஜனவரி 5ஆம் நாள் 1931ஆம் ஆண்டு மரணமடைந்தார்கள். (இறைவனிட மிருந்தே வந்தோம். அவனிடமே சென்று சேருவோம்.) அவருடைய சகோதரர் ஷவ்கத் அலீ அவர்களை இந்தியாவிற்கு கொண்டு வந்து அடக்கம் செய்திட விரும்பினார்கள்.

பாலஸ்தீனிலுள்ள ஹம்ஷரீஃப், பைத்துல் முகத்திஸ், தான் மௌலானா முஹம்மத் அலீ அவர்களை அடக்குவதற்குப் பொருத்தமான இடம். பாலஸ்தீன் பிரச்னைக்கு இந்திய முஸ்லிம்கள் தொடர்ந்து தந்து கொண்டிருக்கும் ஆதரவுக்கு நன்றி சொல்லிடும் முகத்து நாங்கள் அவரை மஸ்ஜிதுல் அக்ஸாவிற்குப் பக்கத்தில் அடக்கிட விரும்புகின்றோம் என்றார்கள் ஹாஜி அமீன் ஹுஸைன் அவர்கள். கூறியதோடு நில்லாமல் அக்ஸா மஸ்ஜிதுக்குப் பக்கத்திலேயே அடக்கமும் செய்தார்கள்.

இந்தியாவிலிருந்து பல தலைவர்களை ஜனாஸா தொழுகையில் (மரண தொழுகையில்) கலந்து கொள்ளும்படி அழைத்தார்கள் முஃப்தி. அந்த அடிப்படையில் பல முஸ்லிம்கள் பாலஸ்தீன் சென்று மரணத் தொழுகையில் கலந்து கொண்டார்கள்.

அங்கே முஃப்த்தி அமீன் ஹுஸைன், அவர்கள் அக்ஸா ஹம்ஷரீஃப் (புனிதஸ்தலம்) உலக முஸ்லிம்களின் இடம். அதில் உலகில் எங்கே முஸ்லிம்கள் இறந்தாலும் அவர்களை இங்கே அக்ஸா ஷரீஃப்ல் அடக்கிடும் உரிமை உண்டு எனப் பிரகடனப்படுத்தினார்கள்.

மௌலானா முஹம்மத் அலீ (ரஹ்) அவர்கள் ஜனவரி 24,1931 இல் நல்லடக்கம் செய்யப் பட்டார்கள். அது 1349 ஹிஜ்ரி ஆண்டில் ரமழான் ஐந்தாம் நாளாகும்.

யூதர்களுக்கு இப்படி உலக முஸ்லிம்களின் ஒற்றுமை வளர்வது பிடிக்கவில்லை. இதனால் ரோத்சில்டு என்ற ஆங்கில அதிகாரியிடம் முஹம்மத் அலீ அவர்களை அடக்கம் செய்ய இடந்தந்தவர்களை, நாடு கடத்தி ஜோர்டா

னுக்கு அனுப்ப வேண்டும் என்றார்கள். ஆனால் ஆங்கில அதிகாரிகள் அதன் மூலம் ஜோர்டா னிலும் முஸ்லிம் ஒற்றுமை மலரும் எனக் கூறி மறுத்து விட்டார்கள். (Martin Senth Kramer "The Congress in Modern Islam on the Orgins of an innovation. Princeton University Thesis: Jan 1982")

### உலக இஸ்லாமிய காங்கிரஸ் 1931 ஜெரூசலம்: World Islamic Congress : Jerusalem

மௌலானா முஹம்மத் அலீ (ரஹ்) அவர்கள் உயிரோடிருந்த காலங்களில் "World Islamic Supreme Congress" உலக முஸ்லிம் காங்கிரஸ் ஒன்று வேண்டும் என்ற திட்டத்தை முன் வைத்தார்கள். அது ஜெரூசலத்தை மையமாகக் கொண்டு அமைந்திட வேண்டும். அதில் உலக முஸ்லிம்கள் அனைவருக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்றும் விரும்பினார்கள்.

இது செயலில் வந்தது. உலக இஸ்லாமிய காங்கிரஸ் ஒன்று இந்திய முஸ்லிம்களின் முயற்சியின் மூலமாக ஜெரூசலத்தில் உருப் பெற்றது. இதன் முதல் நடவடிக்கையாக ஓர் இஸ்லாமிய பல்கலைக்கழகத்தைத் தொடங்கிட முடிவு செய்தார்கள். அதுவும் ஜெரூசலத்திலேயே தொடங்கிட ஏற்பாடு செய்யப் பட்டது.

1931 இல் ஜெரூசலத்தில் முதல் இஸ்லாமிய காங்கிரஸின் மாநாடு ஒன்றும் கூட்டப் பெற்றது. உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் முஸ்லிம்களின் பிரதிநிதிகள் வந்து கலந்து கொண்டார்கள்.

பைத்துல் முகத்திஸ் இன் நடுப்பக்கத்தில் அமைத்திட விருந்த இஸ்லாமியப் பல்கலைக் கழகத்திற்காக நிதி திரட்டும் பொறுப்பு ஹாஜி அமீன் ஹுஸைன் (முஃப்த்தி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் உலகில் பல்வேறு பகுதிகளுக்கும் சென்றிட ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆனால் ஆங்கிலேயர்கள் இதனை எப்படி யாவது தடுத்தாக வேண்டும் என முடிவு செய்தனர். இதனால் ஹாஜி அமீன் ஹுஸைன் அவர்களின் வெளிநாட்டுப் பயணத்தை இயன்ற மட்டும் தடுத்தார்கள்.

இந்தியா வந்த ஹாஜி அமீன் ஹுஸைன் அவர்களுக்கு ஹைதராபாத் நிஜாம் அவர்கள் 15,000 பவுண்டுகளை தந்தார்கள். ஆனால் ஆங்கிலேயர்கள் அந்தப் பணம் பாலஸ்தீன் சென்று சேருவதில் தடைகளை வெட்டிப் போட்டார்கள். இந்தப் பணம் இரண்டு ஆண்டுகள் கழித்தே ஜெரூசலம் சென்று சேர்ந்தது.

அதேபோல் கீழ்த்திசை நாடுகளுக்கு ஹாஜி அமீன் ஹுஸைன் செல்வதைத் தடை செய்தார்கள்.

முஸ்லிம்கள் நிரம்ப நன்கொடைகளைத் தந்தார்கள். என்றாலும் அந்தப் பணம் ஒரே நேரத்தில் பாலஸ்தீன் சென்று சேராமல் பார்த்துக் கொண்டார்கள் ஆங்கிலேயர்கள்.

இப்படி ஹாஜி அமீன் ஹுஸைனின் பயணத் தையும் கிடைத்தப் பணத்தையும் சின்னா பின்னப்படுத்திய பின் ஆங்கிலேயர்கள் தங்கள் கவனத்தை அலீ சகோதரர்களில் ஒருவரான ஷவ்கத் அலீ அவர்கள் பக்கம் திரும்பினார்கள். ஏனெனில் ஷவ்கத் அலீ அவர்கள் தாம் ஹாஜி அமீன் ஹுஸைன் அவர்களுக்கு மிகவும் உதவி யாகவும் உயர்ந்த ஆலோசனைகளை வழங்கு பவராகவும் இருக்கின்றார்கள் என முடிவு செய்தார்கள் ஆங்கிலேயர்கள்.

இதனிடையே இன்னொரு நிகழ்வும் நடந்தது. முன்னாளில் கலீபாவாக இருந்த அப்துல் மஜீத் அவர்களின் மகனுக்கும் ஹைதரா பாத் நிஜாம் அவர்களின் மகளுக்கும் திருமணம் நடந்தது. இந்தத் திருமணத்திற்கு மூல காரணமாக இருந்தவர் ஷவ்கத் அலீ அவர்கள்.

இந்தத் திருமணத்தில் ஓர் திட்டமிருப்பதாக நினைத்தார்கள் ஆங்கிலேயர்கள். அந்தத் திட்டம், மீண்டும் கிலாபத்-ஐ கொண்டு வருவதற்கான, திட்டமாகத் தானிருக்கும் என்று கருதினார்கள்.

ஆகவே இந்த திட்டத்தை உடனேயே முறியடித்தாக வேண்டும் என முடிவு செய்தார்கள். அதன் முதற்கட்டமாக ஷவ்கத் அலீ அவர்கள் மீது அவதூறுகளைக் கொண்டு வரவேண்டும் - பரப்ப வேண்டும் என முடிவு செய்தார்கள்.

ஷவ்கத் அலீ அவர்கள் இந்திய முஸ்லிம்களின் ஒட்டுமொத்தமான பிரதிநிதி அல்ல என்றொரு


vaigarai velicham official

அறிக்கையை இந்திய முஸ்லிம்களில் சிலரை விலைக்கு வாங்கி வெளியிட வேண்டும் என்று முடிவு செய்தார்கள். பின்னர் இந்தச் சதியை இன்னும் கூர்மையாக்கினார்கள்.

கிலாபத் கமிட்டியிலிருந்தே சில முஸ்லிம் களைக் கொண்டு இந்த அறிக்கையை வெளியிட வேண்டும் என்று திட்டம் போட்டனர். இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை யூதர்களிடமே தந்தனர்.

இது தொடர்பாக யூத தீவிரவாத தலைவர்களுள் ஒருவனான அர்லோ சோரஃப் Arlo Soroff என்பவன் இந்தியாவிலிருந்த யூத உளவாளி, பிராடஸ்கி என்பவனுக்கு எழுதிய இரகசிய கடிதம் ஒன்று பின்னர் பிடிபட்டது. அந்தக் கடிதத்தில் இப்படி எழுதப்பட்டிருந்தது.

'ஷவ்கத் அலீ அவர்களுக்குகெதிராக இந்திய பிரதிநிதிகளிடம், குறிப்பாக கிலாபத் கமிட்டியிலுள்ளவர் களிடம் ஓர் அறிக்கையை வாங்கிட வேண்டும். அதற்கு என்ன விலை வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஆனால் அது உடனேயே நடக்க வேண்டும். அந்த அறிக்கை இன்னொரு செய்தியையும் உரக்கச் சொல்லிடவேண்டும். அது, "பாலஸ்தீனின் உள்விவகாரத்தில் தலையிடுவது இந்திய பாலஸ்தீன முஸ்லிம்களின் கடமை அல்ல.

முஸ்லிம்களிடமே விட்டுவிடலாம். அப்படி விட்டுவிடுவது இந்திய முஸ்லிம்களுக்கு மிகவும் நல்லது."

"இப்படி ஒரு அறிக்கையை நீங்கள் அவ்வளவு எளிதாக இந்திய முஸ்லிம்களிடமிருந்து வாங்கிட இயலாது. கடுமையாக உழைக்க வேண்டும். பொருளையும் அள்ளித் தந்திட வேண்டும். இது முடியும், எனச் செய்து காட்டினால் நாம் ஒரு பெரும் போரில் வென்று விட்டோம்"

(ஆதாரம்: Zionist Archives File a/525/5689 Letter dated 13.11.1931)

முடிந்த மட்டும் முயற்சிகளை மேற்கொண் டார்கள் யூதர்களும், ஆங்கிலேயர்களும். எஃகால் வார்த்தெடுக்கப்பட்ட கோட்டையாக உயர்ந்து நின்ற இந்திய முஸ்லிம்களில் யாரும் ஆங்கிலேயர்கள் அள்ளித் தரும் காசுகளுக்கு இப்படியொரு அறிக்கையை விடுவதற்கு தயாராக இருக்கவில்லை. யூதர்களிடம் விலை போயிடவில்லை. ஆங்கிலேயர்களின் திட்டம் தவிடு பொடி யானது.

**யூதர்களின் பொய்ப்பிரச்சாரம்**

இந்திய முஸ்லிம்களை விலைக்கு வாங்கிடும் இராஜ தந்திரம் தோற்றுப்போகவே, ஆங்கிலே யர்களை ஆத்திர மூட்டிடும் பிரச்சாரம் ஒன்றை கட்டவிழ்த்திட்டார்கள் யூதர்கள் அது,

"கிலாபத் என்ற முஸ்லிம்களின் ஒட்டு மொத்த தலைமை இந்தியாவை மையமாகக் கொண்டு மீண்டும் உயிர்பெற்றிட இருக்கின்றது. துருக்கி இனி கிலாபத்தை எதிர்பார்க்க முடியாது. அரபுக்களுக்கும் இனி கிலாபத் இல்லை. கிலாபத் என்ற உலகத் தலைமை இந்திய முஸ்லிம்களுக்கு மட்டுமே" என முஸ்லிம் நாடுகளில் பிரச்சாரம் செய்தார்கள்.

இந்த பிரச்சாரத்தின் முடிவில் இஸ்லாத்தை இலட்சியமாகக் கொண்டவர்கள், சமுதாயத் திற்காக நற்பணிகளைச் செய்பவர்கள் இவர் களெல்லாம் ஷவ்கத் அலீ அவர்களையும் இந்திய முஸ்லிம்களையும் வெறுப்பார்கள் என எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்களின் பொய்ப்பிரச்சாரத்திற்கு யாரும் பலியாகிட வில்லை.

கிலாபத்-ஐ பொறுத்தவரை ஆங்கிலேயர் களால் தயாரிக்கப்பட்ட இரகசிய அறிக்கை ஒன்று ஐரோப்பா முழுவதும் புழக்கத்திலிருந்தது. இந்த அறிக்கை ஜெரூசலத்திலிருந்தது. இந்த அறிக்கை ஜெரூசலத்திலுள்ள ஆங்கிலேயே அதிகாரியின் அலுவலகத்திலிருந்தது. அதனை முஸ்லிம்கள் கைப்பற்றினார்கள். அதில் இப்படி எழுதப்பட்டிருந்தது.

'கிலாபத் ஐ மீண்டும் கொண்டு வருவது பற்றி ஆழமான விவாதம் ஒன்று, இந்தியாவிலிருந்து அடிக்கடி பாலஸ்தீன் வரும் குழுவுக்கும், பாலஸ்தீனியர்களுக்குமிடையே நடந்து கொண்டிருக்கின்றது. இதில் ஹைதராபாத் நிஜாம் அவர்களும், இதர முஸ்லிம் இளவரசர் களும் கலந்து கொள்கின்றார்கள். கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் 'ஹைதராபாத்' நிஜாம் அவர்கள் வழி முன்னாள் கலீபா அப்துல் மஜீத் இன் மகனை கலீபாவாக்கிடும் முயற்சியிலும் ஷவ்கத் அலீ அவர்கள் ஈடுபட் டுள்ளார்கள்.' (ஆதாரம் : Indian Office File London L/P and S/10/1315 Pz 3535)

அடுத்த இதழில் தொடரும்...



# முன் மாதிரி பெண்

**அன்னை** ஸஃபிய்யா (ரலி) அவர்களுக்கு வரலாற்றில் தனித்ததோர் இடமுண்டு. இறைத்தூதர் ஹாரூன் (அலை) அவர்களின் சீர்மிகு பாரம்பரியத்தில் வந்தவர்கள் என்பதால்.

ஆம். அன்னை ஸஃபிய்யா (ரலி)யின் தந்தை ஹுயய் என்பார் இஸ்ரவேலர்களின் புகழ்மிக்க பனூ நளீர் எனும் கிளையைச் சார்ந்தவர். ஒரு இறைத் தூதரின் வழித்தோன்றல் இவர் என்பதால் பெருமையும் கண்ணியமும் இவரைச் சூழ்ந்து நின்றன. பனூ தளீர் கோத்திரத்தினர் அனைவருமே இவரின் பாரம்பரியப் பெருமையை உணர்ந்து தம் தலைவராகவே இவரை ஏற்றுக் கொண்டனர். பனூ நளீர்கள் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்ட ஈடு இணையற்ற தலைவராகத் திகழ்ந்தார் ஹுயய் பின் அஹ்தப்.

இவரின் மனைவி பெயர் பர்ரா (அல்லது எர்ரா) இஸ்ரவேலர்களின் இன்னொரு புகழ், மேவிய குலம் பனூ குரைனா. அதன் மாண்புயர் தலைவராக அக்காலத்தில் ஓங்கி நின்றவர் சாமவேல். இவரின் அருமைப் புதல்விதான் அந்த பர்ரா. பனூதளீர்கிளையின் ஏற்றம் மிகு தலைவர் ஹுயைப் பின் அந்தப் பனுகுரைழாவைச் சார்ந்த பர்ரா பின்த் சாமவேல் ஆகியோரின் அழகுத் திருமகள் தான் அன்னை ஸஃபிய்யா (ரலி) அவர்கள். ஹிஜ்ரத்துக்கு பத்து ஆண்டுகளுக்கு முன்னர் ஹைபர் பகுதியில் பிறந்தார்கள் ஹைபர். இது மதீனாவின் வடக்கே சிரியா நோக்கிச் செல்லும் வழியில் மதீனாவிலிருந்து சுமார் தொன்னூற்றி ஆறு மைல் தொலைவில் அமைந்துள்ள ஒரு பசுமையான நகர். அடர்ந்த பேரீத்தம் தோட்டங்களும் விளைநிலங்களும் கொண்ட அந்நகரில் யூதர்கள் பெரும் கோட்டை கொத்தளங்களைக் கட்டி பெருவாழ்வு வாழ்ந்து வந்தனர்.

அல்லாஹ்வின் அறுதித் தூதர் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் நிகரற்ற தலைமையின் கீழ் ஒளி சிந்தும் மதீனாவில் அழகுற அமைந்திருந்த இஸ்லாமிய அரசுக்கு எதிராக தொல்லை தந்து கொண்டே இருந்தனர், அந்த யூதர்கள். மதீனாவின் நகர்ப் புறத்தில் மற்றும் புற நகரில் வசிக்கின்ற யூதர்களை தங்களின் கீழறுப்பு வேலைகளுக்கு பயன்படுத்திக் கொண்டனர். இஸ்லாமிய அரசு மீது முழுவீச்சில் தாக்குதல் நடத்தவும் முஸ்லிம்கள் மீது அழிவு வேலைகளை அவிழ்த்து விடவும் மக்காவின் இணை வைப்பாளர்களுக்கு எல்லா வகையான ஒத்துழைப்புக்களையும் மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் செய்து வந்தனர் ஹைபர் வாழ் யூதர்கள்.



vaigarai velicham official

ஒரு புறம் அண்ணல் நபியுடன் ஒப்பந்தம், மறுபுறம் எதிரிகளுடன் திரைமறைவுக் குலாவல் என தங்களின் குலப் புத்தியைக் காட்ட ஆரம்பித்த மதீனா வாழ் யூதர்களை அண்ணல் நபி (ஸல்) ஏற்கனவே ஹிஜ்ரி ஐந்தாம் ஆண்டு வாக்கில் நாடு கடத்தியிருந்தார்கள். இப்படி இஸ்லாமிய அரசு கழித்துக் கட்டிய இந்தக் கழிவுகள் தங்களின் இனத்தாரோடு ஹைபரில் தஞ்சம் புகுந்து கொண்டன. அங்கே போய் சும்மா இருந்துவிடவில்லை இந்தப் பதர்கள். தங்களால் இயன்ற மட்டும் குழப்பங்கள் செய்வதை தொய்வின்றித் தொடர்ந்தனர்.

இதற்கு ஒரு இறுதி முடிவு கட்டிட தயாரானார்கள் தாஹா நபி (ஸல்) அவர்கள். ஆயிரத்து ஐநூறுக்கும் அதிகமான நபித் தோழர்களுடன் ஹிஜ்ரி ஏழாம் ஆண்டு முஹர்ரம் மாதம் ஹைபர் நோக்கிப் புறப்பட்டார்கள். ஹைபருக்கு அருகே ஓரிடத்தில் பஜ்ர் தொழுது விட்டு அண்ணல் நபி (ஸல்) "அல்லாஹ் மிகப் பெரியவன் ஹைபர் அழிந்துவிட்டது. நாம் ஒரு சமுதாயத்தை எதிர்த்துப் போரிட களம் இறங்கி விட்டால் எச்சரிக்கப்பட்ட அச்சமுதாயத்துக்கு அது மிகக் கெட்ட காலைப்பொழுதாகவே இருக்க முடியும்" என்று திருவாய் மலர்ந்து அருளினார்கள்.

ஏகத்துவ மாண்பினை தன் நெஞ்சில் நிறைத்த ஒரு சமுதாயம் களத்தில் கால் பதித்துவிட்டால் இணை வைப்பு எனும் இழிவைச் சுமக்கும் கும்பல் ஓடி ஒளிந்திடவே செய்யும் என்பதற்கு எடுத்துக்காட்டாய் விளங்கியது ஹைபர். ஆமாம்; ஹைபர் வாசிகள் முஸ்லிம் படையைக் கண்டதும் வீதிகளில் ஓடுவர் அந்த நகரையே முஸ்லிம்கள் பத்து (அல்லது அதைவிட சற்று அதிகமான) நாட்கள் முற்றுகையிட்டனர். இறுதியில் முஸ்லிம்கள் வென்றனர். அங்கே என்னைப்பார் என் வனப்பைப் பார் என்று நிமிர்ந்து நின்ற கோட்டைகள். வளம் தரும் விளை நிலங்கள், பலன் தரும் பேரீத்தம் தோட்டங்கள். எல்லாம் முஸ்லிம்களின் வசமாயின. இப்போரில் பதினைந்து முஸ்லிம்கள் உயிர்த் தியாகிகளின் வீர வரிசையில் இடம் பெற்றனர், தொன்னூற்று மூன்று யூதர்கள் கொல்லப்பட்டனர். ஏராளமானோர் சிறை பிடிக்கப்பட்டு அடிமைகளாக்கப்பட்டனர்.

அவ்வாறு அடிமைகளாகப் பிடிக்கப்பட்டவர்களில் ஸபிய்யாவும் ஒருவர். அவர்களுக்குத் திருமணம் நடந்து புதுமணப்பெண்ணாக இருந்த நேரம் அது. அவர்களின் கணவர் கினானாபின் அபில் ஹகீக் என்பவர் பனூகுரைழா வம்சத்தின் தலை வர்களில் ஒருவர். இந்தப் போரில் ஸஃபிய்யா அவர்கள் கணவர். தந்தை, சகோதரர்கள் என உற்றார் அனைவரையும் பறிகொடுத்து விட்டு தனிமரமாய் ஆதரவற்று நின்றார்கள். ஒரு சில நாட்களுக்கு முன்பு வரை உயர் குடும்பத்து நங்கையாக ஏற்றமிகு எழிலார்ந்த வாழ்க்கை வாழ்ந்த ஸபிய்யா இன்று அதே ஊரில் கைதியாக அடிமையாக நின்று கொண்டிருந்தார்.

ஹழ்ரத் பிலால் (ரலி) அவர்கள் ஸஃபிய்யாவை கைது செய்து அழைத்து வந்தார்கள். வரும், வழியில் யூதர்களின் பிணங்கள் ஆங்காங்கே கிடந்தன. அவர்களே விரும்பி பிடிவாதமாகத் தேர்த்தெடுத்துக் கொண்ட இழிவான மரணம் அது. தம் உற்றாரின் பிணங்கள். சொல்லவொண்ணாக் கோலத்தில் கிடப்பதைக் கண்ட ஸஃபிய்யா மனம் வருந்தினார்கள். அழுது ஆர்ப்பாட்டம் புரிந்து அல்லோலகல்லோலப்படுத்திடவில்லை. அமைதியாக ஒரு ஓரத்தில் சோகமாக அமர்ந்து விட்டார்கள். இதனை அறிந்த அண்ணல் நபி (ஸல்), ஹழ்ரத் பிலால் (ரலி) அவர்களிடம் "என்ன பிலாலே நீங்கள்?! இவர்களின் தந்தையின் பிணமும் சகோதரர்களின் பிணமும் கிடக்கும் வழியாகவா இவர்களை அழைத்து வந்தீர்கள்? இரக்கத் தன்மையுடன் நடந்து கொண்டிருக்க வேண்டாமா?" என்று கடிந்து கூறினார்கள்.

போர் செல்வங்கள் பங்கு வைக்கப்பட்ட போது ஸஃபிய்யா அவர்கள் திஹ்யா (ரலி) அவர்களின் பங்கில் வந்து சேர்ந்தார்கள். நபித் தோழர்களில் சிலர், ஸபிய்யா அவர்கள் பனு தனீர், பனூ குரைழா ஆகிய இரு பெரும் கோத்திரத்தினரின் மரியாதைக்குரியவர். இவரின் அழகுக்கும் அந்தஸ்துக்கும் இவர் அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு மனைவியாக வாழ்க்கைத் துணையாக வரவேண்டும் என்று விரும்பினார்கள். அந்த விருப்பத்தை நபி (ஸல்) அவர்களிடமும் கூறினார்கள்.

நபித் தோழர்களின் விருப்பத்தை திறந்த மனதுடன் ஏற்றுக்கொண்டர்கள் ஏந்தல் நபியவர்கள்.

திஹ்யா (ரலி) அவர்களுக்கு வேறொரு அடிமையை வழங்கி விட்டு ஸஃபிய்யாவை தனக்கென தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள் நபி (ஸல்) அவர்கள். செல்வமும் செல்வாக்கும் பெற்ற குடும்பத்தில் பிறந்து வாழ்வாங்கு வாழ்ந்த ஸஃபிய்யாவை அடிமையாக வைத்திருக்க அண்ணல் நபி (ஸல்) விரும்ப வில்லை. தன் குடும்பத்தினரை போரில் பறிகொடுத்து பரிதவித்து நிற்கும் ஸஃபிய்யா வுக்கு கண்ணியமும் பெருமையும் மிக்கதோர் வாழ்வினை வழங்கிட வள்ளல் நபி (ஸல்) அவர்கள் முன் வந்தார்கள். ஸஃபிய்யாவை விடுதலை செய்து அந்த விடுதலையை (மஹ்ர்) மணக் கொடையாக வழங்கி அவர்களைத் திருமணம் செய்து கொண்டார்கள் திருமேனி (ஸல்) அவர்கள். வெற்றியின் நெடிதுயர்ந்த படிக்கட்டுகளில் அழுத்தமாகக் கால் பதித்து நின்றபோதும் ஆணவத்தின் நிழலைக்கூட தன்னருகே அண்டிட அனுமதிக்காமல் பகைவர்க்கும் அருளும் பாங்கினை பாரறிய பறை சாற்றினார்கள் படைத்தவனின் தூதரவர்கள். இருளும் இழிவும் சூழ்ந்ததோர் எதிர்காலம் தான் இனி நமக்கு என்றெண்ணி வாடி வதங்கி வழி தெரியாமல் நின்ற ஸஃபிய்யாவை உலக முஸ்லிம்களின் அன்னை என்ற ஒரு புயர்வற்ற உயர் பீடத்துக்கு அழைத்துச் சென்றார்கள் அண்ணலார் (ஸல்) அவர்கள்.

பின்னர் அன்னை ஸஃபிய்யா (ரலி)வை தன்னோடு அழைத்து வந்தார்கள். 'சத்துஸ் ஸஹ்பா' எனும் இடத்தில் வைத்து இல்லற வாழ்க்கையை இனிதே துவக்கினார்கள். பின்னர் பேரீத்தம் பழம், நெய், பாலாடைக்கட்டி ஆகியவற்றைக் கலந்துத் குழைத்துத் தயாரித்த ஹைஸ் எனப்படும் எளிய உணவை வலீமா விருந்தாய் வழங்கினார்கள். பின்னர் தன் ஒட்டகத்தில் அன்னையை அமர வைத்து ஒட்ட கத்தில் மேல் ஒரு போர்வையால் அன்னைக்காக திரை அமைத்தார்கள். அப்போது அன்னை ஸஃபிய்யா (ரலி) அவர்களின் வயது பதினேழு.

அடிமையாக இருந்த அன்னையை விடுதலை செய்த பின்னர் திருமணம் செய்யும் முன்னர் அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள். "ஸுஃபிய்யா... நீ விரும்பினால் எஞ்சியுள்ள உன் குடும்பத் தவருடன் சேர்ந்து வாழ்ந்து கொள். விரும்பி னால் என்னை மணமுடித்துக் கொள்ளலாம்" என்றார்கள்.

அதற்கு ஸஃபிய்யா (ரலி) அவர்கள், ''நான் இணைவைப்பில் இருந்தபோதே இதை விரும்பியதுண்டு. எல்லாம் வல்ல ஏக நாயன் எனக்கு இந்த வாய்ப்பை வழங்கும்போது நான் எப்படி மறுக்க முடியும்? உங்களை என் கணவராக ஏற்க உளப் பூர்வமாகசம் மதிக்கிறேன்" என்றார்கள். அன்னை ஸஃபிய்யா (ரலி) அவர்களின் கண்ணருகே (ரத்தம் உறைந்து போனதால் ஏற்பட்ட) பச்சை நிற வடு ஒன்று இருப்பதைக்கண்ட அண்ணல் நபி (ஸல்) அவர்கள் "இது என்ன?'' என்று கேட்டார்கள்? அதற்கு ஸஃபிய்யா (ரலி) அவர்கள் கூறினார்கள். ''நான் (என் பழைய கணவர்) கினானா பின் அபில் ஹகீக் மடியில் தலைவைத்துப் படுத்துத் தூங்கினேன். தூக்கத்தில் ஒரு கனவு, என் மடியில் முழு நிலவு இருப்பதாகக் கண்டேன், கண் விழித்தவுடன் இதை அவரிடம் கூறினேன். இதைக் கேட்டதும் என் கன்னத்தில் ஓங்கி அறைந்தார். பின்னர், மதீனாவின் (யத்ரிபின்) அரசியாக ஆசைப்படுகிறாயா? என்று கேட்டார். அவர் அடித்த அடியால் ஏற்பட்ட வடு தான் அது. 'என்றார்கள். இப்போது அக்கனவு நனவாகி விட்டது.

இந்தத் திருமணத்துக்குப் பின்னர் யூதர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக போரிட முன் வரவில்லை என்று சில வரலாற்று ஆசிரியர்கள் கருத்துக் கூறியுள்ளனர். எனினும் அது யூதர்களின் பெருந்தன்மையினால் அல்ல. மாறாக அடாத சதி வேலைகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்த யூதர்களை ஹைபரில் ஒரேயடி யாக வீழ்த்தினார்கள் முஸ்லிம்கள். இனி இஸ்லாமிய அரசுக்கு எதிராக செயல்பட மட்டு மல்ல சிந்திக்கவே கூட அஞ்சிடும் அளவுக்கு இழிவான தோல்வியை, மீண்டும் தலையெடுக்க இயலாத இறுதித் தோல்வியை யூதர்களுக்கு அண்ணல் நபி (ஸல்) தந்தார்கள் என்பதே உண்மையான காரணம்.

அண்ணலாருடனான அன்னை ஸஃபிய்யா (ரலி) அவர்களின் வாழ்வு அன்பு மயமானதாய் திகழ்ந்தது. அண்ணல் நபியவர்கள் மரணத்தை நெருங்கிய வேளையில் நோயுற்றிருந்தபோது அன்னை ஆயிஷா(ரலி) அவர்களின் இல்லத்தி லிருந்த அவர்களை எல்லா மனைவி மார்களும் சந்தித்து நலம் விசாரிக்க வந்திருந்தனர். அன்னை


vaigarai velicham official

ஸஃபிய்யா (ரலி) அவர்களும் வந்திருந்தார்கள். நபி (ஸல்) அவர்கள். அவஸ்தைப் படுவதைக் கண்ட அவர்கள் 'அல்லாஹ்வின் திருத்தூதரே உங்களின் வியாதி எனக்கு வந்திருக்கக் கூடாதா?" என்றார் நெஞ்சுருக. இதனைச் செவியுற்ற இதர மனைவி யர்கள் அவர்களைப் பார்த்தார்கள். அப்போது நபி (ஸல்) ஸஃபிய்யா உண்மையைத்தான் கூறுகின்றார் என்றார்கள். (அதாவது வெளிப்பகட்டுக்காக அவர் அப்படிக் கூறவில்லை. அவரின் உள்ளமும் இதைத் தான் விரும்பியது என்று பொருள்)

அன்னை ஆயிஷா (ரலி) கூறுகின்றார்கள் ஸஃபிய்யா (ரலி) அவர்களை விட சுவையாகச் சமைக்கின்ற எந்தப் பெண்ணையும் நான் கண்டதில்லை. அல்லாஹ்வின் திருத்தூதரிட மிருந்து, தான் பெற்ற ஞானத்தை கேட்போருக் கெல்லாம் வாரி வழங்கினார்கள். அன்னை ஸஃபிய்யா (ரலி) அவர்களிடம் சட்டங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்காகவே கூஃபா நகரிலிருந்து பெண்கள் வந்து செல்வார்கள். ஸைனுல் ஆபி தீன் (ரஹ்). இஸ்ஹாக் பின் அப்துல்லாஹ் (ரஹ்), யஸீது பின் முஃதப் (ரஹ்), முஸ்லிம் பின் ஸப்வான் ஆகியோர் அன்னையின் மாணவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

பொறுமை, சகிப்புத்தன்மை ஆகிய நற்பண்பு களின் உறைவிடமாகத் திகழ்ந்தார்கள். யாரி டமும் எதற்காகவும் கடிந்து பேசமாட்டார்கள்.

ஒரு முறை அண்ணல் (ஸல்) அவர்கள் அன்னை ஸஃபிய்யா (ரலி) அவர்களை சந்திக்க வருகை தந்த போது அன்னை அழுது கொண்டி ருந்தார்கள். ''ஏன் அழுகிறாய்?" என்று கனிவாய்க் கேட்டார்கள் காருண்ய நபியவர்கள். அதற்கு (உங்களின் மனைவியும் என் சக தோழியுமான "ஹப்ஸா (ரலி) என்னை ஒரு யூதனின் மகள் என்று கூறியதாக வந்த தகவலைக் கேட்டேன்; அதனால் அழுகிறேன் என்றார்கள்'' உடனே நபி (ஸல்) அவர்கள் நிச்சயமாக (ஹாரூன் அலை என்ற) ஒரு இறைத் தூதரின் வழித் தோன்றலாவாய். (மூஸா அலை என்ற) ஒரு இறைத் தூதர் (ஒருவகையில்) உனக்கு சிறியதந் தையாவார். ஒரு தூதருடைய (என்னுடைய) மனைவியுமாவாய். இப்படி இருக்க உன்னைவிட எந்த வகையில் தன்னை உயர்ந்தவராகக் கருதிக் கொண்டு ஹப்ஸா(ரலி) அப்படிப் போனார்? என்று அன்பு மொழியால் அன்னையை வருடிக்கொடுத்த வாஞ்சை நபி(ஸல்), பின்னர் "ஹப்ஸாவே... நீ அல்லாஹ்வை அஞ்சிக் கொள்" என்று அழுத்தமாகக் கூறினார்கள்.

ஹிஜ்ரி முப்பத்து ஐந்தாம் ஆண்டு மூன்றாம் கலீஃபாஹழ்ரத் உஸ்மான் பின் அஃப்பான்(ரலி) அவர்களின் ஆட்சிக்கு எதிராக கலகக்காரர்கள் கிளர்ச்சி செய்து கொண்டிருந்தனர். இதன் ஒரு பகுதியாக கலீஃபாவையே முற்றுகையிட்டு வீட்டுக் காவலில் வைத்தார்கள். உண்பதற்கு ஒழுங்கான உணவோ, குடிப்பதற்கு சுத்தமான நீரோ தந்திடாமல் அந்த மாமனிதரை வதைத் தார்கள் கிளர்ச்சியாளர்கள். கலீஃபாவுக்கென உள்ள எந்த மரியாதையும் தரவில்லை. அவர்களின் முதுமைக்குரிய கண்ணியத்தையும் பேணிடவில்லை அத்தப் பாவிகள்.

அண்ணல் நபியின் மருமகளாம் ஹழ்ரத் உஸ்மான்(ரலி) அவர்களுக்கு நேர்ந்த நிலையை அறிந்து ஸஃபிய்யா(ரலி) அவர்கள் கண்கலங் கினார்கள். உடன் தன் அடிமை ஒருவரை துணைக்கு அழைத்துக் கொண்டு அவர்களை சந்திக்கக் கிளம்பினார்கள். இவர்கள் பர்தா அணித்திருந்ததால் யாரும் இவர்களை அடை யாளம் காணவில்லை. அன்னையவர்கள் ஏறி அமர்ந்து சென்ற கோவேறு கழுதையையும் உடன் சென்ற அடிமையையும் பார்த்த அஷ்தர் நஹ்ஈ என்பவன் சென்று கொண்டிருப்பது அன்னை ஸஃபிய்யா (ரலி) அவர்கள் தான் என்றும் கலீஃபா உஸ் மான்(ரலி) அவர்களுக்கு உதவிடத்தான் சென்று கொண்டிருக்கிறார்கள் என்றும் அறிந்து கொண்டான். வேகமாக முன்னால் வந்து நின்று அவர்களின் கோவேறு கழுதையை அடிக்க ஆரம்பித்தான். கடுமை யாகத் தாக்கினான். அஷ்தர் நஹ்ஈயை மீறி முன்னேறிச் செல்ல முடியாது என உணர்ந்த அன்னைதம் இல்லம் திரும்பினார்கள். தம் திருக்கரத்தால் கவையான உணவைத் தயாரித்து ஹழ்ரத் ஹுசைன் பின் அலீ (ரலி) மூலமாக கலீஃபா உஸ்மான் (ரலி) அவர்களுக்கு கொடுத்தனுப்பினார்கள்.

அலட்டிக் கொள்ளாமல் அமைதியாக அடக்கமாக இருந்து காரியம் ஆற்றுவதில் அன்னையவர்கள் சிறந்து விளங்கினார்கள் என்பதற்கு அஃதோர்சான்று,

பொறுமை, ஈகை, இரக்கம். அமைதி ஆகிய

குணங்களின் குவியலாய்த் திகழ்ந்த இந்தப் பெருமாட்டி தனது அறுபதாவது வயதில் ஹிஜ்ரி ஐம்பதாம் ஆண்டில் ரமலான் மாதத்தில் ஏக இறைவனாம் அல்லாஹ்வின் அழைப்பை ஏற்று இறுதிப் பயணம் மேற்கொண்டார். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். அவர்கள் இறந்த செய்தி அறிவிக்கப்பட்ட உடன் நபித் தோழர் ஹழ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) ஸஜ்தாவில்' விழுந்தார்கள். இந்த சமயத்தில் ஸஜ்தா செய்கிறீர்கள் என ஒருவர் கேட்டபோது ஒரு துன்பம் நேர்ந்தால் நீங்கள் ஸஜ்தா செய்யுங்கள் என்று நபி(ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். அண்ணலாரின் துணைவி யரில் ஒருவர் இறப்பதைவிட மிகப்பெரிய துயரம் வேறென்ன இருக்க முடியும்" என்று ஹழ்ரத் இப்னு அப்பாஸ் பதில் கூறினார்கள்.

தான் வாழ்ந்து வந்த சொந்த வீட்டை தன் வாழ்நாளிலேயே அல்லாஹ்வின் பாதையில் வழங்கி விட்டார்கள் நம் அன்னை ஸஃபிய்யா (ரலி). ஒரு லட்சம் வெள்ளிக்காசுகளை வாரிசு தாரர்களுக்கு விட்டு சென்றார்கள். அதில் மூன்றில் ஒரு பங்கை தன் சகோதரியின் மகனுக்கு (அவர் ஒரு யூதர்) தந்து விடும்படி வஸிய்யத் செய்திருந்தார்கள்.


இதை நிறைவேற்ற சிலர் காலதாமதம் செய்தனர். இதனை அறிந்து ஆயிஷா (ரலி). மக்களே அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் ஸஃபிய்யா (ரலி) அவர்களின் வஸிய்யத்தை நிறைவேற் றுங்கள்" என்ற வலியுறுத்தியதைத் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டது. இஸ்லாமிய அரசில் அந்த யூதருக்கு நீதி கிடைத்தது.

அன்னையின் உடல் 'ஜன்னத்து பகீ'யில் நல்லடக்கம் செய்யப்பட்டது. வரலாற்றின் வரிகளில் வாழும் இந்த உத்தமிகளின் வழி நின்று வாழ்ந்திட பெண்குலம் முன்னேற வேண்டும். வரலாறு படைத்திட வேண்டும்.

இப்போது பரபரப்பான விற்பனை





- அல்லாமா அபுல் ஹஸன் அலி நத்வி (ரஹ்)

- தமிழில் மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி

# சுதந்திரத்தின் நோக்கம் நிறைவேறியதா? ஏமாற்றத்தில் முஸ்லிம்கள்...

**உருது** மொழியை கற்பிக்க பேராசிரியரை நியமிக்குமாறும், அதற்கு ஒப்புதல் வழங்கு மாறும் ஒரு மாணவர் பள்ளி முதல்வரை அணுகும் போதெல்லாம்,-இதனை கோரிய மாணவர்களின் எண்ணிக்கை அரசு குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு அதிகமாக இருந்தாலும் - இதற்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை அரசு கூறிய குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையை எட்டவில்லை என்று முதல்வர் கூறி மறுத்து விடுவார்.

இத்துனை எதிர்ப்புகள் மற்றும் முயற்சி களுக்குப் பிறகு, உருது மொழி பேசுபவர்கள் மற்றும் அதன் வல்லுநர்கள் அரசியலமைப்பின் 347 சட்டப் பிரிவை-(இந்த பிரிவு கணிசமான எண்ணிக்கையிலான மக்கள் பேசும் மொழியை அங்கீகரிப்பதற்கான உத்தரவைப் பிறப்பிக்க குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கிறது, மேலும் ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்ட நோக்கங்களுக்காக அந்த மொழியை பயன் படுத்தவும் அனுமதி அளிக்கிறது.)- நாடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை உருவானது.

இதனால் உருது மொழி பேசும் தங்கள் குழந்தைகள் அதை கற்க வேண்டும் என்று விரும்பிய நபர்களின் கையொப்பங்களை சேகரிக்கத் துவங்கினர். வட மாநிலங்களின் அனைத்து பகுதிகளை உள்ளடக்கி, அஞ்சுமன் தர்க்கி உருது என்ற அமைப்பின் மேற்பார்வையின் கீழ் திட்டமிடப்பட்ட கலாச்சார பரப்புரை ஏற்பாடு செய்யப்பட்டது.

மாநிலங்களின் அனைத்து பகுதிகளிலும் இதன் கிளைகள், மையங்கள் அமைக்கப்பட்டன. இது ஒரு அமைதியான பரப்புரையாக தொடர்ந்தது, நாகரீகமான வழிமுறைகளை மட்டுமே பின்பற்றியது மாறாக வன்முறை, கிளர்ச்சி அல்லது பயங்கரவாத வழிமுறைகளை நாடவில்லை. அதேபோல அரசியல் தந்திரங் களையும் பயன் படுத்தவில்லை.

இந்த பிரச்சாரம் வெற்றியடைந்தது. மேலும் இரண்டு இலட்சத்தி ஐம்பதாயிரம் ஆண்களும், இருபது லட்சத்துக்கும் அதிகமான மாணவர்களும் உருது மொழியை வட மாநிலங்களில் உள்ள பிராந்தியங்களின் மொழியாகவும், மாணவர்கள் கல்வி பயிலும் மொழியாகவும், அரசு அறிக்கையில் கூறியது போல,குறிப்பிட்ட எண்ணிக்கை யிலான மாணவர்கள் பாடங்கள் கற்பிக்கப்படும் மொழியாக உருது மொழியை வேண்டினால் அதற்காக ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்ற சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளில் கையெழுத்திட்டனர்.

இந்த நோக்கத்திற்காக, இந்திய குடியரசுத் தலைவரைச் சந்தித்து, இருபது லட்சத்திற்கும் அதிகமான கையெழுத்துகளைக் பெற்ற இந்தக் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க, இஸ்லாமியர்கள் மற்றும் இந்துக்கள் ஆகிய இரு தரப்பிலிருந்தும் மூத்த பிரமுகர்கள் உள்ளடக்கிய பிரதிநிதிகள் குழு அமைக்கப்பட்டது. பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்ட அதிக எண்ணிக்கையிலான மக்களின் கையெழுத்துடன் கூடிய மிகப்பெரிய

கோரிக்கை இதுவாக இருக்கலாம்.

சர்வதேச இலக்கியவாதிகளில் ஒருவர், அலிகார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் இயக்குனர் மற்றும் இந்திய குடியரசின் முன்னாள் தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன் இந்த குழுவின் தலைவராக இருந்தார்.குடியரசு தலைவரை புது தில்லியில் இந்த குழு சந்தித்தது.

உருது மொழியை அங்கீகரிப்பது மற்றும் பள்ளிகளில் அதன் பயன்பாட்டை அங்கீகரிப் பதுடன், வட மாநில நீதிமன்றங்கள் மற்றும் அரசு நிர்வாகங்களில் உருது மொழியில் எழுதப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்கப்பட வேண்டும், அரசின் அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் மற்றும் வெளியீடு களை உருது மொழியில் வெளியிட வேண்டும், உருது மொழியில் எழுதும் எழுத்தாளர்களை விருதுகளை வழங்கி ஊக்குவிக்க வேண்டும் இதற்கு முன்னர் இருந்ததுபோல அரசு கல்வி நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட மொழியாக்க வேண்டும்.

மேலும் உருது மொழி இதற்கு முன்னால் பெற்றிருந்த மேன்மையையும் அந்தஸ்தையும் அரசு வட்டாரங்களில் மீண்டும் நிலைநிறுத்த வேண்டும் என்று அந்த குழு கோரிக்கை விடுத்தது. இந்த குழு 12 நபர்களை உள்ளடக்கியிருந்தது. இதில் பாதி நபர்கள் இந்து தலைவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

குடியரசுத் தலைவரும் தூதுக்குழுவைச் சந்தித்து, அதன் கோரிக்கைகளைக் கேட்டு,தனது அக்கறையையும் அனுதாபத்தையும் வெளிப் படுத்தினார். ஆனால் நிலைமை மாறவில்லை, தங்களது மொழியின் எதிர்காலத்தை குறித்து கவலைப்படும் மக்களுக்கு ஆதரவாக எதுவும் புதிதாக நிகழவில்லை.

கல்வி அமைச்சகத்தில் மற்றும் அரசு பள்ளிக் கூடங்களில் வெறுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மொழியாகவே இன்றும் உருது மொழி இருந்து வருகிறது. மேலும் இந்த மொழி பேசும் மக்கள் ஆரம்ப கல்வியில் இந்த மொழியை கற்பதி லிருந்து தடுக்கப்பட்டே வருகிறார்கள்.

எனவே, இந்த மக்கள் தங்களது மொழி மற்றும் அதன் கலாச்சாரத்திலிருந்து வெகு தொலைவிற்கு செல்வது அதிகரித்து கொண்டே சென்றது.அதை அறியாமலேயே வளர்ந்தார்கள்.

அவர்களின் பண்டைய கலாச்சாரம், அவர்களின் கடந்த காலம் மற்றும் அவர்களின் இஸ்லாமிய கொள்கைகள் தாங்கள் பின்பற்றும் ஷரீஅத் என அனைத்திலிருந்தும் அவர்களின் தொடர்பு துண்டிக்கப்பட்டு, பழைய தலை முறைக்கு கொஞ்சம் கூட தொடர்பு இல்லாமல் ஒரு புதிய தலைமுறை உருவானது.

அந்த தலைமுறையானது மத மற்றும் கலாச்சார சூழலில் இருந்து வெகு தொலைவில் வளர்ந்தது, இவற்றை அறிந்து கொள்வதற்கு இவர்கள் முயற்சித்தாலும் அது மிகவும் கடினமாக இருந்தது.

இந்த புதிய தலைமுறை அதன் கலாச்சாரத் திற்கு செல்லும் பாலம் இடிந்து விழுந்தது, மேலும் அதனது கடந்த காலத்தையும், அதன் முன்னோர்களையும் இணைக்கும் நூல் வெட்டப்பட்டது.

தாங்கள் பிறந்த சொந்த நாட்டில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் இது ஒரு சிக்கலான மற்றும் விநோதமான பிரச்சனையாகும். இக்கட்டான சூழ்நிலை மற்றும் மிகவும் சிக்கலான எதிர்காலம் வருவதற்குமான எச்சரிக்கையே இது.

அரசியல் மற்றும் தேசிய விழிப்புணர்வு இந்தப் பிரச்சனையைத் தீர்க்கும். அரசியல் சட்டம் நேர்மையோடு நடைமுறை படுத்தப் படும். அப்போது முஸ்லிம்களும் பிற பிரிவினரும் தங்களுக்கு தேவையில்லாத இந்த நெருக்கடியி லிருந்து விடுபடுவார்கள் என்பதில் சந்தேக மில்லை.

இந்திய நாட்டிற்கு தனது மக்களின் நம்பிக்கை, பரவலான செயல்பாடுகள் மற்றும் விரிவான ஒத்துழைப்புகள் என்பது மிகவும் தேவை, ஆனால் இந்திய குடியரசின் ஒவ்வொரு பிரிவினரும் தங்களது கலாச்சாரம் மற்றும் மதத்தின் எதிர்காலம் குறித்து நிம்மதி அடைந் தால் மட்டுமே, சுதந்திரமான, ஜனநாயக இந்தியாவில் கலாச்சார காலனித்துவம் இல்லை என்பதையும், ஒரு மொழி பெரும்பான்மையி னரின் மொழியாக இருந்தாலும் அல்லது இந்தியாவின் அலுவல் மொழியாக இருந்தாலும் மற்ற இந்திய மொழிகளை பின்னுக்கு தள்ளி

மேலோங்க முடியாது அவற்றை விழுங்கி அவற்றின் இடிபாடுகளில் மீது எழுந்து நிற்க இயலாது என்பதையும் உறுதி செய்தால் மட்டுமே இது நடக்கும்.

இந்திய சுதந்திர போர் என்னும் ஒருங்கிணைக் கப்பட்ட தேசிய போராட்டம் என்பது அவரவர் மதம் மற்றும் கலாச்சாரத்தின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுக்கு உத்தரவாதம் அளிப்பதை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்ளப்பட்டது. சுதந்திரம் அடைந்து சுய ஆட்சியின் போது தங்களது மத நம்பிக்கைகள் மற்றும் கலாச்சார சுதந்திரத்தை அடைவோம்

என்று நம்பியே இந்த போரில் ஒவ்வொரு பிரிவினரும் பங்கேற்றார்கள்.

காலனித்துவம் மற்றும் ஆங்கிலேய அடிமைத் தனத்தின் ஆட்சியில் சுதந்திரமாக செய்வதற்கு சாத்தியமில்லாத விருப்பங்களும், ஆசைகளும் நிறைவேற்றப்படக்கூடிய சூழல் சுதந்திர இந்தியாவில் உருவாகும். அனைத்து மக்களும் தங்களது மதநம்பிக்கைகள், கலாச்சாரம், பாரம் பரியம், பண்பாடு ஆகிய அனைத்துடனும் வாழ இயலும் என்று நம்பியே சுதந்திரப் போரில் ஒவ்வொரு பிரிவைச் சார்ந்த மக்களும் பங்கேற்றார்கள்.

**சமூக அமைதி :** ஐந்தாவது பிரச்சனை,முக்கிய நிகழ்வுகள், பண்டிகைகள் மற்றும் பொதுக் கூட்டங்களில் கலவரங்கள் ஏற்படும் நேரங்களில் அல்லது இரு குழுக்களிடையே ஏதேனும் தகராறு அல்லது கருத்து வேறுபாடுகள் ஏற்படும் போது இருக் குழுவில் ஒரு குழு முஸ்லிம்களாகவும், மற்றொன்று முஸ்லிம் அல்லாதவர்களாகவும் இருக்கும்போது, இந்த மோதல் ஒரு மதவாத மோதலாக வளரும் போது அனைத்து சமுதாய மக்களின் அமைதி மற்றும் பாதுகாப்பு குறித்த பிரச்சினை.

இது பெரும்பாலும் எந்தவொரு சமூகத்திலும் சாதாரண மோதல் அல்லது கருத்து வேறு பாடுகள் அல்லது தவறான புரிந்துணர்வு அல்லது ஒரு பிரிவைச் சேர்ந்த ஒரு நபர் மற்றொரு பிரிவைச் சேர்ந்த மற்றொரு நபருக்கு எதிராக எதிர்வினையாற்றுவது ஆகியவை ஆயுதங்கள், அழிவு இயந்திரங்கள் ஆகியவையை பயன் படுத்தும், தீ வைப்பு,கொலைகள் மேற்கொள் ளப்படும் மோசமான மத மோதல்களாக உறுமாகிறது. இதனால் இந்த கொலைகள், தீவைத்தல், சூறையாடுவது , கொள்ளையடித்தல் போன்ற சம்பவங்கள் பக்கத்து பகுதிகளுக்கும் பரவும்.

மக்களது உள்ளங்கள் அமைதி பெற்று இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கே நீண்ட நாட்கள் எடுக்கும்.ஏனென்றால் வதந்திகளும் சந்தேகங்களும் பரவி அமைதியை சீர்குலைத்து விடும்.

ஆனால் இந்த மதக்கலவரங்களின் போது முஸ்லிம்கள் மட்டும் காவல் துறையின் பாரபட்சமற்ற, நடுநிலையற்ற நிலைப்பாட்டிற்கு ஆளாகிறார்கள், பாதுகாப்பு துறையில் பெரும் பான்மையினர் அதிகமாக இருப்பதால் பெரும் பான்மையினருக்கு ஆதரவாகவே இதுவும் இயங்குகிறது.

கலவரத்தை ஏற்படுத்தியவர்கள் மீது எந்தவொரு கடுமையான நடவடிக்கைகளும் எடுக்காது.அதே நேரத்தில் நிகழ்ந்த சம்பவங் களை மூடி மறைப்பதில் தேசிய செய்தி ஊடகங் களுக்கு மிகப் பெரிய பங்களிப்பு உள்ளது.

அதேபோல முஸ்லிம்களின் நிலைப்பாடு மேலும் அவர்களது ஆக்கபூர்வமான செயற்பாடு களை புறக்கணித்து நாட்டு நலன் சார்ந்து அவர்கள் செய்யும் முயற்சிகள் முன்னெடுப்புகள் ஆகிய அனைத்தும் இருட்டடிப்புச் செய்யப்படுகிறது.

அவர்களது பிரச்சனைகளை பத்திரிகைகள் நேர்மையுடன் பாரபட்சமின்றி நடுநிலையாக பரப்புவதில்லை. மாறாக தாக்குதலை கலவரத் தைத் தூண்டியது முஸ்லிம்களே என்று முஸ்லிம்களை பழிசுமத்தும் வண்ணமே இவர்கள் வெளியிடும் தவறான ஆய்வுகள் மற்றும் அறிக்கைகள் கூறுகின்றன.

அடிக்கடி இஸ்லாமியர்களுக்காக நடத்தப் படும் மாநாடுகள் மாபெரும் கூட்டங்களில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொள்கின்றனர். மேலும் இந்த கூட்டங்கள் அவர்களிடையே ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஆனால் தேசிய பத்திரிகைகள் இவைகளை செய்தி தாள்களில் பரப்பாமல் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களுக்கு விரோதமான செய்திகளை மட்டும் பரப்புவார்கள்.

பத்திரிகை துறையின் தர்மம் என்பது நாட்டில் நடக்கும் அனைத்தையும் வாசகர் களுக்கு தெரிவிக்க வேண்டும்.

வண்டுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து கூட்டம் நடத்தினாலும்,


அல்லது ஒரு கிரிமினல் கும்பல் திட்டம் தீட்டுவதற்காக ஒரு கூட்டத்தை நடத்தினாலும், பத்திரிகைகள் அதை பதிவு செய்ய வேண்டும்.

ஆனால் முஸ்லீம்கள் மீதான பத்திரிகை துறையின் நிலைப்பாடு சற்று மாற்றமானது, முஸ்லிம்களை குறித்த செய்திகளை மட்டும் நேரெதிரான கோணத்தில் வெளியிடுவார்கள்.

முஸ்லிம்களும் தங்களது நிலைப்பாட்டை முன்வைக்காததற்கு பெரும் பொறுப்பைச் சுமக்கிறார்கள், ஏனெனில் அவர்கள் தங்களின் கண்ணோட்டத்தை,செயல்பாடுகளை உள்ளடக்கிய பரவலாக விநியோகிக்கப்படும் ஆங்கிலம் அல்லது ஹிந்தி மொழிகளில் எந்த வொரு செய்தித்தாளை இதுவரை வெளியிடு வதை சிந்திக்கவில்லை. **தொடரும்......**

ஆங்கிலம் : JOHN FEFFER

தமிழ் வடிவம் : மு. குலாம் முஹம்மத்




ஜான் பெஃபர் கூறுகின்றார்...

**மீண்டும் இஸ்லாம்**

1989இல் புரட்சிகள் பலப் பிரவாக மெடுத்தன ஈரானில் மன்னராட்சி இமாம் கொமைய்னி அவர்களின் தலைமையில் எழுந்தது. எழுச்சியில் வீழ்ந்தது. பார்க்க அடிக்குறிப்பு-1 பல கம்யூனிஸ்ட் ஆட்சிகள் வீழ்ந்தன.

அதே வேகத்தில் தென்னாப்பிரிக்காவில் நிறவெறி ஆட்சியைத் தூக்கி வீசிட எழுந்தார் வீரமகன் நெல்சன் மண்டேலா. வென்றார். ஒரு பெரும் கூட்டம் கறுப்பின மக்கள் மீது ஒரு சிறு கூட்டம் வெள்ளையர்களின் வெறுப்பு ஆட்சி வெளியேறியது.

சீனாவில் ஓர் எழுச்சி டியன்னாமன் சதுக்கம், என்ற பெரும் சதுக்கத்தில் 20 லட்சம் மக்கள் ஒன்றிணைந்து நின்றார்கள். அரசியல் மாற்றங் களுக்காக. ஆனால் (அதனை சீனா முற்றாக அமுக்கியது. இரத்த ஆற்றை ஓட்டி கம்யூனிச தத்துவங்களைக் காப்பாற்றிக் கொண்டது) ஆனால், அதனுடைய அடுத்தடுத்த நிருவாகத்தில் பல மாற்றங்கள். அத்தனையும், கம்யூனிச தத்துவங்களிலிருந்து வெளியேறிய வண்ண மிருந்தன. இப்போது முதலீட்டில் முன்னிணியில் நிற்கும் நாடு. அமெரிக்காவையே அலறவிட்ட நாடு.

இந்த ஆட்சிகள் மாற்றம் என்ற புரட்சி அலைகளில் இஸ்லாமிய உலகமும் சிக்கிக் கொண்டது. இந்த ஆட்சி மாற்ற அலையிலிருந்து இஸ்லாமிய நாடுகள் - தப்பித்துக்கொள்ள இயலவில்லை.

ஜோர்டான் மன்னர் ஹூஸைன், முதன் முதுலில் ஜோர்டானில் அரை வேற்காட்டு தேர்தலை நடத்தினார். 1989இல். அப்போது தான் பெர்லின் சுவர் வீழ்ந்திருந்தது. ஜோர் டானின் இந்தத் தேர்தலில் இஸ்லாத்தைக் கொள்கையாகக் கொண்ட இஸ்லாமிய வாதிகள் பெரிதாக வெற்றிப் பெற்றார்கள். அவர்கள் அமைச்சர் அவைகளிலிலும் பங்கு பெற்றார்கள். அரசியல் கட்சிகளை அமைத்துக்கொள்ள. ஆனால், விரைவிலேயே தேர்தல் முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. மொத்தத்தில் மூன்றாண்டுகள்கூட அது நிலைக்கவில்லை.

ஏனெனில் அங்கே இஸ்லாமியக் கொள்கை களை அடிப்படையாகக் கொண்டவர்கள் வெற்றிப் பெறுவார்கள் என்ற நிலை. ஆகவே அடுத்து நடந்த 2007 தேர்தலில் தில்லு முல்லுகளை மேற்கொண்டார் மன்னர்



vaigarai velicham official





ஹூஸைன். அதனால் 2010ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் இஸ்லாமியக் கட்சி கலந்துகொள்ள வில்லை. அங்கே அமையப் பெற்ற இஸ்லாமியக் கட்சி பெயர் "Islamic Action Front" இஸ்லாமிய செயல்பாட்டு முன்னணி

இந்தக் கட்சி தடை செய்யப்பட்டது. ஒரு லட்சம் ஊழியர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

ஜோர்டானிலிருந்து மன்னர் பரம்பரை 1989இல் அல்ஜீரியா நாட்டில் ஏற்பட்ட இஸ்லாமிய அலையைக்கண்டு அதிர்ந்து போனார்கள். 1990இல் அல்ஜீரியாவில் நடந்த வட்டாரத் தேர்தல்களில், அங்கிருந்து இஸ்லாமியக் கட்சி 62 சதவீதம் வாக்குகளைப் பெற்றது. அடுத்து நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அது அந்தக் கட்சி இஸ்லாமிய தீர்வு கட்சி, எல்லாக் கட்சிகளையும் விட அதிகமான வாக்குகளைப் பெற்றார்கள். இடங்களையும் பிடித்தார்கள். (The Islamic Solvation Front) அதன் அல்ஜீரியா பெயர் (Islamique Salut) இஸ்லாமியக் கியூ சாலுத் கட்சி. அல்ஜீரியா இஸ்லாமிய வாதிகள் வெல்வதைப் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. அல்ஜீரியாவில் அன்று ஆட்சியிலிருந்த அரசு இஸ்லாமிய வாதிகளை அடக்கியே ஆக வேண்டும் என முடிவெடுத் தது. பிரான்ஸ் நாட்டின் உதவியை நாடியது. (இஸ்லாமோபோஃபியா மிகைத்து நின்ற) பிரான்ஸ் நாடு உடனடியாக உதவி செய்தது. இந்த இஸ்லாமியக் கட்சி தடை செய்யப்பட்டது. தலைவர்கள் சிறையிலடைக்கப்பட்டார்கள். அதன் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் தடுப்புக் காவல் மையங்களுக்கு அனுப்பப் பட்டார்கள். (Detentsin Centres) இவர்களை "சாப்தா" என்ற பாலைவன தடுப்புக்காவல் மையங் களில் வைத்தார்கள். இந்தக் கெடுபிடிகளைத் தொடர்ந்து மக்கள் எழுச்சி ஒன்று நடைபெற்றது. அதில் ஒரு லட்சம் பேர் உயிரிழந்தார்கள். புன்மைதோரைகள் என மக்களை பிரஞ்சு இராணுவம் சுட்டு வீழ்த்தியது. அல்ஜீரியா அரசு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது.

ஜனநாயக வழிமுறைகளை வழிமறித்ததும் தொடர்ந்த மனித உரிமைகளைப் புறக்கணித் ததும், கொலைகளைச் செய்ததும், வாஷிங்டனி டமிருந்து கண்டனங்களைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால், மனித உரிமைகள், ஜனநாயகம் இவையெல்லாம் இஸ்லாமிய வாதிகளுக்கு இல்லை என்பதைப்போல், நடந்துகொண்டது.

அமெரிக்கா ஓர் அச்சத்தைப் பிரச்சாரம் செய்துகொண்டே இருந்தது. அது இஸ்லாத்தை இலட்சியமாகக் கொண்டவர்கள், ஜனநாயகத்தைப் பயன்படுத்தி ஆட்சிக்கு வந்தாலும் ஆபத்தே, என்பதுதான் அது. அவர்கள் அதாவது இஸ்லாமியவாதிகள் ஆட்சியில் அமர்ந்தாலும் அவர்கள் ஜனநாயகத்தைப் பின்னுக்குத்தள்ளிவிட்டு, அனைத்தையும் இஸ்லாமிய மயமாக்கி விடுவதில்லை.

இப்படியொரு போலிப் பீதியை பயன் படுத்தித்தான் துருக்கியில் 1997இல் ஏற்பட்ட இஸ்லாமிய ஆட்சியைக் கவிழ்த்தார்கள். ஜனநாயக ரீதியாக ஆட்சியில் அமர்ந்த ஆட்சியை இராணுவத்தைக்கொண்டு ஆட்சியிலிருந்து அகற்றினார்கள். இதனை மிருதுவான Soft Millitary Coup என்றார்கள். அது பின்னர் Turkish Military Soft Coup எனப் பதியப்பட்டது. அதாவது துருக்கியின் மிருதுவான இராணுவ ஆட்சி கவிழ்ப்பு என்றார்கள். இந்த நிலைப்பாட்டை அமெரிக்கா வெட்கமின்றி காலமெல்லாம் பின்பற்றி வருகின்றது.

*அமெரிக்காவின் இந்த நிலைப்பாட்டை "Islamic Exception" என்றழைக்கின்றார்கள். அதாவது "இஸ்லாத்திற்கில்லை" என்றழைக் கின்றார்கள்.* - இன்ஷாஅல்லாஹ் தொடரும்.

**அடிக்குறிப்பு - 1**

1979இல் ஈரானில் ஏற்பட்ட ஆட்சி மாற்றந்தான் உலகை பெரிய அளவில் உலுக்கிற்று. உண்மையைச் சொன்னால், ஈரானில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் உலகின் இதரப் பகுதிகளிலிருந்த, மன்னராட்சிகளை மிகவும் ஆட்டிப் படைத்திருந்தன. ஏனெனில் ஈரானில் ஏற்பட்ட எழுச்சி மன்னர் ஷா பஃஹ்லவியின் ஆட்சியைத் தூக்கி வீசிவிட்டு அந்த இடத்தில், இஸ்லாமியக் குடியாட்சி யைக் கொண்டு வந்தது. இது ஏப்.1,1979இல் நடந்தது.

உடனேயே அமெரிக்கா, அரபு நாடுகள் இவை ஈராக் அதிபர் சதாம் ஹுஸைனை ஏவிவிட்டு ஈரானை தாக்கின. இந்த ஈராக்-ஈரான் போர் 1980இல் செப்டம்பரில் தொடங்கி 1988 ஆகஸ்ட்டு வரை தொடர்ந்து 1988இல் போர் நிறுத்தம் வந்தது. ஈரானை ஓர் இஸ்லாமியக் குடியரசு என்ற நிலையிலிருந்து மாற்றி மீண்டும் மன்னராட்சியைக் கொண்டு வந்திடவே மேலை நாட்டவர்களால் உருவாக்கப்பட்டது இந்தப் போர். ஆனால் அது நடக்கவில்லை.

ஈரான் இஸ்லாமியக் குடியரசு என்ற அளவிலேயே மீண்டும் நிலைபெற்றது. இன்றளவும் அப்படியே நிலைபெற்று வருகின்றது.

அமெரிக்காவின் இந்தப் பொல்லாத சதி ஈரானிலும், ஆப்கானிஸ்தானிலும்தான் எடுபடவில்லை. நிகழ்கால வரலாற்றில். அதாவது இஸ்லாமிய வாதிகள் - இஸ்லாத்தை இலட்சியமாகக் கொண்ட வர்கள், ஜனநாயக வழிமூலமாகக் கூட ஆட்சியில் அமர்த்தக்கூடாது என்ற சதியைத்தான் குறிப்பிடுகின்றோம்.

ஆனாலும், இன்றளவும் ஈரானின் ஆட்சியை கவிழ்க்கவும், ஆப்கானிஸ்தானில் தாலிபான்களின் ஆட்சியைக் கவிழ்க்கவும் தன்னால் இயன்றதையெல்லாம் செய்து வருகின்றது அமெரிக்கா.



கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் வைகறை வெளிச்சம் ஆசிரியர் சந்தித்து உடல்நலம் விசாரித்தபோது


vaigarai velicham official



# கோவைக்காயின் மருத்துவப் பயன்கள்

**Dr. S. அருள் சொரூபி,** M.D.(S),M.A., (Yoga), *சித்த மருத்துவர்*

முதியோர்களுக்கும் வரும் சர்க்கரை நோயை நீக்கப் பயன்படும் கோவைக்காயின் பயன்களைப் பார்ப்போம்.

**கோவைக்காய்** இந்தியாவில் எங்கும் கிடைக்கும். இதில் இனிப்பு, கசப்பு என இரண்டு வகை இருக்கிறது. இதில் கருங் கோவை, விரல் கோவை, நாமக்கோவை என மூன்று இனங்கள் இருக்கின்றன.

சர்க்கரை வியாதி வந்துவிட்டால் நாமே ஏதாவது செய்து சரிசெய்து கொள்ளலாமா என நினைப்பவர்களுக்கு இது சரியான தீர்வு. இந்த உணவைத்தான் நாம் மருந்தாகச் சொல்கிறோம். முதியோர்கள் பயமில்லாமல் இந்தக் கோவைக்காயைப் பயன்படுத்தலாம்.

கோவைக்காய் கிடைக்காத காலத்தில் அதன் இலையைக் கீரை மாதிரித் தேங்காய்ப்பூ போட்டுப் பொரியலாகச் சாப்பிட்டால் சர்க்கரை வியாதிக்கு அவ்வளவு நல்லது. உடல் உஷ்ணத்தை நன்றாகத் தணிக்கும். கோவை இலையைச் சமைத்துச் சாப்பிட்டால் கண் குளிர்ச்சி உண்டாகும், கண் எரிச்சல் போகும். சர்க்கரை வியாதியால் வரக்கூடிய பெரிய புண், சிறு சிரங்குகள் ஆறும். சர்க்கரை வியாதியால் உடல் உஷ்ணமாக இருக்கிறது. சர்க்கரை வியாதியில் கை, கால் எரிச்சல், (டயபடிக் நியூரோபதி) கை, கால் மதமதப்பு அதெல்லாம் போகும். நீர் அடைப்பு நீங்கும்.

கோவையிலையை நல்ல தேங்காய் எண்ணெயில் கொதிக்கவைத்துக் கொதி வந்த பிறகு வடிகட்டி எடுத்து வைத்துவிட்டுச் சொறி, சிரங்கு, புண் போன்ற சர்க்கரை வியாதியால் ஏற்படும் தோல் நோய்களுக்கு மேலே பூசினால் தோல் நோயை எளிதில் போக்கும். வாயில்புண்இருந்தால்இளம்கோவைக்காயை மென்று சாப்பிட்டால் வாயில் இருக்கும் புண், நாக்கில் இருக்கும் புண் எல்லாம் நீங்கும். வாய்ப்புண்ணை ஆற்றக்கூடியது கோவைப் பிஞ்சு.

பொதுவாகச் சர்க்கரை வியாதி வந்தவர்கள் பாகற்காய், கோவைக்காய், சுண்டக்காய், வேப்பிலை, துளசி இதெல்லாம் அடிக்கடி உணவோடு சேர்த்து வந்தால் சர்க்கரை அளவு உடனே குறையும்.

ரத்தச் சர்க்கரை கட்டுக்குள் வராதவர்கள், பாகற்காய் ஒத்துக்கொள்ளாதவர்கள், அதன் சுவை பிடிக்காதவர்கள், கோவைக்காயைத் தினமும் ஒரு 100 கிராம் பொரியலோ அல்லது அவியலோ செய்து காலை, மாலை என்று இரண்டு வேளையும் 100 கிராம் கோவைக்காய் சாப்பிட்டு வந்தால் ரத்தச் சர்க்கரை அளவு மிக எளிதில் குறையும்.

எந்த மருத்துவம் மேற்கொண்டாலும் இந்தக் கோவைக்காயை உணவில் எடுத்து வந்தால் சர்க்கரை அளவு மிக எளிதில் குறைவதாகச் சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

உங்கள் வீட்டில் கோவைக்கொடி இருந்தால் அதன் வேரில் இருக்கும் கோவைக் கிழங்கை

எடுத்துக் கிழங்கு போன்ற பகுதியை எடுத்துச் சமைத்துச் சாப்பிட்டால் சர்க்கரை வியாதியால் வரக்கூடிய குத்தல், வலி போன்றவை குறையும். இந்தக் கிழங்கை ஜூஸ் செய்து காலை, மாலை இருவேளையும் ஒரு 20 மி.லி குடித்துவந்தால்

மூட்டுகளில் ஏற்படக்கூடிய வலி குறையும். சிலருக்குச் சிறுநீர் வெளியேறாமல் நீர்க்கட்டு இருக்கும்போது கோவைக் கிழங்கு அல்லது கோவைக் கொடியின் தண்டை, சாறு பிழிந்து கொடுத்தால் உடனே சிறுநீர் வெளியேறும். கோவைக்காயை வற்றல் போலச் செய்து சாப்பிட்டால் முதியோருக்கு ஏற்படும் உணவின் சுவையின்மை நீங்கும். கோவைக்காய், நாவின் சுவையை மேம்படுத்தும். சிலருக்கு உடலில் வியர்வையே ஏற்படாது, அவர்களுக்குக் கோவை இலையை அரைத்துப் பூசினால் உடலில் வியர்வை ஏற்படும்.

**பின்குறிப்பு - தாங்கள் எடுக்கும் சர்க்கரை வியாதிக்கான மருந்தை எப்போதும்போல் எடுத்துக்கொண்டு, அதனுடன் தினமும் கோவைக்காயை இருவேளை சாப்பிட்டு வந்தால் ரத்தச் சர்க்கரையின் அளவு கட்டுக்குள் இருக்கும்.**

**- நன்றி முதுமை எனும் பூங்காற்று**

# சிறுநீரகப் பாதுகாப்பிற்கு...

**நமது** உடலைச் 'சுத்தமாக' வைத்திருக்கும் சிறுநீரகத்தைப் 'பத்திரமாகப் பாதுகாப்பது நமது கடமை அல்லவா. அதற்கு இதோ சில எளிய வழிமுறைகள்...

நீரிழிவு நோய், உயர் ரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்குத் தக்க சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மருத்துவரின் ஆலோசனையின்றி வலி நிவாரணி மாத்திரைகளைத் தொடர்ந்து எடுத்துக்கொள்ளக் கூடாது.

தண்ணீர் அதிகம் பருக வேண்டும். முதியோர்கள் ஒருநாளைக்கு 2 - 3 லிட்டர் நீர் அருந்த வேண்டும். முதுமையில் தாக உணர்ச்சி சற்றுக் குறையும். தாகம் இல்லாமல் இருப்பினும், நிறைய தண்ணீர் அருந்த வேண்டும். இதய நோயாளிகள் மற்றும் சிறநீரகத் தொல்லை உள்ளவர்கள் மருத்துவரின் ஆலோசனைப்படி தண்ணீரை எடுத்துக் கொள்ளலாம்.

உப்பின் அளவைக் குறைக்க வேண்டும். நமது உணவில் சராசரியாக 10 முதல் 15 கிராம் உப்பைச் சேர்த்துக்கொள்கிறோம். உலக சுகாதார நிறுவனம் உப்பின் அளவு ஒருநாளைக்கு 5 கிராம் போதும் என்று அறிவித்துள்ளது. நமது உணவில் உப்பு அதிகமாகவே உள்ளது.

நம் உணவில் பாதிக்கு மேலே உப்பின் அளவைக் குறைத்தாலே (அதாவது 4-5 கிராம் உப்பு) சிறுநீரகம் பல ஆண்டுகள் பழுதின்றி உழைக்கும். உப்பு அதிகம் சேர்த்த உணவைத் தவிர்க்க வேண்டும்.



சிறுநீரில் நோய்த் தொற்று ஏற்பட்டால் காலம் தாழ்த்தாது சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும்.

சிறுநீர் தாரையில் அடைப்பு போன்ற தொல்லைகள் ஏதும் இருப்பின் (உதாரணம்: சிறுநீரகம் மற்றும் சிறுநீர் தாரையில் இருக்கும் கட்டிகள், கற்கள், புராஸ்டேட் சுரப்பியின் வீக்கம்) அவை நாளடைவில் சிறுநீரகத்தைச் செயலிழக்கச் செய்யும். காலம் தாழ்த்தாமல் சிறுநீரக அறுவை சிகிச்சை நிபுணரின் ஆலோசனை பெற வேண்டும். புகையிலையை நிறுத்த வேண்டும். மது அருந்துவதைத் தவிர்க்க வேண்டும். தினமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

ஆண்டுக்கு ஒருமுறை முழு உடல் பரிசோதனை செய்யும்போது சிறுநீரகம் சார்ந்த பரிசோதனைகளை (ரத்தத்தில் யூரியா, க்ரியாடினின், சிறுநீரில் புரதம்) அவசியம் செய்துகொள்ள வேண்டும்.

**- நன்றி முதுமை எனும் பூங்காற்று**



vaigarai velicham official

# எதில் வெற்றி?

நம்முடைய வாழ்வின் வெற்றி எதில் உள்ளது என்பதை சரியான புரிதல் இல்லாத பெரும்பாலான மக்கள் தங்களுடைய வெற்றிக்காக தன் மனோ இச்சை எதன் பின்னே ஓடச் சொல்கிறதோ அதன் பின்னே நிற்காமல் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக இரண்டு விஷயங்கள் பின்னே கண்மூடித் தனமாக ஓடுகிறார்கள். அதில் ஒன்று செல்வம். இன்னொன்று ஆட்சி அதிகாரம் இதை அடைவதற்கு, தக்க வைத்துக் கொள்வதற்கும் எந்தப் பாவமான செயல்களை செய்வதற்கும் மறக்கவும், எதிர்க்கவும் தயாராக உள்ளார்கள். அல்லாஹ் திருமறையில் காரூன் என்ற செல்வந்தனை பற்றி கூறுகிறான்.

"காரூன் (என்பவன்) மூஸாவுடைய சமுதாயத்தில் உள்ளவனாக இருந்தான். எனினும் அவர்கள் மீது அவன் அநியாயங்கள் செய்யத் தலைப்பட்டான், ஏராளமான பொக்கிஷங்களை நாம் அவனுக்குக் கொடுத்திருந்தோம். அவற்றின் சாவீகளை மாத்திரம் பலசாலிகளான எத்தனையோ பேர்கள் மிக்க சிரமத்தோடு சுமக்க வேண்டியிருந்தது. (இத்தகைய நிலையில் அவனை நோக்கி) அவனுடைய மக்கள் நீ (கர்வத்துடன்) மகிழ்ச்சி அடையாதே (கர்வம் கொண்டு) மகிழ்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் விரும்புவதில்லை என்றும்,

(உன்னிடம் இருக்கும்) பொருள்களை எல்லாம் அல்லாஹ்வே உனக்குக் கொடுத்தான். ஆகவே அல்லாஹ் உனக்கு கொடுத்திருப்பதில் (தானம் செய்து) மறுமை வீட்டைத் தேடிக் கொள். இம்மையில் (தானம் செய்து நீ தேடிக் கொண்டதுதான்) உன் பாகம் என்பதை நீ மறந்து விடாதே. அல்லாஹ் உனக்கு(க் கொண்டு பிறருக்கு) நீயும் (தானம் செய்து) உதவி செய். பூமியில் நீ விஷமம் செய்ய விரும்பாதே. ஏனெனில் விஷமிகளை நிச்சயமாக அல்லாஹ் விரும்புவதில்லை என்றும் கூறினார்கள். (அல்கஸஸ் : 76,77)

அவன் (ஒருநாள் மிக்க ஆடம்பரமான) தன் மக்கள் முன் சென்றான் (அதைக் கண்ணுற்றவர்களில்) எவர்கள் இவ்வுலக வாழ்க்கையை (பெரிதென) விரும்பியவர்களாக இருந்தார்களோ அவர்கள் காரூனுக்கு கொடுக்கப்பட்டது போன்று நமக்கும் கொடுக்கப் பட வேண்டுமே நிச்சயமாக அவன் பெரும் பாக்கியவான் என்று கூறினார்கள்.

எனினும் இவர்களில் எவர்களுக்கு மெய்யான ஞானம் கொடுக்கப்பட்டிருந்ததோ அவர்கள் (மற்றவர்களை நோக்கி) உங்களுக்கு என்ன கேடு? (இவ்வாறு ஏன் கூறுகிறீர்கள்) நம்பிக்கைக் கொண்டு நற்செயல்கள் செய்தவர்களுக்கு (மறுமையில்) அல்லாஹ் கொடுக்கும் கூலியோ (இதைவிட) எவ்வளவோ மேலானது. அதைப் பொறுமையாளர்களைத் தவிர (மற்ற எவரும்) அடைய மாட்டார்கள் என்று கூறினார்கள்.

அவனையும் அவனுடைய மாளிகையையும் பூமியில் சொருகிவிட்டோம். அல்லாஹ்வையன்றி அவனுக்கு உதவி செய்யக்கூடிய கூட்டத்தார் ஒருவரும் அவனுக்கு இருக்கவில்லை. அல்லது அவன் தன்னைத்தானே (அல்லாஹ்வின் பிடியிலிருந்து காப்பாற்றிக்கொள்ளவும் முடியவில்லை. (அல்கஸஸ் : 79,80,11)

கொடுங்கோல் ஆட்சியாளன் ஃபிர்அவ்ன் தனக்கு கொடுக்கப்பட்ட ஆட்சி அதிகாரத்தின் ஆணவத்தின் உச்சத்தில் இருந்தவன். நாட்டின் மக்களிடையே பிரிவினை ஏற்படுத்தி உயர்ந்தவர், தாழ்ந்தவர் என மக்களை அடிமைப்படுத்தினான். ஒரு குறிப்பிட்ட மக்களை கொடுமைப்படுத்தினான். தன்னை கேள்வி கேட்கவோ, தண்டிக்கவோ யாரும் இல்லை என்கின்ற ஆணவத்தில் இருந்தான். இன்னும் தன்னையே கடவுள் எனப் பிரகடனப் படுத்தினான். ஒரு கட்டத்தில் ஃபிர்அவ்னிடமிருந்து இந்த மக்களை பாதுகாக்க மூஸா (நபி) அவர்கள் அம்மக்களை அந்நாட்டிலிருந்து வேறு இடத்திற்கு அழைத்துச் சென்றார். இதை அறிந்த ஃபிர்அவ்ன் அம்மக்களை அழிப்பதற்காக தன் படைப் பலத்துடன் ஃபிர்அவ்ன் அவர்களை நெருங்கினான். ஆனால் அல்லாஹ் ஃபிர்அவ்வையும் அவனின் படையையும் தண்ணீரில் மூழ்கடித்தான்.

நிச்சயமாக நம் வாழ்வின் வெற்றி என்பது செல்வத்தை சேகரிப்பதாலோ ஆட்சி அதிகாரத்தில் நிலைத்திருப்பதிலோ அல்ல. மாறாக, நாம் எந்த நிலையில் இருந்தாலும் அல்லாஹ்விற்கும் அவனுடைய கட்டளைகளுக்கும் முழுமையாக கட்டுப்பட்டு வாழ்வதில்தான் உள்ளது.

எவர் தனது இரட்சகன் முன்னால் நிறுத்தப்படுவதை அஞ்சி மனோ இச்சையை விட்டும் உள்ளத்தை தடுத்துக் கொள்கின்றாரோ நிச்சயமாக அவர் தங்குமிடம் சுவனமாகும்.

(அந்நாஸி ஆத் : 40,42)








Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002